மலர்-4. தமிழரசு இதழ்-24.

16 - 6 -1974

# இலக்கியத் தமிழில் எளிமை வேண்டும்!

முதல்வர் கலைஞர்

கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பெங்களூர் நகரத்தில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வரும் இந்தத் தமிழ்ச்சங்கம் என்னை அழைத்து வரவழைத்துப் பாராட்டிப் பட்டமும் சூட்டிப் போற்றியமைக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு என்னை அதிகமாகப் புகழ்ந்து பாராட்டியிருக்கிறீர்கள். இது எதைக் காட்டுகிறது? இந்தப் பாராட்டுகள் எல்லாம் -என்னை 'அதற்குத் தகுதியுள்ளவனாக ஆக்கிக் கொள்' என்று ஊக்கப்படுத்துவதற்காகத்தான் வழங்கியிருக்கிறீர்கள் என்று தான் நான் எடுத்துக் கொள்கிறேனே அல்லாமல், 'ஆகா! இவ்வளவு சிறப்புக்கு உரியவனாக இருக்கின்றேனா' என்கின்ற அகந்தையும் ஆணவமும் என்னை ஆட்கொள்ளவில்லை. இதுவரையிலும் என்னை ஆட்கொண்டதும் இல்லை; இனி ஆட்கொள்ளப் போவதுமில்லை என்பதை மிகுந்த அடக்க உணர்ச்சியோடு அண்ணாவின் வழியில் நின்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ் மொழியை வளர்த்திடவும் அதனுடைய வல்லமையை உலகெங்கிலும் உணர்த்திடவும் ஆன பணிகளில் அந்த மொழி பேசுகின்ற மக்கள் ஈடுபடுவது இன்று நேற்றல்ல, நீண்ட நெடுங்காலமாக நம்முடைய நாட்டில் நடைபெற்று வருகின்ற வரலாறாகும்.

அந்த வரலாறு எத்தகைய எல்லைகளைக் கொண்டது என்கின்ற ஆராய்ச்சிக்கு இப்போது போகத் தேவையில்லை. தமிழ் மக்களுக்கு உரிய மாநிலத்தினுடைய எல்லைக்கு ஒரு வரையறை குறிக்கப்பட்டிருந்தாலும் தமிழ்மொழிக்கு அந்த வரையறை இல்லை என்பதை எடுத்துக் காட்டத்தான் பெங்களூரில் - பம்பாயில் - கல்கத்தாவில்-லண்டன் மாநகரில் தமிழ்ச் சங்கங்கள் இருக்கின்றன. பாரீஸ் மாநகரத்திலும் தமிழ்மாநாடு நடைபெறுகிறது —இலங்கையிலும் தமிழ் மாநாடு நடைபெறுகிறது, என்கின்ற சூழ்நிலைகளையெல்லாம் இன்றைக்குக் காணுகின்றோம்.

ஆகவே, தமிழர்கள் கடல் கடந்து சென்றாலும், மாநிலம் விட்டு மாநிலம் சென்றாலும், தங்களுடைய மொழியை அவர்கள் மறக்காமல் இருக்கிறார்கள் என்று அறியும்போது நாம் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறோம். அதே நேரத்தில் அவர்கள் சென்றிருக்கிற மாநிலத்தின் மொழிக்கு மரியாதை தருவதிலும் அந்த மாநில மக்களோடு நட்புறவு கொள்வதிலும் தமிழர்கள் தலைசிறந்து விளங்குகிறார்கள் என்பதை நான் சொல்லத் தேவையில்லை.

தமிழனுக்கு உரிய தனிப் பண்புகளில் அடக்கமாக நடந்து கொள்வது என்பதும் ஒன்றாகும். அடக்கம் என்பது கோழைத்தனத்தின் அறிகுறியல்ல, வீரத்தினுடைய உச்சக் கட்டம் அடக்கம். புகழின் விரிவாக்கம் அடக்கம்!

அந்த வகையிலே தமிழ் வழங்கியிருக்கின்ற அடக்க உணர்வினை நம்மவர் பெற்று, நாட்டின் எந்தப் பகுதியில் எந்த மூலையிலே அவர்கள் இருந்தாலும் தமிழ்ப் பண்பாட்டை அவர்கள் மறக்காமல் இருக்கிறார்கள் என்பதற்காக அவர்களை நான் பாராட்டுகின்றேன்.

அந்த வகையில் கர்நாடக நாட்டில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழ் மக்கள் தமிழ் வளர இந்த மாநில மக்களோடு ஒன்றாயிருந்து நட்புறவு கொண்டு மாநில நலன்களுக்குத் தாங்களும் பாடுபட இதுபோன்ற தமிழ்ச் சங்கங்கள் பயன்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

காலையிலே என்னை இந்தச் சங்கத்தவர்கள் சந்தித்தபோது இந்தச் சங்கத்தின் பல்லாண்டுக் கால நிகழ்ச்சிகள்—நடைமுறை

கள்-அவர்கள் ஆற்றியிருக்கும் பணிகள்-உரைகள் இவைகள் பற்றிய தொகுப்புக்களையெல்லாம் என்னிடம் எடுத்துக் காட்டினார்கள். அவைகளை ஊன்றிக் கவனித்தேன். ஒன்றிரண்டை உள்ளத்திலே பதிய வைத்துக் கொண்டேன்.

தமிழ்ச் சங்கத்தினுடைய பண்பு எவை எவை என்று சங்கத் தலைவர் அவர்கள் மிக அழகாகக் கோடிட்டுக் காட்டினார்கள். இன்று புதிய கட்டடத்துக்கால அடிக்கல் நாட்டு விழா இங்கு நடந்தது. அடிக்கல் நாட்டாமல் கட்டடம் எழும்பியிருந்தும் என் பெயரும் இருக்க வேண்டும் என்று தமிழர்களாகிய நீங்கள் இந்தத் தமிழ்ச் சங்கத்தின் கட்டடத்துக்கு ஒரு தமிழன்தான் அடிக்கல் நாட்ட வேண்டும் என்று எண்ணி, அது ஒரு சம்பிரதாயமாக இருந்தாலும் பரவாயில்லை என்று என்னை அழைத்து, அடிக்கல் நாட்ட வைத்திருக்கிறீர்கள். ஒரு வேளை இது எந்தக் கோரிக்கைக்கு அடிக்கல்லோ என்று எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் இந்த அடிக்கல் நாட்டு விழா மூலம் எழும்ப இருக்கின்ற கட்டடத்தில் நூலகம், படிப்பகம் போன்ற மிக இன்றியமையாத இடங்கள் அமைவதைக் கண்டு மெத்த மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்ச் சங்கம் ஆற்றுகிற தலையாய தொண்டு, அது தமிழ் மொழியை வளர்க்கிறதோ, இல்லையோ, தமிழ் நூல்களைப் பரப்புகிறதோ இல்லையோ - அது வெளி மாநிலங்களிலே இருக்கின்ற தமிழர்களை ஒன்று படுத்துகிறது என்பது மிக மிகப் பெருமையான காரியமாகும்.

ஏன் தமிழர்கள் நிறைவாக இருக்கும் போது ஒற்றுமையாக இல்லையா என்றால், ஒருவேளை குறைவாக இருக்கும்போது தான் தமிழர்கள் ஒற்றுமை பலப்படுவதைக் காணும்போது நான் பேருவகை அடைந்தேன்.

தமிழை வளர்க்கின்ற பணி இன்றைக்குத் தமிழகத்திலும் நடக்கிறது. தமிழை வளர்ப்பதா? அது வளர்ந்த மொழியல்லவா? என்ற கேள்வியும் இன்று எழாமல் இல்லை. எந்த மொழியையும் வளர்ந்துவிட்ட மொழி என்று விட்டுவிட இயலாது. காலத்திற்கேற்ப விஞ்ஞானப் புதுமைகள் உருவாக உருவாக, அவைகளுக்கேற்பச் சொற்கள் படைக்கப்பட வேண்டும். அப்படிச் சொற்களைப் படைக்காமலேயே, 'தமிழ், வளர்ந்த மொழி' என்று கூறிக்கொண்டு இருப்பதில் பயனில்லை.

''தினமணி கதிர்'' ஆசிரியர் நண்பர் சாவி இங்கு வந்திருக்கிறார்கள். அவர் எனது பிறந்த நாளையொட்டி 50 கேள்விகள் அனுப்பி அதற்குப் பதிலைக் கேட்டு அனுப்பியிருந்தார்கள். 'தமிழில் எல்லாம் இருக்கிறது என்று சொல்லுகிறார்களே அது பற்றி உங்கள் கருத்தென்ன?' என்று அவர்கள் கேட்டிருந்த கேள்விக்கு நான் எழுதி அனுப்பிய பதிலிலே குறிப்பிட்டிருக்கிறேன்; 'தமிழில் எல்லாம் இருக்கிறது என்று சொல்வது ஏனென்றால், சிலபேர் நமது தமிழில் எதுவுமே இல்லை என்று சொல்கிறார்கள். இது அதைவிட ஆயிரம் மடங்கு மேலானது.

இன்றைக்கு விஞ்ஞானச் சொல்லாக உலகெங்கும் விரிவடைந்திருக்கிற 'ஆட்டம்' என்பதற்கு அணு என்ற சொல் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தமிழிலே வழங்கப்பட்டிருக்கிறது.

திருக்குறளைப் பற்றிப் பாடிய ஒரு புலவர் 'கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்' என்று பாடியிருந்தார். அதற்கு மாறாகப் பாடிய ஔவை-கடுகைத் துளைத்து அல்ல -அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்' என்று பாடியதிலிருந்தே அணுவைப் பற்றிய அறிவு - பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்திலே இருந்திருக்கிறது என்பது தெளிவாகிறது.

ஆனால், தமிழர்களுக்குள்ள குறைபாடு ஏதாவது ஒன்று நடந்தால் ஏற்கெனவே இது இங்கே இருந்தது என்று மன நிம்மதி அடைவதைத் தவிர நாமே இன்றைக் கண்டுபிடித்தோம்-உருவாக்கினோம் உலகத்திற்கு அறிமுகப்படுத்தினோம் என்று அறிவிப்பதற்கேற்ப ஆர்வத்தைக் காட்டுவதில்லை.

அதற்குப் பதிலாக, விமானம் பறக்கிறதா, அது இராமாயண காலத்திலேயே பறந்தது-இராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு பறந்தபோது விமானத்திலே தான் பறந்தான். சீவக சிந்தாமணியிலே மயில் பொறி பறக்கவில்லையா, என்கிறார்கள்.

பயங்கரமான குண்டுகளைக் கண்டுபிடித்தால், உடனே 'இவையெல்லாம் நமது தஞ்சையிலுள்ள சரஸ்வதி மகால் நூலகத்திலுள்ள சமஸ்கிருத ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கருத்துக்களைக் கொண்டு செய்யப்பட்டவை. வெள்ளைக்காரன் அவற்றைத திருடிக் கொண்டு போய்த் தான் கண்டு பிடித்தான்'' என்கிறார்கள்.

> **திருக்குறளுக்கும் மற்ற தமிழ் இலக்கியங்களுக்கும் ஒரு துறை தனியாக உள்ளது போல இசுலாமிய தமிழ் ஆராய்ச்சிக்குத் தனித்துறை அமையத் தமிழகப் பல்கலைக் கழகங்களில் ஒன்றுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்படும். அரசு, முதலிலே அடையாள மானியமாகப் பத்தாயிரம் ரூபாயை அதற்காக ஒதுக்கும்.**
>
> **—முதல்வர் கலைஞர்**
>
> **(இசுலாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில்)**



திருடிக்கொண்டு போகும் வரை சும்மா இருந்ததும் ஏமாளித்தனம்; மற்றவர்கள் கவனிப்பதற்கு முன்பு நாம் அதுபற்றிக் கவனிக்காமல் இருந்தது அதைவிட ஏமாளித்தனம்-அக்கறையற்ற தன்மை-இவைகளையெல்லாம் தமிழர்கள் உணர்ந்தாக வேண்டும்.

தமிழிலே இருக்கிற இலக்கியச் சிறப்பு வேறு மொழிகளிலே இருக்கிறதா என்கிற சந்தேகம் எனக்குண்டு! மற்ற மொழிகளை எல்லாம் அந்த அளவுக்குப் படிக்காதவன் என்றாலும் படித்தறிந்த பாரதி சொல்கிறான்! 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாரதி சொல்கிறான்.

அந்த இனிதான மொழி-இலக்கியமொழி-காவிய நயம் மிகுந்த மொழி தொன்மைச் சிறப்பு வாய்ந்த மொழி, தமிழ் மொழியாகும்.

தமிழ்மொழியின் சிறப்பைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் கன்னட மொழியைப் பற்றிக் கூறிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கண்டு நிகர் கன்னடம்-என்று 'கற்கண்டுக்கு நிகராகக் கன்னட மொழி' என்று குறிப்பிடுகிறார்.

ஆகவே ஒவ்வொரு மொழியும் ஒவ்வொரு வகையிலே சிறப்புடைய மொழிதான். ஒவ்வொரு மொழியின் வளமும் அந்த மொழியைக் கையாளுகின்ற சிறப்பும் அதிலிருக்கின்ற நயங்களைப் பற்றியும் கூறுகின்றோம். மொழி வளர்ந்துவிட்ட காலத்திலே இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறோம். நிலவில் மனிதன் உலவும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

எங்கோ யாரோ பாடுகிறார்கள், இசைக்கருவியை மீட்டுகிறார்கள் என்றால் நம்முடைய கையிலே இருக்கின்ற சிறிய வானொலிப் பெட்டியில் ஒரு நூல் இழை அசைத்தால் இலண்டனிலிருந்தும், இன்னொரு நூலிழை அசைத்தால் இலங்கையிலிருந்தும் கேட்கிறோம்; அப்படிப்பட்ட விஞ்ஞானப் புதுமைகள் வளர்ந்திருக்கின்ற காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அப்படிப்பட்ட நிலையில் தமிழ் மொழியிலுள்ள சொற்களை வைத்துக் கொண்டு விளையாடுகிறோம் - சொல்லாடல் நடத்துகிறோம். சொல்நயமும் கவிநயமும் கூறுகிறோம்.

இவைகளெல்லாம் மொழி வளர்ந்து வளர்ந்து நாகரிகம் கலாச்சாரம் பண்பாடுகளெல்லாம் வளர்ந்துவிட்ட நிலையில் இப்படியெல்லாம் நயம்பட உரைப்பது எளிதாக இருக்கின்றது. ஆனால் ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு -பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கவிதை புனைந்த நம்முடைய புலவர்கள் எவ்வளவு அற்புதங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

'குறுந்தொகை' என்ற நூலை அண்மையில் உதகைக்குச் சென்றபோதும் படித்தேன்.

அதிலே படித்த ஒரு பாடலைப் பற்றிக் கோவைக் கூட்டத்தில் நான் அரசியலுக்காகப் பயன்படுத்திப் பேசி இருக்கிறேன்.

இன்று இந்தியாவிலுள்ள மாநில முதல்வர்கள் எல்லாம் எப்படி இருக்கிறார்கள்?

குறுந்தொகையிலே இருக்கிற ஓர் உதாரணத்தை வைத்துச் சொன்னேன்.

கையில்லா ஊமையன்; பாறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட வெண்ணெய் வெய்யிலில் உருகும்போது அந்தக் கையில்லா ஊமையன் வெண்ணெய் வழிந்தோடுவதைத் தடுக்கவும் முடியாமல் அது பற்றி எடுத்துச் சொல்ல வழியுமில்லாமல் எப்படித் தவிக்கிறானோ அப்படி மாநில மக்கள் கஷ்டப்படுகிற நேரத்தில் முதலமைச்சர்கள் அதிகாரமில்லாமல் கையில்லா ஊமையன் நிலையில் இருப்பதற்குக் குறுந்தொகைப் பாடலை உதாரணமாகக் கூறினேன்.

அதே குறுந்தொகையில் எவ்வளவு அழகான உவமைகள் கூறப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால்.......!

ஒரு காதலி, காதலன் தன்னைப் பிரிந்துவிட்ட காரணத்தால் தூண்டிலிலிருந்து கரையில் வீழ்த்தப்பட்டுத் துடிக்கின்ற மீனைப்போல் துடிப்பதாக ஒரே வரியில் சொல்லி இருக்கலாம்.

ஆனால் புலவன் அந்த மீன் கரையில் துடிப்பதைப் பற்றி எவ்வளவு அழகான உவமையோடு பொருத்துகிறான் என்று பார்க்க வேண்டும்.

காட்டு யானையொன்று உயர்ந்து நிற்கின்ற மூங்கில் காட்டில் இளம் மூங்கிலைப் பிடித்து அசைத்துத் தன்னுடைய துதிக்கையால் சுழற்றுகிறதாம். அப்போது அந்தக் கானகத்து வேடர், யானையை விரட்ட கவண் கல்லெறிகின்றனர். அந்தக் கவண் கல், யானையின் மீது பட்டதும் யானை தன்னுடைய துதிக்கையில் பிடித்த இளம் மூங்கில் நுனியை விட்டுவிடுகிறது. அந்த மூங்கில் நுனி எப்படி வளைகிறது என்றால் தூண்டிலில் மீன் அகப்பட்டதும் அதை வேகமாக இழுக்கும்போது அது எப்படித் தரையில்போகிறதோ அதுபோல், அந்த மூங்கில் தரையில் வேகமாக விழுந்தது என்கிறான். எவ்வளவு அழகான உவமை!

'கலித்தொகை'யில் ஒரு பாடல்; அதை ஒப்பிட்டுக் காட்ட வேண்டும் உங்களுக்கு?!

''சாகுந்தலத்தி'லே காளிதாசன் கோடையின் கொடுமையைப் பற்றிக் குறிப்பிடுகிறான்.

கோடை வெய்யில்-வயல்களெல்லாம் வெடித்துக் கிடக்கின்றன. ஒரே பொட்டல் காடாக இருக்கிறது. எங்கும் ஊர்ந்து செல்ல முடியாமல் தன்னுடைய வால் நுனியை மாத்திரம் பூமியிலே ஊன்றிக்

தமிழ்க்காவலர்' என்னும் பட்டத்தைப் பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்திடமிருந்து முதல்வர் பெறுகிறார்



கொண்டு தாங்க முடியாத ஆயாசத்தோடு தன் தலையை மாத்திரம் தூக்கிக்கொண்டு படமெடுத்து நிற்கிறதாம் ஒரு பாம்பு! அந்த அளவுக்கு வெய்யிலின் கொடுமை! நிழலே கிடைக்காமல் தவித்த ஒரு தவளை-அது பாம்பின் நிழலென்று கூடப் பாராது பாம்பின் தலை நிழலில் அந்தத் தவளை உட்கார்ந்திருக்கிறதாம்.

வெய்யிலின் கொடுமையால் தவளைக்கும் பாம்பின் ஆபத்துத் தெரியவில்லை; அந்தப் பாம்புக்கும் தன் இரை கீழே இருக்கிறது என்பது தெரியவில்லை. அந்த அளவுக்கு வெய்யிலின் கொடுமை!

அதற்கு ஈடாக—அதைவிட ஒருபடி மேலாகக் கலித்தொகையில் ஒருபுலவன் பாடுகின்றான்:

''இன்னிழல் இன்மையால்
வருந்திய மடப்பிணைக்கு
தன்னிழல் கொடுத்ததே கலை'

—பாலைவனத்தில் இனிய நிழலில்லாத காரணத்தால் பெண்மான் வருந்தும்போது ஆண்மான் என்ன செய்கிறதாம்? தன்னிழல் கொடுத்ததாம்! வெய்யிலில் தான் வருந்தும் போதும் தன் மனைவியான பெண்மான் படுத்துறங்கத் தன்னுடைய நிழலைக் கொடுத்தது என்று பாடுகிறான்-இது கலித்தொகையிலே வருகின்ற கோடைக்காலக் காட்சி!

தமிழ்ச் சங்கத்தின் மாடியிலே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உருவப்படம் மாட்டப்பட்டிருப்பதைப் பார்த்தேன். திருவள்ளுவரின் திருவுருவப் படத்தையும் பார்த்தேன். இந்த இருவரையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது திருக்குறளுக்குக் கடைசியாக எழுதிய பாரதிதாசன் உரை எனக்கு ஞாபகத்திற்கு வந்தது! 'தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' என்ற குறளுக்கு அருமையான உரை எழுதுகிறார்.

''தெய்வத்தைக் கூடத் தொழாமல் தன்னுடைய கணவனையே தொழுகின்ற பெண் இருக்கிறாளே அவள் பெய் என்று சொன்னால் உடனே மழை பெய்யும்.''—இதுதான் இதுவரை திருக்குறளுக்கு உரை எழுதிய எல்லா ஆசிரியர்களும் தந்திருக்கின்ற விளக்கமாகும்.

அந்தக் கருத்து சரி என்றால் திருவள்ளுவர் குற்றவாளியாகிறார்—அல்லது திருவள்ளுவர் குறைக்கு ஆளாகிறார் அல்லது பெண்களால் எதிர்க்கப்படுவார்.

அதைத்தான் பாரதிதாசன் அழகாகச் சொன்னார்.

'பெய்யென்று சொல்லுகிற நேரத்தில் பெய்கின்ற மழையைப் போன்றவள்-தேவையான நேரத்தில் மழை பெய்ய வேண்டும் என்று கருதுகிற நேரத்தில் மழை பொழிந்தால் அந்த மழை எவ்வளவு சிலாக்கியமானதோ அப்படிப்பட்டவள் கணவனைத் தொழுது வணங்கும் பெண்' என்று பாரதிதாசன் கூறினார்.

குறளுக்கு இதுவரை உரை எழுதிய பலரும் எத்தனையோ தவறுகளைச் செய்திருக்கிறார்கள்.

திருவள்ளுவரின் சரியான கருத்துக்கு அவர் ஏற்றுக்கொள்ளாத கருத்துக்கு வேறு ஒரு குறளால் மறுக்கப்படும் கருத்துக்களை உரையாக எழுதி வைத்திருக்கிறார்கள்.

ஆட்சி சரியாக நடைபெறாவிட்டால் பசுமாடே பால் கொடுக்காது-இப்படி ஓர் உரை!

ஆபயன் குன்றும்
அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்

—காவலன் சரியாக ஆட்சி நடத்தாவிட்டால் பசுமாடு பால்கறக்காது — ஆலைகளிலே தொழில்கள் செய்வோர் அந்தத் தொழிலை மறந்து விடுவார்கள் என்று சொல்கிறார்கள்.

நான் கேட்கிறேன், இட்லர் ஆண்டு கொண்டிருந்தபோது ஜெர்மனியிலிருந்து பசுக்களெல்லாம் பால் கொடுக்கவில்லையா? தவறான ஆட்சி நடக்கிற இடங்களிலெல்லாம் பசுமாடு பால் கறப்பதில்லையா?

'ஆபயன்' என்றால் பசுமாட்டினால் விளையும் பயன் என்று பொருளல்ல! அப்படியானால், 'ஆப்பயன்' என்ற சொல் வந்திருக்க வேண்டும். ஆபயன் என்றால் ஆகவேண்டிய காரியங்கள் என்றுதான் பொருள். ஆகவே, ஆக வேண்டிய காரியங்கள் ஆகாது என்பது தான் சரியான உரை விளக்கம்! இதைப் பாரதிதாசன் விளக்கியிருக்கிறார்.

அப்படி குறட்சிறப்பையும் மற்ற இலக்கியங்களின் சிறப்பையும் கொண்டது தமிழ் மொழி. அப்படிப்பட்ட தமிழ் மொழி எளியோரிடத்திலும் பாமரர்களிடத்திலும் பரவாமலிருப்பதற்கு என்ன காரணம்?

அன்றைக்கு இருந்த தமிழ் இன்று அகராதி வைத்துப் புரிந்து கொள்ள வேண்டிய நிலைமையிலிருக்கிறது.

புறநானூற்றுப் பாடல்களைப் படித்து அப்படியே புரிந்து கொள்ள முடியுமா? முடியவில்லை. ஏன்? பாமர மக்கள் புரிந்து கொள்ளும் எளிய நடையில் புறநானூற்றுப் பாடல்களைக் கவிதையாக வடித்துத் தந்திருக்கிறேன். இப்படி இலக்கியங்கள் எளிமைப்படுத்தப்பட வேண்டும். அந்த முயற்சியில் தமிழின்பால் ஆர்வம் கொண்ட அனைவரும் ஈடுபட்டாக வேண்டும்.

அப்படி எளிமைப்படுத்தப் பட்டால்தான் தமிழன் பழங் காலப் பெருமை – தமிழர்களின் வரலாற்றுப் பெருமை இவைகளெல்லாம் உலகுக்கு அறிவிக்கப்பட முடியும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிபீடத்திலே அமர வேண்டும் என்று விரும்பியதற்குக் காரணமே தமிழ் மரபு காத்திட-பண்பாடு செழித்திட,தமிழ்-மரபு மங்காமல்,மறையாமல்,ஒளிக்கப்படாமல் மீண்டும் உருவாக்கிட!

அந்தக் கருத்தைச் செயல்படுத்தும் விதத்திலேதான் காவிரிப்பூம்பட்டினத்தில் புதிய பூம்புகாரைத் தமிழக அரசு உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

சென்னைப் பெருநகரில் செந்நாப்போதார் திருவள்ளுவருக்குப் பல இலட்சம் ரூபாய் செலவில் ஆலயமொன்றைக் கட்டிக் கொண்டிருக்கிறது.

இப்படியெல்லாம் தமிழுக்காகப் பாடுபட்டு வரும் தமிழக அரசின் பொறுப்பேற்றுள்ள எளியவனை இந்தத் தமிழ்ச் சங்கத்தினர் அழைத்து தூக்க முடியாத சுமையாகத் 'தமிழ்க் காவலர்' என்ற பட்டத்தை வழங்கி என்னைக் கவுரவித்துள்ள அத்தனை பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(30—5—74 அன்று பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.)**



# ஊனமுற்றோர் உயர்வாழ்வு விழா!

குமரன்

**த**மிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் 51-வது பிறந்த நாளையொட்டித் தென்னகமெங்கும் 'பொன்விழா' ஜூன் 3-ஆம் நாள் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது.

தமிழகமெங்கும் பல்வேறு இடங்களில் ஏழைகளுக்கு உணவும், இனிப்புகளும் வழங்கப்பட்டன. தமிழக மக்களுக்கு விடுத்த இனிப்பான தமது பிறந்த நாள் செய்தியில் முதல்வர் கலைஞர் அவர்கள் கூறினார்கள்:

''என் வாழ்க்கையில் ஐம்பதாண்டுகள் உருண்டோடி விட்டன. இந்த ஐம்பதில் ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்நாட்டு மக்களோடும் அவர்களுக்காகப் பணியாற்றும் கழக உடன்பிறப்புக்களோடும் அந்தக் கழகத்தின் தலைவர் ஆருயிர் அண்ணா அவர்களோடும் அந்தத் தலைவர்க்குத் தலைவர் அருமைத் தந்தை பெரியார் அவர்களோடும் என்னைப் பிணைத்துக் கொண்டு பயணத்தை நடத்தி விட்டேன். இலட்சியப் பயணம் தொடர்கிறது.

''புயலுக்கிடையே கலம் செலுத்துவதில் மாலுமி ஒருவன் காணுகின்ற பரபரப்பையும் உற்சாகத்தையும் ஒவ்வொரு நாளும் நான் என் பொது வாழ்வில் காணுகிறேன்.

''தமிழ்நாட்டு மக்களுக்காக, அவர் தம் ஒளிமிகு நல்வாழ்வுக்காக எதிர்நீச்சல் போடுவதுதான் என் நெஞ்சுக்குச்சுகமாக இருக்கிறது. இந்த உணர்வுடனேயே நான் தொடர்ந்து பணியாற்றுவதற்குத் தமிழ்நாட்டு மக்களின் தாயுள்ளம் எனக்குத் துணை நிற்கும் என்று நம்புகிறேன்.''



பார்வையற்றோர் சிலர் முதல்வருக்கு மலர்மாலை அணிவித்தார்கள்.

முதல்வர் அவர்களின் இல்லத்தில் அதிகாலை முதல் ஆயிரக்கணக்கான மக்கள் வரிசை வரிசையாக நின்றிருந்த காட்சியும், மாலைகள் மலைபோல் குவிந்ததையும், ஊனமுற்றோர்களுக்காக உதவ வந்த உள்ளங்களையும் பார்த்தபோது நம் உள்ளமெல்லாம் மகிழ்ச்சி நிறைந்தது.

முதல்வர் கலைஞர் பிறந்த நாள் பொன் விழாவையொட்டிச் சென்னையைச் சேர்ந்த செய்தியாளர்கள் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

செய்தியாளர்களிடம் முதல்வர் கலைஞர் தெரிவித்ததாவது:

"இன்று காலையில் என் தாய்-தந்தையர் படத்திற்கு மாலையிட்டபோதும், அண்ணா, பெரியார் கல்லறைகளில் மலர் வளையம் வைத்து வணங்கிய போதும் என்னையறியாமல் அழுதுவிட்டேன்.

"எனக்கு ஆறுதல் கூறி, 'தொடர்ந்து அயராமல் பணியாற்று' என்பதுபோல் என் தாயும் தந்தையும் அண்ணாவும் பெரியாரும் பல்லாயிரக்கணக்கான தமிழ்நாட்டு மக்களின் உருவத்திலே வந்து இன்று எனக்குப் பிறந்தநாள் வாழ்த்துக் கூறியிருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன்.

தாயின் பாசத்தை—

தந்தையின் அரவணைப்பை--

அண்ணனின் அன்பை—

ஆசிரியர் ஐயாவின் கண்டிப்பை—

என் பொது வாழ்வில் தொடர்ந்து கடைப்பிடிப்பேன்.

காலக்கண்ணாடியாக இருக்கின்ற பத்திரிகைகளின் தூதுவர்களாகிய உங்களின் அன்பும் இன்று போல் என்றும் நிலைத்திட வேண்டும் என்றும் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு பிறந்தநாளில் உடல் ஊனமுற்றவர்கள் ஏராளமானவர்கள் நேரில் வந்து என்னை வாழ்த்தியது மிகவும் உருக்கமாகவும்- அவர்களுக்குப் பணியாற்ற ஊக்கமளிப்பதாகவும் அமைந்தது.

இந்தப்பிறந்தநாள் விழாவையொட்டித் துவக்கப்பட்டுள்ள உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வு நிதிக்கு ஜூன் 3-ஆம் நாள்—ஒரே நாளில் ரூ. 15 இலட்சம் வசூலாகியது.

முதல்வருக்கு வாழ்த்துத் தெரிவிக்கச் சட்டமன்ற உறுப்பினர்கள், தொழிலதிபர்கள், திரைப்படத்துறைப் பிரமுகர்கள், அரசு உயர் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் அதிகாலையிலிருந்தே முதல்வரின் இல்லத்திற்கு வந்து கூடியிருந்தனர்.

நடக்க இயலாத நிலையில் உள்ள உடல் ஊனமுற்றோர் பலர் மூன்று சக்கர வண்டிகளில் வந்து முதல்வரை வணங்கி வாழ்த்துக் கூறினர். அடையாறு கிளார்க் அங்கஹீனர் பள்ளி, தேனாம்பேட்டை லிட்டில் பிளவர் கான்வென்ட், ஆந்திர மகிள சபா ஆகிய இடங்களிலிருந்து உடல் ஊனமுற்ற மாணவ, மாணவியர் வந்திருந்து முதல்வருக்கு மாலை அணிவித்தனர்.

ஆண்கள் குழந்தைகளை தோளிலும், பெண்கள் குழந்தைகளை இடுப்பிலும் ஏந்திக் கொண்டு பொறுமையாகக் காத்திருந்த நரிக் குறவர்கள், முதல்வரை வாழ்த்தி வணங்கினர். நரிக்குறவர் வகுப்பில் எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவன் ஒருவன் முதல்வருக்கு மாலை அணிவித்தான். பின்னர் முதியவர் ஒருவர், 'பிச்சைக்காரவங்களுக்கு, வாழ்வளித்த முதலமைச்சருக்கு குருவிக்காரங்க வணக்கம்' என்று கொச்சைத் தமிழில் கூறி மாலை அணிவித்தார். அதைத் தொடர்ந்து நரிக்குறவர்கள் ஒருவர்பின் ஒருவராகச் சென்று முதல்வரின் கையை முத்தமிட்டுச் சென்ற காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு நிதிக்குத் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு ஆலயங்களின் சார்பில் ரூ. 5 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. சேரன், சோழன் போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் ஒவ்வொரு இலட்ச ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. தொழிலதிபர் பொள்ளாச்சி மகாலிங்கம் ரூபாய் 50,000-ம், திரு. பி. நாகிரெட்டி ரூ. 25,000-ம் கொடுத்துள்ளனர்.

சென்னை நாராயணப்பா ரோடு பழ வியாபாரிகள் முன்னேற்றச் சங்கத்தினர் ஊர்வலமாக வந்து 51 வகையான பழங்களையும், உடல் ஊனமுற்றோர் உதவி நிதிக்கு ரூ. 1,000-ம் அளித்துத் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

பெங்களூர் தமிழ்ச் சங்கக் கட்டட நிதிக்காகத் தமது பிறந்தநாளையொட்டி முதல்வர் ரூ. 50,000 நன்கொடையளித்துள்ளார். அக்கட்டடத்தின் முதல் மாடி கட்டுமானச் செலவுக்கு இத்தொகை பயன்படும்.


தலைமைச் செயலகத்தில் முதல்வர் கலைஞரின் உருவப் படத்தை

## தலைமைச் செயலகத்தில்

"தொழுநோயால் அவதியுற்ற பிச்சைக்காரர்களுக்குத் தனி இல்லங்கள், கண்ணொளி முகாம்கள், கைரிக்ஷா இழுத்தவர்களுக்குச் சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குதல், ஊனமுற்றோர் மறுவாழ்வு-இப்படி ஆண்டுக்கு ஆண்டு கூடுதல் நன்மைகளை ஏழை எளியோருக்குச் செய்து வருவதன் மூலம் முதல்வர் அவர்களது பிறந்தநாள் மேலும் புனிதமடைகிறது.

"இந்தியாவின் சாபக்கேடு, சாதி வேற்றுமை ஆகும். இந்த சாதிக் கொடுமையை எதிர்த்து முதல்வர் நடத்திவரும் போராட்டத்தை இந்தியா முழுவதும் ஏற்றிப்போற்றும்" என்று தமிழக ஆளுநர் கே.கே. ஷா அவர்கள் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகச் சங்கத்தில் முதல்வர் கலைஞர் அவர்களது உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

கோட்டை வெளியில் நடைபெற்ற இவ்விழாவிற்குக் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் மேயருமான திரு டி. செங்கல்வராயன் தலைமை வகித்தார்.

தலைமைச் செயலகச் சங்கத் தலைவர் திரு.கோ.ராமகிருட்டிணன் அனைவரையும் வரவேற்று கலைஞராட்சி அரசு ஊழியர்களுக்கு அளித்துவரும் நன்மைகளை விவரித்துக் கூறினார்.

திரு. டி. செங்கல்வராயன் தமது தலைமையுரையில் கூறியதாவது:

"என் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அண்ணா எங்கள் கல்லூரி நாட்களிலேயே மாலை நேரங்களில் நாங்கள் உலவிய போதும் உரையாடியபோதும் அரசியலில் எத்தனை தான் மாற்றுக் கருத்துக்கள் கொண்டவர்களாக இருந்தாலும் நட்பு மாறுவது கூடாது என்று எனக்குக் கூறியிருக்கிறார். அவர்களது பாரம்பரியத்தைக் கட்டிக் காத்து வந்திருக்கிறோம் என்பதில் நாம் மகிழ்ச்சியடையலாம்.

"முதல்வர் கருணாநிதி அவர்களோடு ஒவ்வொரு விஷயத்திலும் நான் ஒன்றிப்போக இயலாமல் இருக்கலாம். அவரும் நான் ஏற்றுக் கொண்ட கொள்கையினிடத்துப் பற்றில்லாதவராக இருக்கலாம். அரசியலில் எனது நிலைபற்றி அவர் பரிதாபப்படவும் கூடும். ஆனால் முதல்வருடைய சாதனைகளை-ஆற்றல்களை-திறன்களை நான் பார்க்க மறுப்பது முறையாகுமா?

"தமிழகத்தின் முதல் அமைச்சராகவும் ஒரு மகத்தான கட்சியின் தலைவராகவும் விளங்கும் அவர், சிறந்த நாவன்மை மிக்கவர். அவரது இந்த நாவன்மை அவரைப் படிப்படியாக இந்த உயர்ந்த நிலைக்கு உயர்த்தியிருக்கிறது.

"அரிய தலைமைத் தத்துவம் திரு. கருணாநிதியிடம் மிளிருவதாலேயே அவரால் இந்நிலையை எய்த முடிந்துள்ளது."

தமிழக ஆளுநர் கே.கே. ஷா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இந்த நிகழ்ச்சி ஓர் அரிய நிகழ்ச்சியாகும். பொது மேடையின் தரத்தை மிக உன்னதமான நிலைக்கு உயர்த்தியிருக்கிறார் இன்றைய விழாவின் தலைவர். தமிழ்நாட்டில்தான் இத்தகைய அரிய காட்சிகளைக் காணுகின்றேன்.

"அரசியல் கட்சி வேற்றுமைகள் எத்தனையிருந்தாலும் பிறந்தநாள் போன்ற நல்ல நாட்களில் அந்த வேற்றுமைகளை மறந்து ஒருவரை ஒருவர் வாழ்த்திடும் நல்ல காட்சியை இங்கு நான் காணுகிறேன்.

"கட்சிகள் ஒரு ஜனநாயக அமைப்புக்கு அவசியமென்றால் அதை வழிநடத்திச் செல்லக் கூடிய தலைமையும் ஜனநாயகம் தழைத்தோங்க இருந்தாக வேண்டியது கட்டாயமாகும்.

"ஜனநாயகம் செயல்படுகிற பாங்கினைக் காண விரும்பினால் இங்கே தமிழ்நாட்டுக்கு வந்து காணுங்கள் என்பேன். இந்த மாநிலத்தின் ஆளுநராக உள்ள நான் இதனைப் பெருமையோடு கூறுவேன்.

"இன்று இந்த விழாவைப் பார்க்கிறோம். அரசு ஊழியர்கள் ஒரு மனதோடு என்னை இங்கு வந்து முதல்வர் அவர்களது உருவப் படத்தைத் திறந்து வைக்க அழைத்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களிடையே மக்கள் தொண்டாற்ற வேண்டும் என்ற உள்ளப் பாங்கை-உறுதியை ஏற்படுத்தியதில் முதல்வர் அவர்கள் பெருமை கொள்ளலாம். இது ஒரு பெரும் சாதனையாகும்.

"மக்கள் தொண்டுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் ஆர்வம் படைத்த அரசு ஊழியர்களிடையே, 'மக்கள் தொண்டாற்றவேண்டும்' என்ற உள்ளப்பாங்கை - உறுதியை ஏற்படுத்தியதில் முதல்வர் அவர்கள் பெருமை கொள்ளலாம். இது ஒரு பெரும் சாதனையாகும்.

மக்கள் தொண்டுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் ஆர்வம் படைத்த அரசு ஊழியர் சமூகம் உருவாவதே



மேதகு ஆளுநர் கே. கே. ஷா திறந்து வைக்கிறார்



முதல்வருக்கு மாலையணிவித்து மகிழும் நரிக்குறவர்கள்

ஜனநாயகம் தழைக்கத் தேவையான சிறந்த அடித்தளமாகும்.

"ஆட்சியில் உள்ள ஒரு அரசியல் தலைவர் எவ்வாறு தன் பிறந்தநாளை ஏழை எளிய மக்கள் பயனடையும் வகையில் கொண்டாட வேண்டும் என்பதற்கு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பிறந்தநாள் விழா ஓர் எடுத்துக் காட்டாகும். ஒவ்வொரு அரசியல் வாதிக்கும் இது ஒரு நல்ல பாடமாகும்!"

இவ்வாறு திரு. கே. கே. ஷா அவர்கள் கூறினார்.

"இன்று இவ்விழாவில் எடுத்துரைக்கப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து அரசு ஊழியரெல்லாம் கலைஞர் அவர்களது ஆட்சிக்கு ஒத்துழைப்புத் தந்து நல்வாழ்வு பெற வேண்டுமென்று' தமது விழைவைப் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு என்.வி. நடராசன் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்.

**'தமிழரசு' அலுவலகத்தில்....**

'தமிழரசு' அலுவலகத்தின் சார்பில் முதல்வர் கலைஞர் அவர்களின் பொன்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சுமார் 1,000 ஏழைகளுக்குப் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. என்.வி. நடராசன் அவர்கள் உணவு வழங்கினார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. எம் பரமசிவம் அவர்கள் தலைமையில் நடந்த இந்த விழாவில், தொழிலாளர் நல அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் கலைஞர் பிறந்தநாள் சிறப்பினை எடுத்துக் கூறினார். இந்த விழாவில் செய்தித்துறை துணை இயக்குநர் திரு. வெ. நாமதேவன், உதவி இயக்குநர் திரு. கிருஷ்ணபாரதி, உதவி இயக்குநர் திரு. எஸ். கருணானந்தம் ஆகியோரும், 'தமிழரசு' அலுவலக, அச்சக ஊழியர்களும் செய்தித்துறை ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

**ராஜாஜி மண்டபத்தில்**

இளந்தமிழர் பேரவை சார்பாக, சென்னை ராஜாஜி மண்டபத்தில் முதல்வர் கலைஞரின் பொன்விழா கொண்டாடப்பட்டது. இதில் கலந்து கொண்டு ஒரிசாவின் முன்னாள் முதல்வரும், தற்போதைய சட்டமன்ற எதிர்க்கட்சித் (பிரகதி கட்சி) தலைவருமான திரு. பட்நாயக் அவர்கள் பேசினார். அவர் கூறியதாவது:

"முதலமைச்சர் கருணாநிதி இந்தியாவின் இளமைத் துடிப்புள்ள சிறந்த அரசியல் தலைவராக விளங்குகிறார்.

"அவர் இந்த நாட்டுக்கு அறிவித்துள்ள மாநில சுயாட்சிக் கொள்கை, வரும் காலத்தில் இந்த நாட்டில் மூலை முடுக்குகளில் எல்லாம் எதிரொலிக்கும்.



"வெளிநாட்டு உறவு, தகவல் தொடர்பு, ரூபாய் நோட்டு அச்சடிப்பது ஆகியவை மத்திய அரசிடம் இருப்பதை, எந்த மாநிலமும் ஆட்சேபிக்கவில்லை. மற்ற அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்றுதான் அவர்கள் கேட்கிறார்கள்.

"நான் நல்ல தமிழனாகவும் இருப்பேன். அதே நேரத்தில் இந்தியனாகவும் இருப்பேன் என்று கூறுவதில் என்ன தவறு?"

விழாவில் கலந்துகொண்ட மத்திய அமைச்சர் திரு. பிரமானந்தரெட்டி அவர்கள் பேசியதாவது:

"மறைந்த அறிஞர் அண்ணாவின் மூலமாக நான் கருணாநிதியை அறிவேன். எனது நெருங்கிய நண்பர்களில் கருணாநிதியும் ஒருவர். அவர் சிறந்த அறிவும் ஆற்றலும் - திறமையும் உள்ள முதல்-அமைச்சராகத் திகழ்கிறார்.

"தனது ஒவ்வொரு பிறந்த தின விழாவின்போதும், வாழ்க்கையின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்காக ஒரு திட்டத்தை நிறைவேற்றி வருவது பாராட்டுக்குரியது. அவர் மேலும் 50 ஆண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்."

விழாவில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்களும், மற்றும் மாரிசாமி எம்.பி. அவர்களும், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் என்.டி. சுந்தரவடிவேலு அவர்களும் முதல்வரின் தொண்டுகளுக்குப் புகழ்மாலை சூட்டினார்கள்.

முதல்வர் கலைஞர் அவர்களின் 51-வது பிறந்த நாள் விழா—ஊனமுற்றோருக்கு உயர் வாழ்வு நல்கும் விழாவாக அமைந்து, வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது!



# ஊனத்துக்கு ஊன்றுகோல்!

1964-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது இந்தத் துறை. இதன் ஓர் அங்கமாக இயங்கி வருகிறது, 'செயற்கை அவயவங்கள் நிலையம்-முடநீக்கு இயல் சாதனங்கள்' (Artificial Limb Centre-Prosthetic forthotic Lab).

"அதோ வருகிறாரே அந்த நடுத்தர வயதுப் பெண்மணி. அவருக்கு வலதுகையே இல்லை. இது பிறவியிலேயே வந்ததல்ல. கவனமின்மையால் ஏற்பட்ட பேரிழப்பு..." என்று சொல்லிவிட்டு மருத்துவர் அந்தச் சம்பவத்தை விளக்குகிறார்:

"இந்தப் பெண்மணி பேருந்தில் பயணம் செய்யும்போது, சன்னல் பக்கமாகக் கையை வைத்துக் கொண்டு வந்திருக்கிறார். அப்போது பக்கத்தில் வந்த ஓர் ஊர்தி இவர் கையை பலத்த சேதத்துக்குள்ளாக்கியது. அதன் விளைவு? அவரது வலக்கையையே எடுத்து விடும் அவலநிலை வந்தது...."

வெளியே கையை நீட்டாதீர்-படிகளில் நின்று பயணம் செய்யாதீர்-பஸ் நின்றதும் இறங்கவும்-இப்படிப் பல எச்சரிக்கைகளைப் படித்திருந்தும்கூட அதை அலட்சியப்படுத்துவதன் விளைவாகப் பலர் ஆபத்தையே சம்பாதித்துக் கொள்கிறார்கள்.

அதோ ஓர் அம்மையார், தம் ஒரே ஓர் ஆண் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வருகிறார். குழந்தையின் இரு கால்களும் சூம்பிக் கிடக்கின்றன.

"பிறக்கும்போது நன்றாகத்தான் பிறந்தான். 'டைபாயிட்' காய்ச்சல் கண்டு இவன் கால்கள் நடக்க முடியாமல் போய்விட்டன.." என்று அந்தத் தாய் துக்கத்தை அடக்கிக் கொண்டு சொல்கிறார். நம் நெஞ்சம் வேதனையால் விம்முகிறது.

சென்னை அரசினர் பொது மருத்துவமனை!

முடநீக்கு இயல் துறைக்குள்ளே நுழைகிறோம்.

அங்கே நாம் கண்டறிவது மேற்சொன்ன இரண்டு சம்பவங்கள் மட்டுமல்ல, எத்தனை எத்தனை வாழ்க்கைப் பிரச்சினைகள், நிகழ்ச்சிகள், சோகக் கதைகள்! கை, கால் இழந்தவர்கள் கூறும் உண்மைக் கதைகள் நம் உள்ளத்தையல்லவா உருக்குகின்றன!

அங்கே நாம் காணும் அவலக் காட்சிகள் நம் அகக் கண்களைத் திறந்து விடுகின்றன. ஊனமுற்றோரின் பரிதாப நிலைக்கு இரங்குகின்றன; அவர்களுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற உணர்வு நம்மை உந்தித் தள்ளுகிறது.

**இந்தியாவிலேயே**

**முதல்**

**செயற்கை**

**உறுப்புக்கள்**

**நிலையம்**

ஊனம் எப்படி ஏற்படுகிறது?

பிறவிக் குறைகளினாலும், பிறந்த பின் வரும் நோய்களாலும், விபத்துக்களாலும் ஏற்படுகின்றது.

பிறவிலேயே குருத்தெலும்பு குறைதல், அல்லது எலும்புக்கூடு கருவில் வளராது இருத்தல் போன்றவை பிறவிக் குறைகளில் ஒன்று. பிறந்தபின் ஏற்படும் ஊனங்கள் பல. இவைகளை முன்கூட்டியே தடுத்துக் கொள்ளலாம்.

இளம்பிள்ளைவாதம்! இதனால் தசை சோர்ந்து அங்கமாறுதல் உண்டாகிறது. உணவில் 'டி' (D) வைட்டமின் குறைந்து போனால் கணையநோய், எலும்பு மிருதுவாதல் ஆகியவை உண்டாகின்றன. கை எலும்பில் அடி, தசை நரம்புகள் அறுதலாலும், அடிபட்ட காயத்தால் எலும்பு முறிதல், வளைதல், குறுகுதல், மூட்டுப் பிடிப்பு, உடைந்த எலும்பு சேராமை, சதை அற்று விரல் அசைக்க முடியாமை, பூட்டு விலகல் போன்றவைகளாலும் ஊனங்கள் ஏற்படுகின்றன.

ஊனங்கள், மனித வாழ்க்கையையே ஊனமாக்கி விடுகின்றன என்று சொல்லலாம். ஊனமுற்றவனும் சமுதாயத்தில் ஒரு மனிதனைப் புதுத் தெம்பு பெற்று மீண்டும்வாழ்க்கையைத் தொடங்க அவனுக்கு ஊன்றுகோலாய் இருந்து உதவி வருகிறது, சென்னை அரசினர் பொது மருத்துவமனையிலுள்ள முடநீக்கு இயல் துறை.

வெறும் சிகிச்சை மட்டும் வழங்குவது இதன் பணியல்ல.



நோயாளி ஒருவரை சமூகப் பணியாளர் விசாரணை செய்கிறார்.



மெய்யனில் பொருத்திடப் பொய்க் கை உருவாகிறது.

சிகிச்சைக்குப் பின்னும் இதன் பணி தொடர்கிறது. எப்படி?

ஓர் ஏழை முதியவர். இவர் ஒரு புத்தக வியாபாரி. தெருத் தெருவாகச் சுற்றிப் புத்தகங்களை விற்று வந்தவர். ஒரு விபத்தால் இவரது இடது முழங்காலுக்குக் கீழே காலை எடுத்துவிட நேர்ந்தது. ஊர் சுற்றி வந்தவருக்கு ஊனம் ஏற்பட்டது — வாழ்க்கையிலும் கூடத்தான்!

பிழைப்புக்கு என்ன செய்வதென்றே புரியாத நிலை; குடும்ப வண்டி எப்படி ஓடும் என்ற குழப்ப நிலை!

சிகிச்சைதான் முடிந்ததே, செயற்கைக் கால்தான் பொருத்தப்பட்டதே, வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டியது தானே? என்று இந்தத்துறை பொறுப்பைத் தட்டிக் கழித்துக் கொள்கிறதா? இல்லவே இல்லை. இனிமேல்தானே இதன் வேலை!

இந்தத் துறையில் 4 சமூகப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். முடநீக்கு இயல் துறையில் சமூகப்பணியாளரா? ஆமாம். முதலில் ஒரு நோயாளி இங்கே வந்தால் அவரது நோயின் தன்மையை அறிவது மட்டும் இவர்கள் வேலையல்ல; அவரது வாழ்க்கைப் பிரச்சினைகளையும் இவர்கள் அறிந்து கொள்கின்றனர்.

முதியவர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பினார். ''அவர் மீண்டும் தொழில் செய்துவாழ்க்கை நடத்த என்ன செய்யலாம்?'' என்று அக்கறையுடன் யோசிக்கிறது இந்தத்துறை. ஏற்கெனவே, அந்த முதியவரை விசாரித்ததில், புத்தக விற்பனைத் தொழில் தவிர, இரும்புச் சாமான்களைப் பற்ற வைக்கும் தொழிலும் தெரியும் என்று சொன்னது நினைவுக்கு வருகிறது. ஆகவே, அவருக்கு அந்தத் தொழில் சம்பந்தமான சாமான்களை வாங்கித் தர வேண்டும். அதற்குப் பணத்துக்கு எங்கே போவது?

அரிமா சங்கம், ரோட்டரி சங்கம் போன்ற தனிப்பட்ட நிறுவனங்களிடமிருந்து நன்கொடை பெற்று இந்தத்துறை இது போன்றவர்களுக்கு உதவி வருகின்றது.

இப்போது முதியவர் இரும்புச் சாமான்களைப் பற்ற வைக்கும் தொழிலை நடத்தி அதில் வரும் வ்ருவாயைக்கொண்டு வாழ்க்கை நடத்தி வருகிறார்.

இதேபோன்று ஒரு தொழிலாளி, வேலை செய்து கொண்டிருந்தபோது கீழே விழுந்து விட்டார். அதனால் அவரது முதுகுத்தண்டு அறுந்து இரு கால்களும் செயலிழந்து விட்டன. இதனால் வாழ்க்கையே இருள் அடைந்து விட்டது போன்று அதிர்ச்சியுற்றார். ''இனி நம்மால் எந்த வேலையும் செய்ய இயலாது. நம் வாழ்க்கையே முடிந்து விட்டது'' என்ற ஏக்கம், பெருமூச்சாய் வெளிவந்தது.

முடநீக்கு இயல்துறை அவருக்குச் சிகிச்சையோடு சீரான வாழ்க்கைக்கும் வழி தேடித் தந்தது. ரூ. 550 மதிப்புள்ள மூன்று சக்கர வண்டி ஒன்றை அவருக்குத் தனியார் நன்கொடை மூலம் வழங்கியது. சிறிது தூரம்கூட நடக்க முடியாதவர் இன்று மூன்று சக்கர வண்டி மூலம் தொழில் நடத்து



கால்கள் தயாராகின்றன.

கிறார்—கடைகளுக்குச் சென்று எலுமிச்சம்பழம் விற்கும் வேலைதான் அது.

இப்படி எத்தனையோ பேர்களை இந்தத்துறை கைதூக்கி விட்டிருக்கிறது. இரண்டு கால்களும் இழந்த ஒருவரும், ஒரு கால் இழந்த, முழுப் பார்வை இல்லாத இளைஞர் ஒருவரும் செயற்கைக் கால்களைப் பொருத்திக் கொண்டு தனித் தனியே ஒரு கம்பெனியில் பணியாற்றிக் கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு நல்ல வருவாயும் கிடைக்கிறது. இந்தத் 'திருப்பணி'யும் இத்துறையின் 'கைங்கரியம்'தான்!

கடந்த நான்கைந்து ஆண்டுகளில், இங்குச் செயற்கை உறுப்புக்கள் பொருத்தப்பட்ட 50 பேர்களுக்குப் பல்வேறு நிறுவனங்களில் வேலை வாங்கித் தந்துள்ளது இந்தத்துறை.

இந்தத்துறை மூன்று முக்கியப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை. 1. மருத்துவப் பிரிவு 2. பொறியியல் பிரிவு. 3. சமூக, வாழ்க்கைத்தொழில் புனரமைப்புப் பிரிவு.

கை, கால் போன்ற செயற்கை உறுப்புக்கள் தயாரிக்கும் பணிமனைப் பகுதியில் கீழ்க்காணும் 9 பிரிவுகள் செம்மையாக இயங்கி வருகின்றன.

1. உலோக வேலைப் பிரிவு (Metal work section) 2. மர வேலைப் பிரிவு (Wood work section) 3. தோல் வேலைப் பிரிவு (Leather work section) 4. பிளாஸ்டிக் பிரிவு (Plastic section) 5. பற்ற வைப்புப் பிரிவு (Welding section) 6. மெருகேற்றும் பிரிவு (Polishing section) 7. வண்ணந்தீட்டும் பிரிவு (Painting section) 8. செயற்கை அவயவங்கள் இணைத்துப் பொருத்தும் பிரிவு (Assembly and fitting section for limbs and braces) 9. திட்ட ஆராய்ச்சிப் பிரிவு (Research and Planning section).

மறு சீரமைப்புப் பகுதியில் (Rehabilitation wing):

1. மருத்துவ, முடநீக்கு இயல் பிரிவு, (Medical and Physiotheropy section) 2. சமூகப் பணிப் பிரிவு (Social work section) 3. வாழ்க்கைத் தொழில் சார்ந்த மறு சீரமைப்புப் பிரிவு (Vocational Rehabilitation section) ஆகியவை உள்ளன. நவீன இயந்திரச் சாதனங்களுடன் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பணிமனையில் கைதேர்ந்த 40 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

கை, கால் போன்ற செயற்கை உறுப்புகள் மரம், உலோகம், தோல், பிளாஸ்டிக் ஆகியவைகளைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. கை, கால்கள் செய்வதற்கு வில்வமரம் ஏற்றதாய் இருக்கிறது. ஏனென்றால் செயற்கை உறுப்புகள் இயற்கை உறுப்பைவிடக் கனமாக இருந்தால் அதை வேறு சுமக்க வேண்டும் அல்லவா? அதனால் மரங்கள் லேசானதாக இருக்க வேண்டுமாம். இந்த வில்வ மரம் காஷ்மீரிலிருந்து தருவிக்கப்படுகிறது. தமிழ் நாட்டிலுள்ள ஒரு வகை மரமும் இதற்குப் பயன்படுகிறது. இதன் பெயர் சிட்டிகா மரம்.

ஒருவருக்குக் காலோ, கையோ செய்ய வேண்டுமென்றால், முதலில் அவரது கால் அல்லது கையின் அளவை எடுத்துக் கொண்டு அந்தக் கால் அல்லது கையின் பருமனுக்கு ஏற்ப 'மோல்டு' (Mould) செய்து கொள்ளப்படுகிறது. பிறகு மரம், பிளாஸ்டிக் முதலான




சைக்கிள் நன்கொடை பெற்றவர்.



சொந்தக் கால் இல்லாத ஒரு முதியவர் சொந்தமாகத் தொழில் நடத்த உதவி பெற்றிருக்கிறார்.

பொருள்களைக் கொண்டு உறுப்புக்கள் தயாரிக்கப்படுகின்றன. கால் இழந்தவர் எந்த நிறமோ அந்த நிறத்துக்குப் பொருந்தும் படியாகச் செயற்கைக் கால்கள் உருவாகின்றன. கால் பாதம், அதன் விரல்கள், நகங்கள் எல்லாம் இயற்கையாகவே இருக்கின்றன! செயற்கைக் கால் பொருத்தப்பட்ட ஒருவரை உற்று நோக்கினாலொழிய செயற்கைக்காலைக் கண்டு கொள்ள முடியாது. அந்த அளவுக்குத் திறம் வாய்ந்த தொழிலாளர்கள் இங்கே உள்ளனர்.

செயற்கை உறுப்புக்கள் தயாரிப்பவர், மருத்துவம் பற்றியும் தெரிந்திருக்கவேண்டுமாதலால் இதற்கான பயிற்சிப் பள்ளி ஒன்றும் (School of prorthetics of Orthetics) இங்கே செம்மையாக நடந்து வருகின்றது.

செயற்கை உறுப்புக்கள், முடநீக்கியல் சாதனங்கள் நிலையம் மற்றும் முடநீக்கியல் அறுவைச் சிகிச்சைத் துறை போன்றவைகள் தென்னிந்தியாவிலேயே முதன் முதலில் துவக்கப் பெற்றது சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் (Govt. General Hospital) தான். மேலும், இந்தியாவிலேயே முதன் முதலில் செயற்கை உறுபபுகளையும், முடநீக்கு இயல் சாதனங்களையும் பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் பணியினை மேற்கொண்டதும் இம் மருத்துவமனையில்தான்! இராணுவத்தினருக்காக மட்டும் பூனாவில் ஒரு செயற்கை உறுப்புக்கள் செய்யும் நிலையம் உள்ளது; கான்பூரிலும் இதுபோன்ற நிலையம் ஒன்று விரைவில் துவக்கப்படவிருக்கிறது.

தமிழ்நாட்டிலேயே முதன்மையாகவும் தலைமையாகவும் திகழும் செயற்கை உறுப்புக்கள் நிலையம் (Artificial Limb centre) மூன்று கிளைகளைக் கொண்டிருக்கிறது. அவை: 1. மதுரை, 2. கோவை. 3. தஞ்சை, நெல்லையிலும், சென்னை ஸ்டான்லி மருத்துவமனையிலும் கிளைகள் துவக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது. மேற்கண்ட மூன்று கிளைகளில் முடநீக்குச் சாதனங்கள் மட்டுமே தயாரிக்கப்படுகின்றன. அரசினர் பொது மருத்துவமனையில்தான் செயற்கைக் கை, கால் உறுப்புக்கள் தயாரிக்கப்படுகின்றன.

முன்பெல்லாம் செயற்கை உறுப்புக்கள் வெளிநாட்டிலிருந்தே தருவிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, அங்கிருந்து வரும் செயற்கைக் காலில் காலணி (ஷூ)யும் இணைந்திருக்கும். கை உறுப்பில் விரல்களை அசைக்க முடியாது. ஆனால், நம் நாட்டில் செய்யப்படும் கால் உறுப்பு காலணி ஏதுமின்றி, இயற்கையாக—வெறுங் காலாக இருப்பது போன்றே செய்யப்படுகின்றது. இந்தக் காலில் நகம், நரம்பு எல்லாம் தத்ரூபமாக அமைந்து இருக்கும். இதற்குச் 'சென்னைப் பாதம்' (Madras Foot) என்று பெயரிட்டிருக்கிறார்கள்! செயற்கைக் கை உறுப்பில் விரல்களைக்கூட அசைக்கலாம். எழுதலாம். சாப்பிடலாம்.

இங்குத் தயாராகும் கை, கால்போன்ற உறுப்புகளுக்கு விலை ஏதேனும் உண்டா?

உண்டு. ஒரு முழுக்காலின் விலை ரூ. 500. மாத வருமானம் ரூ. 750-க்கு மேல் இருப்பவர் இந்தக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். வருமான அடிப்படையில் இவற்றுக்கு விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மாதம் ரூ. 200 வருமானமுள்ளவர் ரூ. 25 கட்டினால் போதும். அவருக்குச் செயற்கை உறுப்பு கிடைக்கும். வருமானமில்லாத ஏழை எளியவர்கள் இதனை எப்படி வாங்க முடியும்? அதற்கும் வசதி செய்திருக்கிறது இந்தத்துறை. தனியார் நன்கொடை மூலம் இந்த



கால் இழந்தவர் பணியாற்றும் காட்சி.

உறுப்புக்களை அவர்கள் பெற முடியும்.

இந்த உறுப்புக்கள் அணிந்தவர்களால் பிறகு நன்கு நடக்கவும், எழுதவும், சாப்பிடவும் முடிகிறது.

இந்தத் துறையில் ஒரு நாளைக்கு 15 நோயாளிகள் வருகிறார்கள். ஓர் ஆண்டில் சுமார் 980 பேர்களுக்கு முடநீக்குச் சாதனங்கள் பொருத்தப்படுகின்றன. சுமார் 325 பேர்களுக்குச் செயற்கைக் கால்கள் பொருத்தப்படுகின்றன. செயற்கை உறுப்புக்கள் பொருத்தப்பட்டபின் அவர்களுக்குப் பயிற்சிச் சிகிச்சைகள் இங்கே அளிக்கப்படுகின்றன.

ஓடாத பேருந்தில்பாதி இங்கே காட்சி தருகிறதே அது எதற்காக? இதன் படிகளில் ஏறி இறங்கும் பயிற்சிக்காக அது இங்கே பொருத்தி வைக்கப்' பட்டுள்ளது.



கால் இழந்தும் கலகலப்பு மாறவில்லை !

முடநீக்கு இயல் துறையின் இயக்குநர் திரு. எம். நடராசன் அவர்கள் தலைமையில் 'புனரமைப்புக்குழு' ஒன்று வாரத்திற்கு ஒருநாள் இங்கே கூடுகின்றது. இந்தக் குழுவில் இயக்குநரோடு, ஒரு மருத்துவர், ஒரு தசைப் பயிற்சியாளர், ஒரு மருத்துவப் பொறியாளர், ஒரு சமூகப்பணியாளர், ஒரு வாழ்க்கைத் தொழில் ஆலோசகர் ஆகியோர் உள்ளனர். இக்குழு நோயாளியைப் பல கோணங்களில் விசாரித்து அவரது நோயின் தன்மை, வாழ்க்கைப் பிரச்சினை, வாழும் வழி போன்ற பல தகவல்களை அறிந்து, அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கின்றது.

இத்துறையினர் மேற்கொண்டுள்ள இன்னொரு நடவடிக்கையையும் இங்கே குறிப்பிட வேண்டும். வெளியூர்களிலிருந்து - கிராமங்களிலிருந்து வரும் ஏழை எளியவர்கள் சென்னைக்கு வந்து, தங்கி இருந்து சிகிச்சை பெறப் போதிய வசதி இல்லாதவர்களாக-உறவினர் யாரும் இல்லாதவர்களாக இருப்பார்கள். அவர்களைப் புறக்கணிக்காமல் அவர்கள் தங்கி இருந்து சிகிச்சை பெற, மூர் அங்காடி எதிரிலுள்ள ஒரு சத்திரத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது. தங்கியிருக்கும்போது அவர்களுக்கு உ'ணவும் வழங்கப்படுகிறது.

கை, கால், உறுப்புக்கள் உள்ளவர்களே, சமுதாயத்தில் பல சந்தர்ப்பங்களில் புறக்கணிக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். கை, கால் இல்லையென்றால் கேட்கவே வேண்டாமே! ஒரு குடும்பத்தில் நன்றாக இருந்தவன், ஏதோ ஒரு விபத்தில் ஊனமுற்றால் அவனை ஒதுக்கிவிடும் குடும்பங்களும் இருக்கின்றனவாம். அத்தகைய அவலநிலை போக்கி, ஊனமுற்றவரைக் குடும்பத்தோடு ஒன்று சேர்க்கும் ஓர் ஒருமைப்பாட்டு நிலையமாகவும் இந்தத் துறை திகழ்கிறது.

உலகநாடுகளால் பாராட்டப் பெற்ற இந்தத்துறை, அரைகுறை மனிதனை முழுமனிதனாக ஆக்கும் மகத்தான பணியினை ஆற்றி வருவதை, மனிதகுலம் என்றென்றைக்கும் மறக்காது என்பதைப் பெருமையோடு சொல்ல வேண்டும்.

— பி. வி. ஜி

# மயக்கம் வேண்டாம்

தூய தமிழ்ச் சொற்கள் பல மேல் நோக்காகப் பார்ப்போரைப் பிறமொழிச் சொற்களோ என ஐயம் கொள்ளச் செய்கின்றன. புணர்ச்சியால் விளைந்த மாறுபாடுகளும் காலத்தால் அமைந்த வேறுபாடுகளும் புலவர் பெருமக்களையே மயங்க வைக்கின்றன. இன்றும் பல அருந்தமிழ்ச் சொற்கள் அயல்மொழிச் சொற்களாகவே ஆன்றோர்களாலும் எண்ணவும் பேசவும் படுகின்றன. அவற்றை நுணுகி ஆய்ந்து பார்த்தால் அவை யாவும் தனித் தமிழ்ச் சொற்களே என்பது இனிது வெளிப்படும்.

இன்றைய பூம்புகாரினின்று சில கல்தொலைவில் வாணகிரி என்று ஒரு சிற்றூர் உள்ளது. இது பண்டைய காவிரிப்பூம் பட்டினத்துள் சோழமன்னர் வாழ்ந்த நகர்ப்பகுதியாகும். வாழ்நகரி என்பதே மருவி வாணகிரியாயிற்று. சோழநாடு என்பது சோணுடு ஆனதை இங்கு ஒப்பு நோக்குக. இப் பகுதியில் திருநகரி என்ருெரு சிற்றூரும் உள்ளது. இதுவே சோழர் காலத்தில் கருவூலம் அமைந்திருந்த பகுதியாகும். திரு இருந்த நகர் திருநகரியாயிற்று. இவ்வூர்ப் பெருமாள் கோவிலில்-பெருமாளின் செல்வத்தைத் திருமங்கையாழ்வார் கொள்ளையடித்ததாக ஆண்டுதோறும் கார்த்திகைத் திங்களில் விழா எடுக்கப் பெறுவதும் இங்குக் கருதத் தக்கதாம். ஒரு நகர்க்குச் செல்வமிருந்துவிட்டால் புகழ் கிட்டுமோ? செல்வத்தின் பயனே ஈதல் அன்றோ? புகழ் மிக்க தமிழ் வள்ளல்களில் ஒரு வரது நகர் ஈகையால், அருளால், சிறந்து விளங்கியது. அதனுல் அதன் பெயர் அருள் நகரியாயிற்று. அதுவே புணர்ச்சியால் அருணகிரியாகி இன்று அருணகிரி என்று மயங்கி வடமொழி போல் கருதப்படுகின்றது.

அவ்வாறே உலக உயிர்களுக்கு ஒளியும் வெப்பமும் ஏன் மழையும்கூட அருளுகின்ற கதிரவன் அருள்நன் எனப்பட்டான். அது அருணன் ஆகி விட்டது. விண்ணில் பொலியும் ஓரியன் கூட்டத்தை ஒட்டி அதன் தென்புறத்தில் ஓர் ஒளி மிக்க விண்மீனைக் காணலாம். வெறுங்கண்களால் காணக் கூடிய விண்மீன்களில் ஒளி மிக்கது இதுவேயாகும். மேலை நாட்டினர் இதனை சீரியஸ் என்பர். நம் நாட்டினர் அருணன் என்பர்.

வாள் ஏந்திப் போர் புரியும் வீரரைக் கொண்ட சேனை வாள்தானை எனப்பட்டது. இது புணர்ச்சியால் வாடானை ஆகி திரு அடைமொழியோடு திருவாடானை என ஊர்ப் பெயராக விளங்குகின்றது.



சில மரங்களின் அடிப்பகுதியில் சிறுசிறு முட்டுகள் காணப்படும். மக்கள் இவற்றை முண்டு என வழங்குவர். 'முண்டும் முடிச்சுமாய்' எனப் பேச்சு வழக்கில் பலரும் குறிப்பிடுகின்ருேம். தாமரை மலரின் நடுவில் ஒரு முண்டு உள்ளது. முண்டு அகத்தில் கொண்டு விளங்குவதால் தாமரை முண்டகம் என்றும் ஒரு பெயர் பெற்றது. இச்சொல்லை வட சொல் என்றே பெரும் புலவர்கள் எண்ணுகின்றனர். இம் முண்டுகள் நீர்முள்ளிச் செடியிலும் உண்டு. எனவே முண்டகம் என்ற பெயர் அதனையும் குறிக்கும்.

தாமரைக்கு முளரி என்றும் ஒரு பெயர் உண்டு. அரி என்ற சொல் அரிய பல பொருள் கொண்ட சொல். மூங்கிலைக் கொண்ட சொல். மூங்கில், வைக்கோல் போன்ற உள் துளை உள்ள பொருள்களையும் குறிக்கும். தாமரைத் தண்டில் உள்ளே துளையும் வெளியே முள்ளும் காணப் பெறும். முள்ளும் அரியும் இணைந்து இடைக்குறையாகி முளரி தோன்றிற்று.

பெண்களின் கண்களில் காணப்பெறும் மெல்லிய கோடுகளும் அரி எனப்பெறும். அவை அவற்றின் தன்மைக்கேற்ப செவ்வரி என்றும் வெள்ளரி என்றும் சிறப்பிக்கப் பெறும். திருவள்ளுவரும் இச்சொல்லை கலைகளில் வல் ஆண்டுள்ளார்.

காழி.சி.கந்தையன்

லவணாகிய ஓர் அரசனின் துணைவியும் அவனைப் போலவே கல்வியிற் சிறந்தவள். ஓதத் தகுந்த உயர்தமிழ் நூல்களை ஓதி ஓதி அவள் கண்களில் அரி மண்டிவிட்டது. அவள்தான் இராவணன் துணைவியான மண்டு ஓது அரி-மண்டோதரி ஆவாள்.

மாது என்றால் அழகு என்பது பொருள். அழகிய அரி அமையப் பெற்றவள் மாதரி எனப்பட்டாள். கண்ணகிக்கும் கோவலனிற்கும் அடைக்கலம் தந்த அவள் பெயரை அறியார் யார்?

இறால் செம்மீனாகும். இராவணன் செந்நிறமுடையவன். இராமன் கருநிறமுடையவன். இறால் போன்ற நிறமுடையவன் என்ற பொருளில் இறால் வண்ணன் என்ற பெயரே வடமொழிக்குப் போய் மீண்டும் தமிழுக்குத் திரும்புகையில் ராவணன் ஆயிற்று. இன்றும் சிலர் றாவணன் என்றே எழுதக் காண்கின்றோம்.

தாமே ஓதி உணர்ந்த அரன் என்ற புலவர் பெருமகனார் 'தாமோதரனார்' எனப்பட்டார். வடமவண்ணக்கன் என்பது பிற்காலத்தில் வழங்கப் பெற்ற ஏனாதி போன்று ஒரு சிறப்புப் பெயராதல் வேண்டும். பரிதிமாற் கலைஞர் கூறியது போன்று, ஆரியர்கள் தமிழரது அனைத்தையும் தாம் மேற்கொண்ட செயலின் பயனாய் இவரையும் பலர் ஆரியர் என்றே மயங்கிக் கூறுகின்றனர்.

பெண்டிர்க்குக் கால்கள் சிறியனவாக அமைவதை அக்காலத்தில் போற்றினர். சீனர்களிடத்து இவ்வெண்ணம் அண்மைக்காலம் வரை நிலவி வந்தது. தாள் தக அமைந்தவளே தாள்தகை-தாடகை. அங்கால் அம்மை என்ற தெய்வத்தின் பெயரையும் ஒப்பு நோக்குக.

சூர் என்ற சொல்லிற்கு ஒளி என்பது ஒரு பொருள். ஒளியோடு இயங்குவோன் அல்லது ஒளிரும் இயல்புடையோன் சூரியன் எனப்பட்டான். அவ்வாறே ஒளிவீசுகின்ற பற்கள் விளங்க, நகைசெய்யும் இயல்புடையாள் சூர்ப்பல்நகை-சூர்ப்பனகை எனப்பட்டாள். இதனை அறியாது சூர்ப்பணகை என 'டண்ணகரம்' பெய்து எழுதுவது பிழையே என்க.

முக்கூறாக அமைந்த சடையினை உடையவள் அல்லது திரிந்த சடையினை உடையவள் திரிசடை எனப்பட்டாள். திரிநூல் என இக்காலத்தும் வழங்குவது காண்க.

குடமூக்கு என்பது வடமொழியில் கும்பகோணம் ஆயிற்று. குடம் போன்ற வடிவக் கன்னம் அமையப் பெற்றவன் குடக்கன்னன். வடமொழியில் கும்பகர்ணன் எனப்பட்டான். இரும்பிடர்த் தலையார் என்ற பெயரையும் இங்கு எண்ணிப் பார்க்க.

வாலி என்பது தூய தமிழ்ப் பெயரே! வால் அறிவன் என்ற தொடரில் அமைந்தது போல் தூய பண்புகளால் வாலிக்கு இப்பெயர் அமைந்திருக்கலாம்.

தமிழிலும் வடமொழியிலும் ஒருங்கே புலமை அமையப் பெற்ற சான்றோர் ஆய்ந்து விபீஷணன், சுக்கிரீவன் போன்ற வடமொழி வடிவங்களின் தமிழ் மூலங்களை வெளிப்படுத்தல் வேண்டும்.

இதுகாறும் இராமாயணப் பாத்திரப் பெயர்கள் சில, தமிழே எனக் கண்டோம். பெரும்பாலோர் இக்கருத்துக்களைத் தள்ளார். தயக்கத் தோடாயினும் கொள்வார்.



இனி, இராமாயணத்தை வடமொழியில் யாத்த வான்மீகியே தமிழர்தான் என்ற என் துணிபினைக் கூறுகின்றேன். ஆய்வாளர்கள் எளிதில் 'துடைத்தெறிந்து விடாது ஆழ்ந்து எடை போட்டுப் பார்க்கவேண்டுகிறேன்.

இமயமலைச் சரிவில் ஒரு மலர் உண்டு. அம்மலர் மணப்பொருளாயும் மருத்துவப் பொருளாயும் பயன்தரும் செம்மலர். தமிழர் அதனைப் பண்டைக் காலத்திலேயே அறிந்திருந்தனர். அம்மலரில் 'வால்' போன்ற நரம்புகள் மேலே வந்திருக்கும். பழந் தமிழில் மீ என்ற சொல் மேற்புறம், மேலிடம் என்ற பொருள்களைத் தரும். மேகம் என்பதே மீகம் என்பதன் திரிபு என்பர். கப்பலின் மேலிருந்து செலுத்தும் மாலுமி மீகாமர் எனப்பட்டார். எனவே வால் போன்ற நரம்புகள் நடுப்பகுதியினின்றும் மேல் வந்து விளங்கும் குங்குமப் பூவை மீகம், வான்மீகம் என வழங்கியதில் வியப்பில்லை. வால்மீகம் நிறமுடைய புலவர் வால்மீகி எனும் பெயர் பெற்றார். இராமாயணம் இயற்றியவரும் புறநானூற்றின் 358-ஆம் பாடலை இயற்றியவரும் ஒருவரே ஆதலும் கூடும். இப்பாடலின் கருத்தும் குறிப்பால் இ ர ா ம ய ண க் கதையை உணர்த்துவதாகவும் சிலர் கருதுகின்றனர். ஔவையார் பாடிய 'நாடா கொன்றோ ' (புறம் 187) என்று தொடங்கும் பாடலின் மொழிபெயர்ப்புப்போல் 'தம்மபதத்துள்' ஒரு பாடல் அமைந்துள்ளதும், வடக்கிற்கும் தெற்கிற்கும் இருந்த இலக்கியத் தொடர்பை வலியுறுத்தும்.

வடவர்க்குத் தமிழ் கற்பிக்கச் சென்ற தமிழர் வான்மீகி, தமிழகத்திக்கு வழங்கிய இராமாயணக் கதையை வடமொழியில் இயற்றிருத்தல் கூடும்.

நடுநிலையாளர்கள் மேலும் ஆய்ந்து தமிழ்ச் சொற்களின் வேர் அறிந்து வெளிப்படுத்தித் தமிழின் தொன்மையையும் வன்மையையும், உண்மையையும் எளியோர்க்கும் விளங்க வகை செய்ய வேண்டும். தமிழ்ப் புலவர்கள் இதில் மயக்கமோ தயக்கமோ கொள்ள வேண்டா!


நூல் நிலையம்
நூல் நிலையம்
அறிவுவளம் பெறவேண்டின் தெருக்கள் தோறும்
அங்கங்கே நூல்நிலையம் தோன்ற வேண்டும்;
நெறிவிளக்கும் அறநூல்கள், விளக்க நூல்கள்,
நெடுங்கதைகள், காப்பியங்கள் நிறைந்த நூல்கள்
குறிப்பாகச் சிறுவருளம் வளர்க்கும் நல்ல
கொள்கையினால் வெளிவந்த எளிய நூல்கள்
முறையாக வரலாறு கூறும் நூல்கள்
முதலியவை நிரம்பியதே சுவடிச் சாலை.
மனிதர்உளம் வளர்வதற்கும், விரிவ தற்கும்
வழிகாட்டும், புத்தகங்கள்; அறிவை ஆக்கும்;
தனித்தமனம் புறவுலகில் தொடர்பு கொண்டு
தழைத்தோங்க எருவாகும் புத்த கங்கள்,
இனித்தநறும் கலை,ஞானப் பெருக்கை எல்லாம்
இதயத்தில் பாய்ச்சுவன புத்த கங்கள்,
பனித்துளியில் எதிர்உருவம் பாய்வ தைப்போல்
பதிந்திருக்கும் உலகமெலாம் புத்த கத்தில்.
மனஉரப்பைச் சிலநூல்கள் வளர்க்கும், மற்றும்
மனஇளக்கம் சிலநூலால் அமையும்; மேலும்
இனப்பற்றை வளர்ப்பனவாம் வேறு நூல்கள்;
எல்லாரும் ஒப்பென்னும் மற்ற நூல்கள்;
சினம்; பகைமை, தாழ்வுயர்வு கருது கின்ற
தீ எண்ணம், பேராசை, கயமை, கெட்ட
நினைவுகளை அழித்தொழிக்கும் நூலும் உண்டு:
நீளும்இதை விரித்துரைப்பின்; எல்லாம் நூலால்!
சாமி
சிறுவர் பகுதி
கா. சம்பத்து

## 11. வசந்தக் கனவுகள்

அந்தி மயங்கிய வேளை அது.

அந்த வைரச் சிமிக்கிகள் இரண்டையும் அடி மடியில் செருகிக் கொண்ட வேளையில், வீரமணியின் மனமும்தான் மயங்கிப் போயிருந்தது. அம் மயக்கத்தில், இனம் புரியாத படபடப்பும், இனம் புரிந்த துயரமும் தறிகெட்டுச் சுழன்றாலும் கூட, அவ்வுணர்வுகளின் விசித்திரக் கலவையினூடே ஆத்மார்த்தமானதோர் ஆறுதல் எப்படியோ நிழலாடிய அதிசயத்தையும் அவனது மன அந்தரங்கம் வெகு சல்லாபமாக உணரவே செய்தது. 'நல்ல வேளை; இந்த இரண்டு வைரச் சிமிக்கிகளும் அப்பாவோட கழுகுக் கண்களுக்குத் தப்பிடுச்சு. இல்லாங்காட்டி, இதுக ரெண்டும் இந்தச் சென்மத்துக்கு எங்க அம்மாள் மகள் அன்னத்தோட கைக்குச் சேரவே வாய்க்காதாக்கும்!' என்று அமைதியைக் கற்பித்துக் கொண்டிருந்த நேரத்தில், தன் தந்தையின் விளிப்புக் கேட்டதும், அவனுடைய தார்மீக மனமும் விழிப்புப் பெறத் தவறிவிட வில்லை.

''அப்பா, கூப்பிட்டீங்களா?'

நிதானமாகவே வீரமணி திரும்பினான்.

''ஊம்'', கொட்டினார் பெரியவர் ஆதிமூலத் தேவர்.

தன்னுடைய தந்தை 'ஊம்' என்று குறிப்பிட்டுச் சத்தம் கொடுத்த அந்தப் பாவனை வீரமணிக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லைதான் ; அவரது கூர்மையான பார்வையையுங் கூட அவன் அவ்வளவு தொலைவுக்கு விரும்பவும் இல்லை. 'நான் அன்னத்தின் வைரச் சிமிக்கிகளை நலியாமல் எடுத்து மறைத்துக்கொண்ட துப்பு ஒரு வேளை அப்பாவுக்குத் தெரிந்திருக்குமோ? அப்பாவுக்குத்தான் வெள்ளெழுத்தும் வரவில்லை! —கறுப்பெழுத்தும் வர வில்லையே!' என்று மறுகினான். ''ஏதானும் விசேஷம் உண்டுங்களா, அப்பா?'' என்று வினவினான் அவன்.

ஊர் அம்பலக் காரரர் விநயமாகப் புன்னகை செய்தார். ஓடுற பாம்பை மிதிக்கிற வயசுக்காரப் பிள்ளை நீ. விசேஷம் எதுவாயிருந்தாலும், அது உன் கிட்டேயிருந்து வர வேண்டியதுதான் நியாயம். நான் கிழவன். ஆனாலும், பல்லுப் போகாதவன் ; ஆனதாலே, சொல்லும் போகாது. அது சரி. கொஞ்ச முந்தி என்னத்தையோ குனிஞ்சு எடுத்தியே தம்பி? பணம் காசை அலட்சியமாகத் தொலைச்சிட்டுத் தேடி எடுத்தியா?'' என்று துருவலானார் தேவர்.

இனிமேல், விடலை வீரமணி சுதாரித்துக் கொள்ளக் கேட்க வேண்டியதில்லை. ''ஊம்'', என்று குரல் கொடுத்தான், ஓர் அமர்த்தலோடு. என்றாலும், அவனுக்குத் தன் அருமைத் தந்தையை முகம் கொடுத்துப் பார்க்கத் தைரியம் ஊற மறுத்தது.

மறுபடி சிரித்தார் முதியவர். தலைமுடிகளைக் கோதி விட்டுக் கொண்டே, ''காசு பணத்தை இன்னிக்கு நாம காப்பாத்தினால்தான் நாளைக்கு



# காணி நிலம் வேண்டும்

பூவை எஸ். ஆறுமுகம்

பணம் காசு நம்பளைக் காப்பாத்தும், தம்பி!'' என்று புத்தி படித்துக் கொடுத்தார் அவர்.

''நிசம்தானுங்க, அப்பா. கை நழுவின காசுகளைக் கை கழுவி விடுவேனுங்களா? அதுகளையெல்லாம் சமர்த்தாகப் பொறுக்கி எடுத்துக்கிட்டேன். காசு பணத்தோட அருமை பெருமை உங்க மாதிரியே எனக்கும் புரியாதுங்களா?'' என்று ஒரு போடு போட்டான் வீரமணி. சற்று முன் அப்பா சிரித்த சிரிப்பின் படம் அவனுடைய நெஞ்சில் படமெடுத்தது, மீண்டும். ஆகவே, அதே அச்சில் அவனும் அப்பா மாதிரி ஒரு சிரிப்பைச் சிரித்து வைத்தான். பற்கள் முப்பத்திரண்டையும் மறைத்துக் கொண்டு சிரித்த சிரிப்பு அது. போலித் தனமான சிரிப்பாகவே அமைய வேண்டுமென்று பாடுபட்டுச் சிரித்த சிரிப்பு அது. அப்படிச் சிரித்ததில் இயற்கையாகவே அவனுக்கு ஏனோ ஓர் ஆறுதல் கூட கவிந்திடவே செய்தது. இவ்வுணர்வின் சுழிப்பு அவனுள் படர்ந்த போது, அவனுடைய மன அந்தரங்கம் அவனைக் கண்டு கை கொட்டிச் சிரிக்கவும் தவறவில்லை. 'அப்பா மட்டும் என்னோட மனசைப் படிச்சுக்கிட்டு இருந்தும், என் அம்மான் மகள் அன்னத்திடமிருந்து என்னை மடை மாற்றத் துணியலாமா, என்ன?' என்ற கேள்வியின் நியாயத்தை அவனது மனச் சான்று எங்ஙனம் புறக்கணிக்க முடியும்?

பெரியவர் சில கணப் பொழுது வரை செயலற்று நின்று விட்டார். வீரமணியின் பொடி தூவிய பேச்சின் உள்ளர்த்தம் அவருக்குப் பிடிபடாமல் இருந்திருக்காது! 'காசு பணத்தோட அருமை பெருமை உங்க மாதிரியே எனக்கும் புரியாதுங்களா?'' என்று வீரமணி வாழைப்பழத்தில் ஏற்றிய ஊசியாகச் சொற்களைக் கொட்டிக் குத்திக்காட்டிய அந்தப் பேச்சு தேவரைச் சிந்திக்க வைத்ததோ? இல்லை, வேக வைத்ததோ?




சுயப்பிரக்ஞையை மீட்டுக் கொண்டதும், ''ஆமா, ஆமா!... என்னோட அருமை மகனுக்கு என்னை மாதிரியே காசு பணத்தோட அருமை பெருமையெல்லாம் எப்படிப் புரியாமல் தப்ப ஏறும்?'' என்று கூறினார்.

அம்மன் சந்நிதியில் முளை அடித்துக் கட்டிப் போடப்பட்டிருக்கும் பலி ஆடு, தன் நிலை புரியாமல் தலையை உலுக்குமாம்! —— அந்தப் பாவனையில் வீரமணி தலையை உலுக்கினான். நிலவின் உதயத்தில் கண்கள் மின்னின.

மகனுடைய தலையாட்டத்தைக்கண்டுதான் ஆதி மூலம் அவ்வாறு 'நின்றது நிலைக்க'க் கண் கலங்கி யிருக்கவேண்டும்! ——அப்படியென்றால், மெய்யாகவே வீரமணியைப் 'பலி ஆடு' என்றுதான் நிர்ணயம் செய்துவிட்டாரா பெரியவர் ? ''தம்பி பொழுது பட்டு, நிலாவும் பறிஞ்சாச்சு. நீ போய் உன் சோலியைக் கவ்னி. உடம்பையும் அலட்டிக்கிடாதே; உள்ளத்தையும் அலட்டிக்கிடாதே. ஆவணி பிறந்தாச்சின்னா, நீ மாப்பிள்ளையாடுவியே? அதுவும், சிலட்டூர்க் கங்காணி வீட்டு அருமை மாப்பிள்ளையாக ஆகப் போற அதிர்ஷ்டசாலிப் பிள்ளையாச்சே?'' என்று கூறினார்.

அவன் அப்பாவை விநயம் கூட்டி ஊடுருவினான் ;வேதனை கூடியது. ''கல்யாணம் திகைஞ்சு, நாள் நட்சத்திரம் பார்த்துப் பரிசம் போட்டு, அந்தப் பணக்காரக் கங்காணியோட அன்பு மகளுக்கு நான் திருப்பூட்டினதுக்கு அப்பாலே தானே, நான் சிலட்டூர் மாப்பிள்ளையாக ஆக முடியும்? அது மட்டுக்கும், நான் இந்த ஆவணத்தாங்கோட்டையைச் சேர்ந்த சர்வ சாதாரணமான பிள்ளையாண்டான் தானுங்களே, அப்பா?'' என்று கேட்டான் வீரமணி.

''ஓகோ அப்படிப் பிடிச்சிட்டியா நூலை? . . . அதுவும் சரி

தான். இந்த ஆதிமூலத்தேவர் போட்டு வச்ச புள்ளி எப்பத் தான் தடம் மாறிச்சு? சரி, சரி. நீ போ. உன்னோட அருமை அம்மான் வீட்டுக் காளைக்கு நான் காவல் இருப்பேனுக்கும். அதைப் பற்றி லவலேசமும் கிலேசப்படாமல் நீ நட. அன்னம்தான் ரோசம் தாங்காமல் இந் நேரம் தவிச்சுக்கிட்டுக் கிடக்கும்? இல்லையா, தம்பி?'' என்றார் அவர். சுருதி ஓங்கிய குரல்தான்!

''அதையெல்லாம் நான் என்னத்தைக் கண்டேன், அப்பா?'' — வீரமணியின் பேச்சு, சுருதி இறங்கி ஒலித்தது.

''அதுவும் சரிதான்!''

பெரியவரின் பார்வை அந்த வெள்ளையின் மீது திரும்பியது.

சமையல் காசியின் புண்ணியத்தினுல், வீடு ஒளி ஏற்றித் திகழத் தொடங்கியது.

வீரமணி திரும்பிப் பார்த்தான். இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வந்து விட்டதாகவே அவன் மகிழ்ந்தான். ஆனுல், வீட்டின் வெளியழகுக்குத் திருட்டி கழிப்பது போன்று வீட்டின் உள் அழகு அசடு கட்டி வழிந்ததைக் கண்டதும், அவனது மகிழ்ச்சி, சொல்லாமல் கொள்ளாமல் 'தேசாந்திரம்' புறப்பட்டுப் போயிற்று. ''அப்பா!'' என்று கொடூரக் குரலெடுத்துக் கூவினுன் வீரமணி.

திடுக்கிட்டுத் திரும்பலானுர் ஆதிமூலத் தேவர். தவப் புதல்வன், தவம் கலந்த மாதிரி கூப்பிட்ட அந்தக் குரலின் துடிப்பை எப்படி மனத்தில் வாங்கிக் கொண்டாரோ, தெரியவில்லை. அவரையும் மீறின அச்சத்தோடு திசை திரும்பலானுர் அவர். ''என்னடா ராஜா?'' என்று விசாரித்தார்.

''நானுவது, ராஜாவாவது? ராஜாக்கள் பரிபாலனம் செஞ்ச காலமெல்லாம்தான் அப்பவே மலையேறிப் போயிட்டுதே, அப்பா? . . நான் ராஜா இல்லீங்க; வீரமணி நான்! . . .'' என்று சொல்லிக் கொண்டு, தன் தந்தையின் முகத்தைப் பார்க்க வசதியாக அவர் முன்னே வந்து நின்றுன் வீரமணி. உண்டாக்கிக் கொண்ட வாய்ப்புக்கு ஓர் உத்வேகத்தை உண்டாக்க அவன் தன் தந்தையைக் கொடுமையான ஆத்திரத்தோடு பார்த்தான்; சீரழிந்த துன்பத்தோடு பார்வையிட்டான்!

**தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும், ஒரு தனியார் நிறுவனமும் கூட்டாகத் தொடங்கியுள்ள 'தமிழ்நாடு ரப்பர் லிமிடெட்' என்ற நிறுவனம் டயர்களையும், குழாய்களையும் தயாரிக்கும் ஓர் ஆலையை — ரூ.25.5 கோடி செலவில் அமைக்கின்றது. அமெரிக்காவைச் சேர்ந்த 'ஜெனரல் டயர்ஸ்' என்ற நிறுவனத்தின் தொழில் கூட்டுறவுடன் இது இராமநாதபுரம் மாவட்டத்தில் தொடங்கப்படுகிறது.**

பெற்ற மகனின் வசந்தக் கனவுகளையெல்லாம் மண்ணோடு மண்ணுக அழித்து மிதிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்த அப்பா அவர்; பெற்ற தந்தை அவர். தாய்க்குத் தாயாகவும் தந்தைக்குத் தந்தையாகவும் அமைந்தும் அமர்ந்தும் கறிவேப்பிலைக் கொழுந்து போன்ற தன் குலக் கொழுந்தை வளர்த்து ஆளாக்கியவர் அவர். அவருக்குத் தன் அருமைத் திரு மகனின் ஆத்திரத்தைச் சந்தித்தபோது, கண்ணீர் மடை திறந்த வெள்ளமாகப் பெருகத் தொடங்கியது. தன்னுடைய கண்ணீரைத் தன் மைந்தன் கண்டு விடக் கூடாதே என்ற பதட்டத்தில், அவசரம் அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டார் முதியவர்.

இக் காட்சியை வீரமணி கண்டான்; ரசித்தான்; சிரித்தான். ''அப்பா'' என்று என்னவோ சொல்ல வாயெடுத்தான். அப்போது, திட்டிவாசலினின்றும் பரிதாபமாக எதிரொலிக்கத் தொடங்கிய ராமையாத்தேவரின் வெள்ளைக் காளை எழுப்பிய சோகக் குரல் அவனுடைய உள்ளத்தில் மட்டுமல்ல, உடலிலும் கூட ஏதோவொரு புதிய மாற்றத்தை உண்டு பண்ணிய விசித்திரத்தை அவனுல் தட்டிக் கழித்திட முடியவில்லை. வாயில்லாச் சீவனின் தாபக் குரல் அவனை அவனது அம்மான் மகளிடம் இட்டுச் சென்றிருக்கலாம். இதயத்தின் அந்தரங்கத்தில் நிலைப்பாக ஊற்றெடுத்துக் கொண்டிருந்த ஆன்ம நேயத்தின் புதுமைப் பெண்ணுக — புரட்சித் தமிழச்சியாக அப்போது அவனுக்குரிய அம்மான் மகள் அன்னக்கொடி அழகு காட்டியிருக்கலாம்!

நாட்டாண்மைக் காரர் ஆவணத்தான் கோட்டைக் குடியிருப்பைப் பொறுத்த மட்டில், மட்டில்லாப் பெருமையைச் சேர்த்து வைத்துக் கொண்டிருந்தார் என்பது பொய்யல்ல. ஆனுலும், வெறும் பெருமை மாத்திரம் ஒரு சமுதாயத்தில் தலை உயர்த்தி நடக்கப் பற்றுவதில்லை. மனிதப் பிண்டத்துக்கு யதார்த்தமான பெருமை ஏற்பட வேண்டுமேயானுல், பணம் காசுதான் முதல்படியாக வேண்டும். பணம் இருந்துவிட்டால், பெருமை தன்னுல் வரும். வீரமணியின் இத்தகைய பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஆதிமூலத் தேவரால் ஈடுகொடுக்க இயலாமற் போய்விட்டது. தென்புறத் தாழ்வாரத்தில் இருந்த குதிர்களிலே நெல்லையும், உட்புறத்தாய் வீட்டில் இருந்த ''மாந்தலை' தேக்குப் பெட்டகத்தில் பணங்களையும் கொட்டி அளந்து குவித்து வைத்திருந்தவர்தான் பெரியவர். ஆனுல், தற்போது காலம் மாறி விட்டது. எல்லாம் 'ஆண்டுமாறி' விட்டது. புதுப் பணக்காரர்களுக்கு மத்தியிலே, பழைய பணக்காரர்களால் தலைநிமிர்ந்து கால் ஊன்றி நிற்க முடியவில்லை. ஆகவே, இந்நிலைக்கு தேவர் மட்டிலும் எங்ஙனம் விதிவிலக்கு ஆகக் கூடும்?

செயற்கை ஒளி சரம் கட்டிப் பரவியது.

''தம்பி'', என்று பரிவுடன் கூப்பிட்டார் ஆதிமூலம். சோகத்தின் பயங்கரமான மெல்லிய இழைகள் இப்போது அவரது முகத்தில் தடம்காட்டவில்லை. ''வீரமணி, என்னமோ சொல்ல வாயை எடுத்தாய். சொல்ல வந்ததை — அல்லது சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் அப்படியே மருள் கொண்டாப்பிலே நின்னிட்டியேப்பா?'' என்று வினவினுர் அவர்.

வீரமணி பெருமூச்சு விட்டான். அவன் செவிகளிலே மறுபடியும் அந்த வெள்ளைக் காளை மாட்டின் அபய ஒலம் கேட்க ஆரம்பித்துவிட்டது. அவனுடைய''மானுபிமானம்'' சிலிர்ப்படைந்தது. அத்தோடு

அவனுக்கு உண்டான ''மான அவமான' உணர்ச்சியும் விழித்துக் கொண்டது. அப்பாவின் கேள்விக்கு விடை சொல்லாமல், தென் பக்கம் மடங்கி நடந்தான்.

வீரமணியைத் தொடரலானார் ஆதிமூலம்.

''எங்கே தம்பி போறே?''

''அம்மான் வீட்டு வெள்ளைக் காளை பசியினாலே கத்திக்கிட்டு இருக்குது, பாவம். அதுக்குப் பரணியிலேயிருந்து வைக்கோல் பிடுங்கிப் போடப்போறேன்,'' என்று சொல்லிக்கொண்டே, கொட்டகை விட்டத்தில் ஒட்டிக் கிடந்த வாங்கரிவாளை எடுத்துப் பிடித்து 'வாகு' கணித்துத் திருப்பினான் வீரமணி. பிறகு, வைக்கோல் போரை நோக்கிக் குறி வைத்து வாங்கரிவாளைச் செலுத்திய நேரத்தில், அந்த வாங்கரிவாள் தட்டிப் பறித்து வீசப்பட்டதைத்தான் அப்போது அவனால் உணர முடிந்தது. ''அப்பா!'' என்று கோபாவேசத்தோடு கத்திவிட்டான் வீரமணி.

''வீரமணி!'' என்று பெரியவர் பதிலுக்குக் கூச்சலிட்டுக் குரல் கொடுக்க மறக்கவில்லை. ''உன்னைக் கொஞ்ச நாளாய் நான் கவனிச்சுக்கிட்டுத்தான் வர்றேன். உன்னோட பொடி தூவின பேச்சு வார்த்தைங்களையும், உன்னை யாரோ சொக்குப் பொடி தூவி மயக்கிட்டது கணக்கிலே நீ கணக்கு வழக்கு மட்டுப்படாமல் மயங்கிக் கிறங்கித் தடுமாறித் தவிச்சுக்கிட்டுத் திரிகிற போக்குங்களையும் நான் குறி வச்சுப் படிச்சுக்கிடத் தப்பல்லே என்கிற துப்பை மட்டுக்கும் நீ லவலேசமும் மறந்துபுடாதே!'' என்றார். ரவை நாழிக்கு முன்னர் அருமைப் புதல்வனை அதட்டி

**செங்கை மாவட்டத்திலுள்ள வேடந்தாங்கலிலே அஞ்சலகத்தில் ஜூன் 3-ந் தேதியிலிருந்து பதிக்கப்பட்டு வரும் சிறப்பு அஞ்சல் முத்திரையில் இரு நாரைகளின் உருவம் இடம் பெறுகிறது. வேடந்தாங்கல் புகழ்மிக்க பறவைச் சரணாலயமாதலால் இதனைக் குறிக்கும் வகையில் இந்த முத்திரை பதிக்கப்படுகிறது.**

அலட்டின குரலிலே இழையோடியிருந்த அந்தச் சூடு இப்போது தடம் காட்டவில்லைதான்!

ஆனால், வீரமணியோ தன் அருமைத் தந்தையாரின் அதிகாரத் தெர்ணியைச் சட்டை செய்தவனாகத் தோன்றக் காணோம். சட்டையை இழுத்துவிட்டவாறு, பரணடியிலே சிந்திக் கிடந்த வைக்கோல் சிதறல்களைக் கூட்டிப் பெருக்கி ஒரு 'குடங்கை' பொறுக்கி அள்ளிக் கொண்டு தன் போக்கில்—தன் தடத்தில் திரும்பி, மாட்டுக்கொட்டடியை நோக்கி நடந்தான்.

''ஏ, வீரமணி! உன் புத்தி பிசகிப் போச்சுதா! இல்லை, தட்டுக் கெட்டுப் போச்சா? இல்லை, தடம் கெட்டுப் போயிடுச்சா? உனக்கு ரோசம் மானம் துளியாச்சும் இருந்திருந்தால், நீ இம்மாம் பெரிய தப்பை செய்யத் துணிவியா ? ஊருக்கு ஒசந்த குடியாய், 'மசமேராய்' வாழ்ந்து வந்த நம்ப குடும்பத்தை சொந்தத்துக்குள்ளே சொந்தம்கொண்ட உன் அம்மான் இத்தி கூட ரோசிக்காமல் கச்சேரிப்படிக்கு இழுத்துப் புட்டான்! அத்தோடே மனசு அடங்காமல், இப்ப நம்பளை ஊர்ச் சமுதாயத்து முச்சந்தியிலே வேறே சந்தி சிரிக்க வைக்கப் போறதாய்ச் சவால் விட்டுக்கிட்டும் இருக்கான்! இந்த இடு சாமவேளையிலே, நன்னி கெட்ட அந்தப் புறக்குடிப் பயல் ராமையத் தேவனோட வெள்ளைக் காளை பாவத்துக்கு உண்டான கூலியை அனுபவிக்கிறதாட்டம் நம்ப கிட்டே வந்து சரண் அடைஞ்சிருக்குது. வலியத் தேடி வந்திருக்கிற இந்த அயனான ஒண்ணாம் நம்பர் சந்தர்ப்பத்தை எப்படி எப்படியெல்லாமோ உபயோகப்படுத்திக்கிட்டு இந்த வெள்ளைக் காளையின் மூலமாக உன் அருமை அம்மான் ராமையாவுக்குப் புத்தி படிச்சுக் கொடுக்க வேணும்னு ரோசனை பண்ணி வச்சிருக்கேன். நீ என்னடான்னா, வெண்ணெய் திரண்டு வாரப்ப தாழியைப் போட்டு உடைச்சு நொறுக்கிற மாதிரி, இருந்திருந்து ஒரு வாயில்லாச் சீவனுக்காகப் பரிஞ்சுக்கிட்டு இரக்கப்பட்டு அதுக்குத் தீனி வீசுறதுக்குத் துடிச்சுக்கிட்டு இருக்கியேப்பா? . . .''

பயம் ஊட்டும் ரீதியிலே நயம் சொட்டச் சொற்களை வாரி வழங்கிய வண்ணம், ஆதிமூலத் தேவர் தொழுவத்தை நெருங்குவதற்கும், கையிலிருந்த வைக்கோலை அந்த வெள்ளைக் காளைக்கு முன்னே வீரமணி இதமும் பதமுமாக வீசுவதற்கும் கன கச்சிதமாகத்தான் இருந்தது.

ஆனால் . . . ?

காய்ந்த மாடு கம்பிலே விழுந்தது என்பார்கள் அல்லவா? — அந்தப் பாவனையில் வைக்கோல் பிசிறுகளைக் கண்டதும் வெள்ளைக் காளை ஒரே தாவாகத் தாவி, கொம்புகளைச் சிலுப்பி, வாலை உலுக்கியபடி நாக்கை நீட்டியது. ஆனால் பாவம், ஒரு பிரி மட்டும்தான் அதன் வாய்க்கு எட்டியது. காலுக்கு எட்டிய மிச்சம் மீதி வைக்கோல் எல்லாம் அதன் வாய்க்கு எட்ட முடியாமல் போயிற்று. வெள்ளைக் காலில் முடிச்சுப் போட்டுப் பிணைக்கப்பட்டிருந்த வெள்ளைக் காளை அவ்வளவு லகுவில் பிடிக்கயிற்றை அறுத்துக்கொண்டு விடுதலை பெற்று விட முடியுமா? இல்லை, அவ்வாறு விடுதலை அளிக்கத்தான் ஊர் நாட்டாண்மைக்காரர் அவ்வளவு லேசில் இளகி விடுவாரா? — ஒரே எட்டில் பாய்ந்தார் பெரியவர். பசி தூண்டப் பெற்ற நிலையிலே, வாய்க்கு எட்டிய வைக்கோற்பிரியை மென்று அசை போட்டதோடு பசுவாகக் காட்சியளித்த வெள்ளைக் காளையின் காலடியில் கிடந்த வைக்கோல் 'சாடா'வையும் அப்படியே குண்டுக் கட்டாகக் கூட்டிக் குவித்து அள்ளிக் கொண்டு அதே பாய்ச்சலோடு மறுகி தம்முடைய பசுக்களுக்கும் காளைகளுக்கும் தூவிவிட்டு கையைத் துடைத்துக்கொண்டு பிறகு தமது கருக்கரிவாள் மீசையையும் முறுக்கி விட்டுக் கொள்ளலானார்.

வீரமணிக்கு அப்பாவின் செயல் அவமானத்தை மட்டும் தூண்டவில்லை ; ஆத்திரத்தையும் தூண்டவே செய்தது. ''அப்பா, நம்மளோட கோபதாபத்தையெல்லாம் ஒரு பாவமும் அறியாத இந்த வாயில்லாச் சீவன் கிட்டவா காட்டுவீங்க? உங்க சடனைக்கும் ஆத்திரத்துக்கும் பதில் சொல்ல வேண்டியவர் நீங்க அடிக்கடி குத்திக் காட்டுற மாதிரி என்னோட அருமை அம்மான்தான்; அதொப்ப, அம்மானோட சங்கடத்துக்கும் சவாலுக்கும் பதில் சொல்லித் தீர வேண்

## வேண்டுகோள்!

காகித விலை உயர்வின் காரணமாக 1—7—'74 முதல், 'தமிழரசு' இதழின் விலை 40 காசிலிருந்து 50 காசாக உயர்த்தப்படுகிறது. எனவே, 1—7—'74 லிருந்து சந்தா விகிதம் கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

**'தமிழரசு' தமிழ்.**

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | (உள்நாடு) | ரூ. 12.00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. 25.00 |
| அரையாண்டு | (உள்நாடு) | ரூ. 6.00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. 13.00 |

**'தமிழரசு' ஆங்கிலம்.**

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | (உள்நாடு) | ரூ. 6.00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. 13.00 |

முகவர்களும், சந்தாதாரர்களும், வாசகர்களும் இந்த மாற்றத்தை நினைவிற் கொள்ள வேண்டுகிறோம். பழைய சந்தாதாரர்களுக்கு 1—7—'74 முதல் புதிய விகிதப்படி மாற்றம் செய்து அனுப்பப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிருவாக மேலாளர்,
'தமிழரசு',
அரசினர் தோட்டம், சென்னை-600002.

டிய விதி உங்களுக்கு உண்டு. உங்க ரெண்டு பேருக்கும் ஊடாலே நீறு பூத்த நெருப்பாக பரஸ்பரம் ஒரு வன்ம உணர்ச்சி—பகை உணர்ச்சி முட்டி மோதி வெடிக்க வேளை பார்த்துக்கிட்டு இருக்கையிலே உங்க ரெண்டு பேருக்குமே அப்பாற்பட்ட ஒரு காளையின் விசாரத்தை ஏதுக்கு நாம விலை கொடுத்து வாங்க முனைய வேணும்!'' என்று வேகம் வடிந்த குரலெடுத்துக் கேட்கலானான் இளவட்டம்!

''தம்பி, நீ சொல்லாமலேயே நியாயம் எது, அநியாயம் எது என்கிற சங்கதியெல்லாம் எனக்குத் தீரத் தெளியப் புரியும். சீட்டாட்டத்தைப் பற்றிஉனக்கு ஒண்ணும் தெரியாதிண்ணு தான் நான் நினைச்சுக்கிட்டு இருக்கேன். ஒரு வேளை, தெரிஞ்சிருந்தாலும் தெரிஞ்சிருக்கலாம். சீட்டு ஆட்டம் போடுறப்ப, துருப்புச் சீட்டு கைக்குக் கிடைச்சிட்டா, அதை யாரும் வெளியே விட்டுப் புடமாட்டாங்க. எதிரி தோற்றுப் பூடுவானே அப்படின்னு தர்மம் பார்த்தால், அப்பாலே, அந்த துருப்புச் சீட்டை வச்சிருக்கக் கூடிய பேர்வழியே மண்ணைத்தான் கவ்வ வேண்டி வரும். அதை ஒத்துத்தான் இந்தக் காளைக் கதையும்! . . . ஆயிரம் வந்தாலும் சரி, ஆயிரம் போனாலும் சரி ; குழி பறிச்சுத்தான் குழி முயலைப் பிடிப்பாங்களாம். நானும் உன் அருமை அம்மானை அவனுக்குச் சொந்தமான இந்த வெள்ளையைப் பகடையாக வச்சுத்தான் ஒரு கை பார்க்கப் போறேன்! . . . குன்னக்குடிக்குக் காவடி எடுத்தாலும், ராமையா இனி அவனோட காளையை என்கிட்டேயிருந்து மீட்டுக்கிடவே ஏலாதாக்கும்! ராத்திரி முச்சூடும் மாட்டுக்காரப் பயலோடே சேர்ந்து நான் கண்ணிலே விளக்கெண்ணெய் ஊற்றிக்கிட்டுத் தான் விடிய விடிய கண் விழிச்சிருக்கப் போறேன்!.. தலைமுறை தத்துவமாய் ஊர் நாட்டாண்மைக்கு அதிகாரம் கொண்ட இந்த ஆதிமூலத்தை சந்திக்கு இழுக்கிறதுக்கு மனப்பால் குடிச்சுக்கிட்டு இருக்கிற உன் அம்மான் ராமையாவுக்கு ஈரலிலே பித்தா, இல்லை எலும்பிலே பித்தான்னு சோதிச்சுப் பிட வேணுமா? . . ஊம், சொல்லு தம்பி, சொல்லு!''

பெரியவருக்கு மூப்பு வந்துவிட்டது. ஆகவே, மூச்சு வாங்கியதில் வியப்பு ஏதுமில்லை.

''நான் சொல்றது இருக்கட்டும் ஒரு முடுக்கிலே. இப்ப நீங்க சொல்லுங்கப்பா! . . . உங்களுக்கு உண்டான மான ரோசம் இம்மாம் தொலைவுக்கு விழிச்சுக்கிட்டு இருக்கிறதைப் பார்த்தால், நாளைக்குப் பொழுது விடிஞ்சதும் விடியாததுமாய் அம்மான் கிட்டே போய், நீங்க அம்மானுக்குப் பட்டிருக்கிற கடன் பூராத்தையும் கட்டிப்பிடுவீங்கன்னு தோணுதுங்களே? என் யூகம் சரிதானுங்களா? அப்படி நீங்க கடனைத் தீர்த்தால்தான், அம்மானோடஇந்தக்காளையைப் பகடையாக்கி நீங்க சொக்கட்டான் விளையாடுறதுக்கு ஒரு நியாயமான அர்த்தம் இருக்க வாய்க்கும்! இல்லிங்களா, அப்பா? — சொல்லுங்கப்பா, சொல்லுங்க! . . .''

வீரமணியின் தர்க்க வாதம் நல்ல பாம்பைச் சீண்டி விட்ட கதையாகவே ஆயிற்று. பெரியவரின் இடுக்கு விழுந்திருந்த கண்கள் இரண்டுமே மிளகாய்ப் பழங்களாகச் சிவந்து விட்டன. அந்தச் சிவப்பை மேலும் பயங்கரமாக விளக்கிக் காட்டியது வெள்ளி நிலா. அவர் கோபாவேசத்தோடு வீரமணியை விழுங்கி விடுகிற மாதிரி பார்த்தார் ; பார்த்ததோடு சரி! — விழுங்கி விடவில்லை. மீசையில் இடம் தெரியாமல் வந்து குந்திய ஈயை ஆத்திரம் சூடு பறக்க விரட்டிவிட்டு, 'தாழ்வாயை'த் தடவியபடியோ அல்லது தடவிக் கொடுத்தபடியோ வாயைத் திறக்கலானார்.

அதற்குள்

ராமையாத் தேவர் பொறுமை இழந்தவராக, தட்டி மறைவினின்றும் வெளிப்பட்டார். தன்னுடைய தேள் கொடுக்கு மீசையை நீவி விட்டவாறு, ''நாட்டாமைக்கார ஐயாவே! உங்க அன்புப் பிள்ளை — என் அருமை மாப்பிள்ளை கேட்ட கேள்விக்குச் 'சவாப்' சொல்லுங்களேன்!'' என்று நையாண்டிக் குரலிலே பேசினார்.

வீரமணி மலைத்தான். அடிமடியில் ஒளிந்திருந்த அந்த வைரச் சிமிக்கிகளைக் 'கமுக்கமாக'த் தடவிப் பார்த்துக் கொண்டான். அவன் சிந்தனை எங்கெல்லாமோ, எப்படியெல்லாமோ சுழல ஆரம்பித்தது. !

பெரியவர் ஆதிமூலம் எரித்து விடுகிற உத்தேசத்தோடு ராமையாவை விழி பிதுங்க விழித்துப் பார்த்தார் ; கட்டுக் குடுமி நிலவுக் காற்றில் ஊசலாட, ''டேய், ராமையா !'' என்று ஓங்காரமாகச் சிம்மக் குரலெடுத்துக் கூவினார் ஊர் அம்பலக்காரர்! . . .

(வளரும்)

# ஜப்பானில் பெண் போலீஸ்



இந்தியாவின் பிற மாநிலங்களிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் பெண் போலீஸ் துறை தொடங்கப்பட்டிருப்பதையும் அவர்கள் ஆற்றவிருக்கின்ற பணிகளைப் பற்றியும் நாமறிவோம்.

இந்தியாவில் மட்டுமின்றி உலகின் பல பகுதிகளிலும் பெண் போலீஸ் துறை உண்டு. ஜப்பானில் உள்ள பெண் போலீசார் எந்தெந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்பதைத் தெரிந்து கொள்வோமா?

டோகியோ நகரில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு ஜப்பானியப் பெண் போலீசாரிடம் விடப்பட்டுள்ளது. சாலை ஓரங்களில் அதிக நேரம் நிறுத்தப்படும் கார்களைக் கண்டுபிடிக்க 'ரோந்து' வருவது





இப்போலீசாரின் பணிகளில் ஒன்று. அத்தகைய கார்களின் டயர்களிலும், தெருவின் அப் பகுதியிலும் சாக்கட்டியினால் இவர்கள் குறிப்பிடுவதுண்டு. இப் பெண் போலீசார் அங்கு வரும்போது அக்குறியிட்ட கார் இன்னும் எடுக்கப்படவில்லை என்றால், அதன் சொந்தக்காரர் அல்லது டிரைவர் மீது நடவடிக்கை எடுப்பார்கள்.

காலையில் பள்ளி செல்லும் சிறுவர் சிறுமியர் குழந்தைகள் இவர்களின் பாதுகாவலராகவும் பணி புரிகின்றனர். இவர்களைப் பாதுகாப்புடன் சாலையைக் கடக்கச் செய்கின்றனர். சாலை விதிகளையும் பள்ளிகளுக்குச் சென்று குழந்தைகளுக்குப் போதிக்கின்றனர்.



டோக்கியோவில் போக்குவரத்தைக் கண்காணிக்கும் பிரிவில் (Traffic) 850 போலீஸ்காரர்கள் இருக்கின்றனர். இவர்களில் பாதிப் பேர்கள் பெண்கள், சென்ற மூன்றாண்டில் வேலைக்குச் சேர்ந்த இவர்கள் 20 வயதுள்ள மங்கையர்கள்.

இங்கு அவசர உதவிக்கு 110 எண்ணுக்கு டயல் செய்ய வேண்டும். இங்குள்ள கண்ட்ரோல் அறையில் 24 அதிகாரிகள் வேலை பார்க்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் பெண்களே! இவர்கள் குரல் டெலிபோனில் எடுப்பாக இருப்பதினாலேயே இவ்வேலைக்கு இவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். ஜேப்படிக்காரர்களைக் கண்டுபிடிப்பது, துப்பறியும் வேலை செய்வது முதலிய வேலைகளிலும் பெண் போலீசார் ஈடுபடுகிறார்கள். 1950ல் தான் முதன் முதலாகத் துப்பறியும் வேலைக்குப் பெண்கள் நியமிக்கப்படலாயினர்.

காஸஒகோ டாகிமா என்கிற பெண் போலீஸ் அதிகாரியைக் கண்டாலே ஜேப்படிக்காரர்களுக்கு மிக நடுக்கமாம்! இவருக்கு 17 ஆண்டு சர்வீஸ். சூப்பரிண்டெண்ட் ஜெனரல் பரிசை இவர் 100 தடவைக்கு மேல் பெற்றிருக்கிறார்!

## சேலத்தில் கிராமிய விளையாட்டுப்போட்டி.

கடந்த பிப்ரவரி மாதம் சேலத்தில் நடைபெற்ற நான் காவது அனைத்து இந்திய கிராமிய விளையாட்டுப் போட்டிகளில் 361 பெண் கள் உட்பட மொத்தம் சுமார் ஆயிரத்து 350 கிராமிய விளையாட்டுக்காரர்கள் பங் கெடுத்துக் கொண்டனர். முந்தைய கிராமிய விளையாட் டுப் போட்டிகள் பாட்டியாலா, ஜெய்பூர், புது தில்லி ஆகிய இடங்களில் நடைபெற்றன. தென் இந்தியாவில் நடை பெறுவது இதுவே முதல் தடவையாகும்.

சேலம் வட்டாரத்து கிரா மிய மக்கள், கால்பந்து, வாலி பால், மல்யுத்தம், ஈட்டி எரி தல், கபடி, கொக்கோ முத லிய பல்வகையான ஆட்டப் போட்டிகளைக் கண்டு களிக் கும் ஓர் அரிய வாய்ப்பைப் பெற்றனர்.

சிறந்த ஆட்டக்காரர்களுக் கான பரிசை டில்லி அணியும், கவர்ச்சி மிக்க சிறப்பான அணிவகுப்புக்கான பரிசை அஸ்ஸாம் அணியும் பெற்றது.



## கல் மரப் பூங்கா

நீங்கள் படத்தில் காண்பது கல்மரம் ஒன்றின் வெட்டு முகத் தோற்றம். இது தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவக் கரையில் உள்ளது. இலட்சக் கணக்கான ஆண்டுகளாக இயற்கை அன்னையினால் பாது காக்கப்பட்டு வந்துள்ள மிகப் பழங்கால மரங்களின் ஒரு பகுதியே இது.

கல்லுருவாகியுள்ள இந்த மரங்கள் இரண்டு கோடி ஆண்டு கட்கு முற்பட்டவை எனப் புவி இயலாளர்கள் மதிப்பிட்டிருக் கிறார்கள். பத்துக் கோடி ஆண்டுகட்கு முற்பட்டவை எனக் கருதப்படுகிற மணல் பாறை களில் இந்தக் கல்மரம் புதைந்து கிடக்கிறது. அங்கே காணப்படும் இந்த மணல் பாறை அமைப்பு களையும் மிகப் பெரிய கல் மரங் களையும் இணைத்துப் பார்க்கும் போது, ஒரு காலத்தில் இந்தப் பெரிய அடிமரங்கள் உயர்ந்த மலைப்பகுதிகளிலிருந்து நதிகள் மூலமாகவும் காட்டாறுகள் மூல மாகவும் நீரில் அடித்துக் கொண்டு வரப்பட்டு, கடலில் மணலுடன் புதைந்து கிடந் திருக்க வேண்டும் என்ற முடி வுக்கு வரவேண்டியிருக்கிறது.

இந்தக் கல்மரங்களில் வேர் களோ, இலைகளோ காணப்படா தது, இந்தக் கருத்தை உறுதிப் படுத்துவதாக உள்ளது. பச்சை மரங்கள் பலகோடி ஆண்டுகளாக மணலில் புதைந்திருக்கும் போது, மரங்களில் சிலிக்கா என்னும் மணல் பொருள் ஏறி, மரத்தின் தன்மை முற்றிலும் மாறுபட்டு, இந்தக் கல்மரங்க ளாகக் காணப்படுகின்றன.

இவை சுமார் 800 மீட்டருக்கு மேல் உயரமுள்ள பகுதிகளில் வளரும் மர வகையைச் சேர்ந்தவை எனக் கண்டுபிடிக் கப் பட்டிருக்கிறது. எனவே, கடந்த காலத்தில் கிழக்குக் கடற் கரை நெடுகிலும் மரங்களடர்ந்த மிக உயரமான மலைகள் இருந் திருக்கக்கூடும்.

இயற்கை அன்னை வழங்கி யுள்ள இந்த அரிய கருவூலத்தை இந்தியப் புவி இயல் ஆராய்ச்சித் துறையினர் நமது வருங்காலச் சந்ததியினருக்காகப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். தமிழ்நாட்டில் திருவக்கரையி லும், திருச்சி மாவட்டத்தி லுள்ள சாத்தனூரிலும் கல்மரப் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள் ளன.



# கேளுங்கள் கொடுக்கப்படும்

**ஆர்.எம்**

**வினு :** எனது நிலம் மணற்பாங்கான நிலம். ஒரு ஏக்கருக்கு 10 வண்டி தொழு. உரம் அல்லது கம்போஸ்ட் உரம் போடும்படிக் கூறியுள்ளீர்கள். இந்த இரண்டும் இல்லாவிட்டால் பின்னைக்காய் பிண்ணுக்கு மாத்திரம் நன்செய் வயலுக்குப் போடலாமா? பின்னைக்காய் பிண்ணுக்கில் என்.பி.கே. எவ்வளவு இருக்கிறது? ஏக்கருக்கு எத்தனை கிலோர் பிண்ணுக்கு தேவை? இந்தப் பிண்ணுக்கைத் தொடர்ந்து போடுவது நல்லதா?

டாடா பைசன் ராலீஸ் வழங்கும் புதிய ஃப்யூராடன் 3 ஜி குருணைகள் என்ற பூச்சி மருந்து நல்லதுதானு? இந்த மருந்தை வயலுக்குப் போடலாமா? விவசாய ஆராய்ச்சியாளர் இந்த மருந்தை உபயோகித்துப் பரிசோதனை பார்த்தது உண்டா?

நன்செய் நிலத்தில் நிலக்கடலை போட்டால் மண் வளத்தைப் பூராவையும் எடுத்து விடாதா? நிலத்தில் இருந்து எவ்விதச் சத்தை எடுத்துக் கொள்கிறது? அதை எவ்வாறு ஈடுசெய்யலாம்?

''தமிழரசு'' மார்ச் 16, 1974 இதழில் 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியில் மதுரை மாவட்ட அன்பர் ஒருவரின் கேள்விக்கு அளித்துள்ள பதிலில் நிலக்கடலைக்கு 'போராக்ஸ்' என்ற வெண்காரம் போடும்படி கூறியுள்ளீர்கள். இதை நன்செய் வயலில் போடலாமா? மண்ணின் குணத்தை மாற்றுதா? நெற்பயிர் யாதொரு கேடும் அடையாதா? அப்படி அடைந்தால் என்ன செய்ய வேண்டும்?

1—6—1974 இதழில் என்னுடைய கேள்விகளுக்குத் தாங்கள் கட்டாயம் பதில் தெரிவிக்கும்படி வேண்டுகின்றேன்.

—எஸ். வெங்கடாசலமய்யர்
பெருமாள் கோயில் சந்து,
பூதபாண்டி கிராமம்
(அஞ்சல்),
கன்னியாகுமரி மாவட்டம்.

**விடை :** தாங்கள் 22—5—1974 அன்று இக் கேள்விகளை எழுதியுள்ளீர்கள், தங்கள் கடிதம் ''தமிழரசு'' அலுவலகத்திற்கு 25—5—74 அன்று தான் வந்து சேர்ந்துள்ளது. பல கேள்விகளைக் கேட்டுவிட்டு 1—6—1974 தேதிய 'தமிழரசு' இதழில் கட்டாயம் பதில் அளிக்கும்படி கேட்டுள்ளீர்கள். (இப்படிப் பலர் கடைசி நேரத்தில் கேள்வி அனுப்பி விட்டு, உடன் பதில் அளிக்கும்படி கேட்டுள்ளார்கள்).

''கேளுங்கள் கொடுக்கப்படும்'' என்ற பகுதிக்கான விடைகள் ஒரு திங்களுக்கு முன்பாகவே எழுதப்பட்டு, ஏறத்தாழ 25 நாட்களுக்கு முன்பாகவே அச்சகத்திற்கு அனுப்பப்பட்டு விடுகின்றன என்று முன்பே குறிப்பிட்டு எழுதியிருந்தோம். அப்படி இருந்தும் 22—5—74-ல் பல கேள்விகளைக் கேட்டு விட்டு, 1—6—1974 இதழிலேயே பதில் அளிக்கும்படி கேட்டுள்ளீர்கள். எனவே, உங்கள் வேண்டுகோளை 1—6—74 தேதிய இதழில் நிறைவேற்ற முடியாமைக்குவருந்துவதுடன், அடுத்த இதழில் வெளியிட ஆவன செய்யப்பட்டுள்ளது.

பின்னைப் பிண்ணுக்கை நன்செய் வயலுக்கு அடியுரமாகப் போடலாம். இதில் 2.7 சத தழைச் சத்தும், 1.1 சத அளவு மணிச் சத்தும் உள்ளது. அதாவது 100 கிலோ பின்னைப் பிண்ணுக்கில் 2.7 கிலோ தழை சத்தும்; 1.1 கிலோ மணிச் சத்தும் உள்ளன. இவை முறையே 13.5 கிலோ அமோனியம் சல்பேட், 6.8 கிலோ சூப்பர் பாஸ்பேட் ஆகியவற்றிற்குச் சமமானதாகும். இதில் சாம்பல் சத்து இல்லை. ஆகவே தாங்கள் என்ன நெல் பயிரிட விரும்புகின்றீர்களோ அதற்குப் பரிந்துரைக்கப்படும் அடியுர அளவுக்கு ஏற்ப கணக்கிட்டுக் கொண்டு, தேவைப்படும் சூப்பர் பாஸ்பேட்டையும், மியூரியேட் ஆஃப் பொட்டாஷையும் சேர்த்துப் பின்னைப் பிண்ணுக்கை அடியுரமாக இடலாம். பின்னைப் பிண்ணுக்கைத் தொடர்ந்து அடியுரமாக இடலாம்.

டாடா பைசன் நிறுவனம் தயாரித்து விற்பனை செய்து வரும் 'ஃப்யூரடான்' (Furadan) நல்ல மருந்துதான். 3ஜி என்பது 3 சத குருணைகளைக் (Granules) குறிக்கும். இந்த மருந்தை வேளாண்மை ஆராய்ச்சியாளர்கள் பரிசோதித்துப் பார்த்த பின்புதான், நெல் குருத்துப் பூச்சி, ஆனைக் கொம்பன் ஈ, நெல் இலைச் சுருட்டும் புழு, சோளக் குருத்து ஈ ஆகியவைகளைக் கட்டுப்படுத்த 'ஃப்யூரடான்' உபயோகிக்கலாம் என்று பரிந்துரைத்துள்ளனர்.

நன்செய் நிலத்தில் நிலக்கடலை போட்டால், அது மண் வளத்தை முழு அளவில் குறைத்து விடும் என்று நினைப்பது தவறு. பொதுவாக எந்தப் பயிரிட்டாலும், நிலத்திலிருந்து சத்துக்களை எடுத்துக் கொள்ளும். நிலக்கடலை இதற்கு விதிவிலக்கல்ல! எனவேதான் நில வளம் குன்றுதிருக்க, தொழு எரு, இராசயன உரம் ஆகியவைகளை இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. ஏக்கருக்கு 7 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து, 21 கிலோ சாம்பல் சத்து கொடுக்க வல்ல இராசயன உரங்களை இட்டு நன்செய் நிலத்தில் இறைவை நிலக்கடலை பயிரிடலாம்.

நன்செய் வயலில் நிலக்கடலை பயிரிட்டால் 'போராக்ஸ்' என்னும் வெண் காரம் போடலாம். இதனுல், அடுத்துப் பயிரிடப்படும் நெற்பயிருக்கு எந்த விதக் கேடும் ஏற்படாது!



தமிழ்நாட்டின்

# பசுமைப் புரட்சி

1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்

**1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்**

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

(ரூபாய் இலட்சங்களில்)

**1966-67ல் 2100.87**

**1972-73ல் 5618.15**



**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்**

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001

தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

TNSC BANK

குடவாசல்

**ஆர். கனகசபை** — தலைவர்

**சி. கிருட்டிணமூர்த்தி** — உபதலைவர்

**என். எல். ஹெப்லிகர்** — நிர்வாக இயக்குனர்

வினா : டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் (Director General I.C.A.R.) அவர்கள் சென்னையில் சமீபத்தில் ஒரு விழாவில் பேசும் போது, பிரியாணி அரிசி ரகங்களான 'புது சபர்மதி', 'பூசா—33' ஆகிய இரண்டு உயர் விளைச்சல் ரகங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தயவு கூர்ந்து தமிழ் நாட்டில் அல்லது வெளி மாநிலத்தில் அவை கிடைக்கும் விலாசத்தையும், அதைப் பயிரிடும் கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளையும் விளக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

—ஒய். அந்தோனி, பி.ஏ., பி.எல்.,
'எவர்கிரீன் பார்ம்',
மொகல்வாடி,
செங்கை மாவட்டம்.

விடை : தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறையில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1968 முதல் 1973 வரையான ஆண்டுகளில் குறுவைப் பட்டத்தில் நடத்தப்பட்ட சோதனைகளில் இருந்து பி.சி. 5—55 (சபர்மதி), பி.சி. 11—6—3 (சபர்மதி தேர்வு) ஆகிய மணமுள்ள சன்ன அரிசி கொண்ட —பிரியாணி செய்வதற்கு ஏற்ற—இரகங்கள் எக்டேருக்கு முறையே 4.4 டன், 4.0 டன் மகசூல் கொடுத்துள்ளன என்பது தெரிய வருகிறது. ஆனால் அதே காலத்தில் 'ரத்னா' என்ற சன்ன அரிசி தரும் இரகம் எக்டேருக்கு 6.5 டன் மகசூல் கொடுத்துள்ளது. தாளடிப் பருவத்தில் பி.சி. 11—6—3 என்ற இரகம் 125 நாட்களில் எக்டேருக்கு 4.5 டன் மகசூல் அளித்துள்ளது. இந்த சோதனைகளிலிருந்து பிரியாணி செய்வதற்கு ஏற்ற 'சபர்மதி' ,'சபர்மதி தேர்வு' 'ரத்னா' ஆகிய இரகங்கள் தமிழ் நாட்டிற்கு ஏற்றவை என்று தெரிய வருகிறது. தாங்கள் 'சபர்மதி தேர்வு' என்ற ரகத்தைத்தான் 'புது சபர்மதி' என்று குறிப்பிடுகின்றீர்கள் எனக் கருதுகிறோம்.

'புது சபர்மதி', 'பூசா—33' ஆகிய இரகங்களின் விதைகள் அநேகமாக தமிழ்நாட்டில் உங்களுக்குக் கிடைப்பது ஐயத்திற்கு உரியதே! இவ்விரு இரக விதைகளும் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நெல் ஆராய்ச்சிப் பிரிவிலும், ஆடுதுறையில் உள்ள மண்டல ஆராய்ச்சி நிலையத்திலும் ஓரளவிற்குக் கிடைக்கக் கூடும். முயற்சி செய்து பார்க்கவும்! ஆனால் இவ்விரு இரகங்களும் வட மாநிலங்களில் புகழ் பெற்று விளங்குவதால், அவைகளின் விதைகள் கிடைக்குமிடத்தையும், கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளையும் அறிந்திட பின்கண்ட முகவரிக்கு எழுதிக் கேட்பதே நல்லது.

The Director,
Farm Information Unit,
Directorate of Extension,
Ministry of Agriculture,
Shastri Bhavan,
New Delhi.



வினா : நான் கம்பு (கோடைப் பயிர்) பயிரிட விரும்புகின்றேன். தற்போது உள்ள சூழ் நிலைக்கு என்ன வகையான கம்பு ஏற்றது? அல்லது வேறு ஏதேனும் பயிரிட இந்தப் பருவம் உகந்ததா? அப்படி உகந்தது என்றால் என்ன வகைப் பயிர் செய்யலாம். கம்பை விட இலாபகரமானதாக இருக்குமா? என் நிலம் மணல் கலந்த செம்மண் பூமி.

—எம். ராஜு, பி. காம்.,
சாத்தமங்கலம்,
திருமானூர் (வழி),
திருச்சி மாவட்டம்.

விடை : தாங்கள் ஜூலை—ஆகஸ்ட் மாதங்களில் இறைவையில் எச். பி. 1 அல்லது எச். பி. 3 ரகக் கம்பு பயிரிடலாம். கம்பு பயிரிடுவதற்குத் தங்கள் நிலம் ஏற்றதே. குறைந்த செலவில் நிறைந்த இலாபம் பெற எச். பி. கம்பு இரகங்கள் மிகவும் ஏற்றவை. இவைகளைப் பயிரிட அதிகம் பாடுபட வேண்டியதில்லை. ஆனால் மற்றப் பயிர்களுக்கு அதிகம் செலவு செய்வதுடன், அதிக அளவு பாடுபட்டாக வேண்டும். கம்பு சாகுபடி முறைகள் அனைத்தும் விளக்கமாக 1—4—74 தேதிய 'தமிழரசு' இதழில் 47,48 பக்கங்களில் வெளியிடப்பட்டு உள்ளன. அவைகளைத் தயவு செய்து படித்து அறிந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தாங்கள் விரும்பினால் ஜூன்—ஜூலை மாதங்களில் கொஞ்சம் நிலத்தில் இறைவையாகச் சூரிய காந்தி பயிரிட்டுப் பார்க்கலாம். இதுவும் அதிகப் பாடு இல்லாமல், நிறைந்த இலாபம் தரக்கூடிய பயிராக உள்ளது. சூரியகாந்தி பற்றிய முழுவிவரமும் அறிய தயவு செய்து 16—6—73 தேதிய 'தமிழரசு' இதழைப் படியுங்கள்.



வினா: மம்சாபுரம் கிராமத்தைச் சேர்ந்த நான் பி.ஏ. இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டு இருக்கிறேன். விவசாயத்தையும் நடத்துகிறேன். எனது நிலத்தில் களைகள் அதிகம் முளைக்கின்றன. இதைப் போக்க என்ன செய்ய வேண்டும்? மேலும் கிணற்றில் பாசிகள் கொடி போல் படர்ந்து பம்புக் குழாயை அடைத்து விடுகிறது. இப் பாசிகளை எடுத்தாலும் மறுபடி சில நாட்களுக்குள் அதிக அளவில் வளர்ந்து விடுகிறது. இதைப் போக்குவது எப்படி என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

—பெ. ஜெயராம்,
மம்சாபுரம்,
திருவில்லிபுத்தூர் வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

விடை: நெல், கரும்பு ஆகிய பயிர்களில் தோன்றும் களைகளை ஒழிக்க முறையே 'ஸ்டாம்ப் எப். 34', 'அன்சார்-529' போன்ற மருந்துகள் வேளாண்மைத்துறையால் பரிந்துரைக்கப்படுகின்றன. என்ன வகையான களை என்பதனைத் தெரிவித்தால்தான் அதற்குரிய களைக்கொல்லியையும், அதன் அளவையும் உங்களுக்குத் தெரிவிக்க இயலும். எனவே, உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களைச் சந்தித்து, உங்கள் வயலில் உள்ள களைகளைக் காட்டி, அவைகளைப் போக்குவதற்குரிய களைக்கொல்லியையும், அதைப் பயன்படுத்தும் முறையையும் தெரிந்து கொள்வதே நலம்.

தங்கள் கிணற்றில் உள்ள பாசிகளை அகற்ற முதலில் தங்கள் கிணற்றின் சுவர்களைத் தேய்த்து (முடிந்த அளவுக்குத்) தூய்மைப்படுத்த வேண்டும். பிறகு தங்கள் கிணற்றில் உள்ள நீரின் அளவைக் கணக்கிட்டுக் கொண்டு 10 இலட்சம் பங்கு தண்ணீருக்கு அரை பங்கு மயில்துத்தும் (Copper Sulphate) என்ற அளவில் மயில்துத்தம் கலக்க வேண்டும். மயில் துத்தத்தைச் சிறுசிறு மூட்டைகளாகத் துணியில் கட்டி கிணற்றில் போடவேண்டும். ஒரு வாரத்தில் பாசிகள் மறையாவிட்டால், மீண்டும் ஒருமுறை மேற்கூறிய அளவில் மயில் துத்தம் போடவும். இதனால் பாசிகள் அறவே ஒழியும். இந்த அளவுக்கு மேல் மயில்துத்தம் போட்டால், தண்ணீரின் சுவை மாறிவிடும்! அத்தண்ணீர் கால்நடைகளுக்கும் தீங்கு விளைவிக்கும்! அத்துடன், கிணற்றில் வாழும் மீன்களுக்கும் கெடுதல் ஏற்படுத்தும். எனவே கிணற்றில் உள்ள தண்ணீரின் அளவைச் சரியாகக் கணித்துக் கொண்டு 10 இலட்சம் பங்கு தண்ணீருக்கு, அரைபங்கு மயில்துத்தம் என்ற அளவில் மயில்துத்தத்தை இட்டுக் கிண கிணற்றில் உள்ள பாசிகளை அழிக்கலாம்.



வினா: கரும்பில் அஞ்சுகம் பாசிப்பயறு, ஊடுபயிராகச் சாகுபடி செய்ததில் ஏக்கர் ஒன்றுக்கு 3 குவிண்டால் மக மகசூல் கிடைத்துள்ளது. மறுபடியும் அதே இடத்தில், செடிகளைப் பிடுங்கிக் கரும்புப் பயிர்களுக்கு மண் அணைத்துவிட்டு, அந்த இடைச்சாலில் அஞ்சுகம் பாசிப்பயறு விதைத்தால் பலன் தருமா? அதனால் கரும்பிற்கு ஏதேனும் தீங்கு ஏற்படுமா?

—அ. பொன்வேல்மணி,
கரிசல்குளம் (அஞ்சல்),
விளாத்திக்குளம் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.

விடை: தாங்கள் கரும்பில் 'அஞ்சுகம்' பாசிப்பயறு பயிரிட்டு ஒருமுறை அறுவடை செய்துள்ளதிலிருந்து, தங்கள் கரும்பின் வயது தற்பொழுது 9 மாதம் அல்லது அதற்குமேல் இருக்கும் என்று எண்ணுகின்றோம். பொதுவாகக்கரும்பிற்கு உரமிடுவதை 120 நாட்களுக்குள் முடித்துவிட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. கரும்பிற்கு உரமிட்ட பிறகு, கரும்பில் மீண்டும் ஊடுபயிர் செய்தல் இலாபகரமானதாக இருக்காது. கரும்பிற்குக் கிடைக்கவேண்டிய சத்துக்களை ஊடுபயிர் எடுத்துக் கொள்ளக் கூடும்! எனவே, தாங்கள் மீண்டும் ஒருமுறை அஞ்சுகம்பயிரிடுவது பயனுடையதல்ல!



வினா: எங்கள் பகுதியில் விவசாயத்திற்கு தண்ணீர் இறைக்க எஞ்சின்களுக்கு டீசல் தேவைப்படுகிறது. இந்த டீசல் எங்கள் பகுதியில் குறிப்பாக சிதம்பரம் பகுதியில் கிடைப்பதில்லை. பெட்ரோல் பங்கில் கேட்டால் எண்ணெய் இருப்பு இல்லை என போர்டு போட்டுவிட்டு, லிட்டர் ரூபாய் 1.50 என அதிக விலைவைத்து விற்கின்றனர். இதனால் எங்கள் பகுதியில் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டதுடன், விவசாயிகளும் பீதி அடைகின்றனர். அப்படி லிட்டர் 1.50-க்கு விற்றாலும் விவசாயிக்குத் தேவைஇல்லாத கார் உதிரி உறுப்புக்களை 5 அல்லது 10 ரூபாய்க்கு வாங்கினால் எண்ணெய் உண்டு என்கின்றனர். இதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுப்பதுடன், விவசாயிகளுக்கு எண்ணெய் நியாய விலையில் கிடைக்கச் செய்யுமா?

எங்கள் உழவர் விவாதக் குழு மூலம் பல விவசாயிகளுக்கு திண்டிவனம் 10 மணிலா விதை விஸ்தரிக்கப்பட்டு, பலர் பயிரிட்டுள்ளனர். இந்த மணிலாவிற்குக் காய்த்துளைப்பானைத் தடுக்க கடைசி சாலில் அல்லது களை எடுக்கும் போதாவது பி.எச்.சி. 10 சதத்தூள் தூவ வேண்டும். இந்தத்தூள் எங்கள் குமராட்சி ஊராட்சி ஒன்றிய விவசாய கிடங்கில் கிடைப்பதில்லை. ஒரு முறை கிடங்கில் இருந்து கேட்டதற்கு, இந்த மருந்தை வைத்துக் கொண்டே இல்லை என்று கூறிவிட்டனர். இதற்கு பதில் வேறு ஏதாவது மருந்தை இந்தக் காய் துளைப்பானுக்கு இடலாமா? தயவுசெய்து அடுத்த 'தமிழரசு' இதழிலேயே பதில் கூறவும்.

—கோ. சக்கரபாணி,
அமைப்பாளர்,
உழவர் விவாதக்குழு,
வல்லம்படுகை,
தென்னார்க்காடு மாவட்டம்.

விடை: 'டீசல்' எண்ணெய் முறையாகக் கிடைக்கத் தமிழ்நாடு அரசு ஆவன செய்கிறது. ஆனால் ஒருசில வியாபாரிகள் முறை தவறி அதிக விலைக்கு விற்கக்கூடும்! அப்படிப்பட்டவர்களைப் பற்றி தகுந்த ஆதாரத்துடன், புகார் செய்யலாம். புகார் மனுவை உங்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைத்தால், அவர் தகுந்த நடவடிக்கை எடுக்கக் கூடும்.

நிலக்கடலை பயிரிடும் நிலங்களில் கறையான் தாக்கும் இடங்களில் மட்டுமே, கடைசி சாலில் அல்லது களை எடுக்கும் போது 'பி.எச்.சி.' 10 சதத்தூள் தூவும்படி பரிந்துரைக்கப்படுகிறது. தாங்கள் கூறியுள்ளபடி காய்த்துளைப்பானைத் தடுப்பதற்கல்ல! நிலக்கடலையில் தோன்றும் இளம் சிவப்புக் கம்பளிப்புழு, அசுவணி ஆகியவைகளைக் கட்டுப்படுத்தவும் 'பி.எச்.சி.' 10 சதம் தூளைச் செடிகளின் மேல் தூவலாம்.

களையான்களை ஒழிக்க பி. எச். சி, 10 சதத் தூள் கிடைக்காவிட்டால் 'ஆல்டிரின்', 'டையல்டிரின்', 'ஹெப்டோகுளோர்' போன்ற மருந்துகளை உழவில் போடலாம்.

'பி.எச்.சி.' 10 சத மருந்து உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கில் கிடைக்கவில்லை என்றால், உங்கள் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களிடம் சொல்லி, அருகில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து வரவழைத்துக்கொடுக்கச் சொல்லலாம், அல்லது உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களுக்குத் தெரிவித்தால், உடன் அவர் 'பி. எச்.சி.' 10 சத மருந்து கிடைக்க ஆவன செய்வார். எனவே, இதுபற்றி அவருக்குத் தெரிவிப்பதே சிறந்தது.

**வினா:** நான் பள்ளி இறுதி வகுப்பு (1967 மார்ச்) வரை படித்து மேலும் தட்டெழுத்துப் பயிற்சியும் பெற்றிருக்கிறேன். எனக்குத் தற்சமயம் சுமார் 24 வயது ஆகிறது. இந்த வயதுக்கு ஏற்ப நான் வளர்ந்து இராமல், வளர்ச்சி குன்றி, குள்ளமாக 4 அடி 4 அங்குல உயரத்திலேயே சின்ன் பையன் போல் இருக்கிறேன். எனவே, அங்க கீனர்கள் என்ற வரிசையில் என்னைச் சேர்த்து, வேலை வாய்ப்பு அளிக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் எனக்கு எந்தவித அங்க ஊனங்களும் கிடையாது. இரு ஊராட்சி ஒன்றியங்களில் இது பற்றி விசாரித்ததில், 'இந்த வளர்ச்சி குன்றியது அங்க ஊனமல்ல' என்று கூறியதின் காரணமாக இதைத் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு கோழிப்பண்ணை வைத்தல் அல்லது வீரிய பன்றி வளர்த்தல் போன்றவைகளுக்கு அரசு வங்கியில் பண உதவியோ அல்லது வேறு வங்கிகளில் உதவியோ கிடைக்க ஆவன செய்யுமாறு தாழ்ந்த பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

—அ. மணிவண்ணன்,
கிருஷ்ணபுரம்,
துறையூர் வட்டம்,
திருச்சிராப்பள்ளி
மாவட்டம்.

**விடை:** உண்மையிலேயே தாங்கள் ஊனமுற்றவராக இருந்தால்தான், ஊனமுற்றவர்களுக்குரிய சலுகைகளைப் பெற முடியும். தாங்கள் வளர்ச்சி இல்லாததன் காரணமாகக் குட்டையாக இருப்பதனால், ஊனமுற்றவர்களுக்குரிய சலுகைகளைப் பெறமுடியாது. இதுபற்றி ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் குறிப்பிட்டது சரியே!

கோழிப்பண்ணை அல்லது பன்றிப் பண்ணை அமைப்பதற்குரிய பண உதவி பெற உங்கள் அருகாமையில் உள்ள நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்குச் சென்று தங்கள் திட்டத்தைக்கூறி. கடன் பெற முயற்சி செய்யுங்கள். தாங்கள் கேட்கும் கடன் தொகைக்கு ஏற்றவாறு தங்களுக்குச் சொத்து மதிப்பு இருந்தால், அல்லது தங்களுக்கு ஜாமீன் கொடுக்க யாராவது முன்வந்தால் உங்களுக்கு கடன் கிடைக்கக்கூடும். தங்களுக்குக் கடன் கிடைக்க நாங்கள் எதுவும் செய்ய முடியாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வினா:** எனக்கு வயது 18. நான் சுமார் 3 நிமிடம் 40 விநாடி மூச்சை அடக்க முடியும். ஆகையால் நான் சங்கு குளிக்க விரும்புகின்றேன். தமிழ்நாட்டில் எங்கு சங்கு அதிகமாகக் கிடைக்கின்றது? ஆண்டு முழுவதும் குளிக்க முடியுமா?

—ஆர். பி. கோபால்,
பழனி,
மதுரை மாவட்டம்.

**விடை:** தமிழ்நாட்டில் இராமேஸ்வரம், தூத்துக்குடி ஆகிய கடற்கரைப் பகுதிகளில் சங்குகள் அதிகம் கிடைக்கின்றன. சங்கு குளிப்பது ஆண்டு முழுவதும் நடைபெறக்கூடிய தொழிலல்ல! இராமேஸ்வரத்தில் சங்கு. மற்றும் கிளிஞ்சல் பொருள் உற்பத்தித் தொழிலாளர் சங்கம் உள்ளது. அங்கு சென்று, அனுபவம் உள்ள சங்கு குளிப்பவர்களைக் கலந்தாலோசித்து, இத்தொழிலில் ஈடுபடுவதே சிறந்தது.

# போக்குவரத்து வளர்ச்சிக்குப் புது வாரியம்!

தமிழ்நாடு அரசு, போக்குவரத்து வளர்ச்சி வாரியம் ஒன்றினை உருவாக்க முடிவு செய்துள்ளது. பத்து ரூபாய் வீதம் 20 இலட்சம் பங்குகள் கொண்டு, ரூ. 2 கோடி மூலதனத்துடன் இது இயங்கும். தமிழ்நாடு அரசு, ரூ. 1·60 கோடிக்கு 16 இலட்சம் பங்குகளை எடுத்துக் கொள்ளும். அரசைச் சேர்ந்த பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமும், பாண்டியன், பல்லவன், சேரன், சோழன், கட்டபொம்மன், அண்ணா போக்குவரத்து ஆகிய 6 பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களும் 40 இலட்சம் பங்குகளை எடுத்துக் கொள்ளும். இதிலே பூம்புகார்க் கப்பல் போக்குவரத்துக் கழகம் மட்டும் ஓர் இலட்சம் பங்குகளை எடுத்துக் கொள்ளும்.

பத்து இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் சென்னை - மாமல்லபுரம் பாதையில் உடல் ஊனமுற்றோருக்கு ஒரு பயிற்சி நிலையத்தை விரைவில் தமிழ்நாடு அரசு உருவாக்க இருக்கிறது.

* * *

சித்த மருத்துவத்திற்கு ஊக்கம் கொடுத்து வரும் தமிழ்நாடு அரசு, ஒவ்வொரு நகராட்சியிலும் இந்தச் சித்த மருத்துவமனையை நிறுவிட முனைந்துள்ளது. அண்மையில் ஆலந்தூர் - தலைக்கஞ் சேரியில் சித்தமருத்துவமனை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.




# உங்கள் அந்தரங்கக் காரியதரிசி இருளில் அவதிப்படுகிறாரா?

சீரான ஒளி உங்கள் ஊழியர்களின் பார்வை, வேலைத்திறன் மற்றும் பரஸ்பர பழகும் தன்மை இவற்றை மேம்படுத்துவதில் பங்கு வகிக்கிறது. அலுவலகங்களுக்கேற்ற நம்பகமான, உயர்ந்த செயல்திறன் கொண்ட, நீடித்த உழைப்பைத் தரும் லாம்ப் மற்றும் லூமினேர் வகைகளை பிலிப்ஸ் அளிக்கிறது. இவற்றுள் ஒவ்வொன்றும் மின்சாரத்தை மிச்சப்படுத்தி இந்தியாவின் நெருக்கடி நிலையை சமாளிக்கும் வகையில் விசேடமாக உருவாக்கப்பட்டதாகும்.

சர்வதேசத்தரங்களையொத்த மிக உயர்தரமான பற்பலரக இன்காண்டிஸென்ட், ஃப்ளுரோஸென்ட் மற்றும் மெர்க்குரி வேப்பர் லாம்புகளையும் லூமினேர்களையும் நம் நாட்டிலேயே தயார் செய்கிறது பிலிப்ஸ்.







பிலிப்ஸ் லாம்புகள் மற்றும் லூமினேர்கள்—
சீரான பார்வைக்கு

**பிலிப்ஸ்**

PHILIPS

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்



# எளிமையின் எழில் வடிவம் ஏலகிரி



அமைதியும் தூய்மையும்
தவழும் அழகிய சோலைவனம்,
ஏலகிரி! வட ஆர்க்காடு
மாவட்டத்தின் சிறப்புக்களில்
ஒன்றாக, திருப்பத்தூர் ஊர்
ஆட்சி ஒன்றியப் பகுதியில்
அமைந்துள்ள இந்த எளிய
மலைக்குச் சென்று வருவது
மறக்க முடியாத அனுபவம்.
கோடைக் காலத்தை இனிமை
யாகக் கழிப்பதற்கு ஏற்ற
குளிர் மலை என்று நாடறிய
இது ஓங்கு புகழ் பெற்றுவிட
வில்லை எனினும் ஏழை மக்க
ளுக்கு, நடுத்தர வகுப்பின
ருக்கு கோடைக் கால ஓய்வைக்
கழிக்க மிக ஏற்ற இடமாகத்
தோன்றுகிறது. பயிற்சி
முகாம்கள், கருத்தரங்குகள்
போன்றவைகளை நடத்துவதற்
குத் தகுந்த இடமாக விளங்கு
வதற்குரிய கூறுகள் இதில்
நிறைய இருக்கின்றன.

கோடை ஓய்வைக் கழிப்ப
தற்குரிய மலை வனம் என்ற
வுடன் உதகை, கோடைக்
கானல் போன்ற மலை நகர்
களை நினைத்துக் கொண்டோ,
காஷ்மீர், சிம்லா என்று கற்
பனை செய்து கொண்டோ ஏல
கிரியை அணுகக் கூடாது.
மற்ற மலை வன நகரங்களுக்கு
உரிய செழிப்புகள், ஒப்பனை
கள், சந்தடிகள், வேடிக்கை
கள், விளையாட்டுக்கள் ஏலகிரி
யில் இல்லை. ஆனால் இந்த
எளிய ஏலகிரி கிராமங்களில்
உள்ள அமைதி, தூய்மை,
ஏகாந்தம் மற்ற மலை நகரங்
களில் இல்லை. இருக்கவும்
முடியாது.

ஏலகிரியில் சித்திரை, வை
காசி கோடை இரவுக் காலம்
குளுமையாக, இதமாக இருக்
கின்றது. ஆனால் நடுக்கும்
குளிர் இல்லை. கம்பளி, கம்
பளி உடைகள், அதனைச்
சார்ந்த செலவுகள் தேவைப்
படாத, அளவான தட்பம்.
பகலில் சமவெளி நிலம் போல
வெய்யில் அடிக்கிறது. ஆனால்
அந்த வெய்யிலில் சூடு
இல்லை. வசதிகள் இல்லை;
ஆனால் அமைதி இருக்கிறது.
தனிமையைக் கண்டிராதவர்
கள் அங்கே சென்றால் அதனைக்
காணலாம். அதன் சாரத்தை
உணரலாம்.

## மலைமுகட்டுக்கு அப்பால்

திருப்பத்தூர்—வாணியம்
பாடி சாலை வழியில் செல்லும்
போதும், ஜோலார்பேட்டைப்
பகுதியில் ரயில் பயணத்தின்
போதும் ஏலகிரி மலைச்சரிவு
களும் மலை ஏறுவதற்கு உள்ள
மலைச் சாலையும் தெரியும்.
காய்ந்து போய், வெள்ளைப்
பாறாங்கற்கள் துருத்திக்
கொண்டு நிற்கின்ற அடிவாரக்
காட்சியைப் பார்க்கும்போது
அங்கே என்ன இருக்கப்போகி
றது என்றுதான் தோன்றும்.
ஆனால் மலைப்பாதையில் மொத்
தம் பதினான்கு. கொண்டை
ஊசி வளைவுகளில் பத்தாவது
வளைவைக் கடந்ததுமே பசுஞ்
செழுமைக்குரிய மாற்றம்
தெரியத் தொடங்குகிறது.

**அட்டை சொல்லும் கட்டுரை.**



ஏலகிரிப் பழங்குடி மக்கள் உரையாடும் காட்சி

மலை முகட்டை அடைய அடைய, காட்சி முழுதுமாக மாறிவிடுகிறது; உருட்டுக் கட்டையாக உயர வளர்ந்த வாட்டில் வகை மரங்கள்; மலையின் கிழக்குப் புறத்தில் இனிய பசுமை வெளி; வகை வகையான கனி மரங்கள், எழில் கோலம் காட்டும் மலைச் சரிவுகள், கழனிகள், சாலைகள், காட்டுத் தடங்கள் வழியே சென்றால் அமைதியில் துயிலும் கிராமங்கள், சூது வாதற்ற மலை வாழ் மக்கள், இம் மலையகத்துக்குப் புதிய எழில் வடிவம் தருவதற்குச் செயலாக்கப் பட்டு வரும் ஆக்கப் பணிகள் —இவை அனைத்தையும் காண முடிகின்றது.

ஏலகிரி மலை உச்சி உயரம் 4,628 அடி. தட்ப வெப்ப நிலை, கோடைக் காலத்தில் 80 டிகிரி; குளிர் காலத்தில் 70 டிகிரி. ஆண்டுச் சராசரி மழை அளவு 35 அங்குலம் முதல் 45 அங்குலம் வரை. மொத்தம் 13 கிராமங்கள் இந்த மலையில் உள்ளன. இவை அனைத்தும் சேர்ந்தது ஏலகிரி ஊராட்சி மன்றம். இந்த மலை நிலத்தின் பரப்பளவு 18.25 சதுர மைல்கள்.

ஊராட்சிக்கு உட்பட்ட அத்தனாவூர், நிலாவூர், மங்கலம், கொட்டையூர், தாயலூர், புங்கனூர், புத்தூர், பாடுகனூர், ராயநரி, மேட்டுக்கணியூர், பள்ளக்கணியூர், கோட்டூர், முத்தனூர் ஆகிய பதின்மூன்று குக்கிராமங்களில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட நான்குகிராமங்கள் பெரியவை. மற்றவை சில சில வீடுகளைக் கொண்டவை. மொத்த மக்கள் தொகை சுமார் 4,000.

### பழமுதிர் சோலை

இந்த மலை நிலத்தின் மண் வளத்தைப்பற்றி குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். பழ மரங்கள் நன்கு வளரக்கூடிய செம்மண் நிலம் இது. அடிக்கடி உரம் தேவைப் படாத சாரமுள்ள மண். நிலத்தில் பெருங் கற்கள் மிகுதி. ஒரு ஏக்கர் நிலத்தில் மூன்றில் ஒரு பாகம் அல்லது சரி பாதிப் பாகம் கூட கல்லாக இருக்கும். ஆனால் அந்தக் கல் கலந்த நிலத்தில்தான் கனி மரங்கள் செழிப்பாகவும் சிறப்பாகவும் வளர்ந்து பயன் தருகின்றன. ஆங்காங்கே பரவலாக சிவந்த செம்மாதுளை காய்த்துத்தொங்குவது அழகான காட்சி. இந்த நிலத்தில் பலா மரங்களும் மிகுதி; பலன்களும் மிகுதி. கொய்யா, மா, வாழை, எலுமிச்சை, ஆரஞ்சு விளைகின்றது.

கவனிப்பற்ற இடங்களில் கூட இந்த மரங்கள் வளர்ந்துள்ளன. சந்தன மரங்கள், ஆங்காங்கே காணப்படுகின்றன. தனியார் தோட்டங்களில் காபி பயிரிட்டதில் வெற்றி கிடைத்துள்ளது. மிளகுக் கொடி வைத்துப் பார்த்ததில் மிளகு சடை சடையாகக் காய்த்துத் தொங்கும் காட்சியைக் காண முடிந்தது. கடுகு, வெங்காயம் ஆகியனவும் குறிப்பிடத் தக்க விளைபொருட்கள்.



ஏலகிரி வாழ் மக்கள்

இயற்கைச் செல்வர்களாக இங்குவாழும் பழங்குடிமக்கள், விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டுள்ளனர். கேழ்வரகு என்று சொல்லப் படும் ராகி தான் இவர்கள் உணவுக்காகப் பயிரிடும் தானியங்களில் முக்கியமானது. சாமை, வெள்ளைச் சாமை, கருஞ் சாமை, தினை, கொள்ளு, துவரை, உளுந்து, எள், பேய் எள் முதலியனவும் பயிரிடுகின்றார்கள். அனைத்தும் வானம் பார்த்த பூமிப் பயிர்களே. சில இடங்களில் கிணற்றுப் பாசனத்துடன் சிறு அளவில் நெல், கரும்பு சாகுபடி நடக்கிறது.

### ஆசைகளற்ற மக்கள்

இந்த மண்ணில் தக்காளி, தழைத்துக் கிளைத்துச்செழித்து வளர்கிறது. வானம் பார்த்த பயிராகவே இது வளர்கிறது. நீர் பாய்ச்சுவதும் உண்டு. கீழே இருந்து சென்று தக்காளி வாங்கி வியாபாரத்துக்கு அனுப்புகிறார்கள். மக்களின் நெரிசல் இல்லாத நிலம், இந்த மலை நிலம். அசுத்தங்கள் குறைவு. தூய காற்று; துப்புரவான சூழல்; சுருக்கமாக ஒரு தூய நிலம் என்று சொல்லலாம்.

ஏலகிரி வாழ் பழங்குடி மக்கள் ஓரளவு ''ஞானிகள்'' என்று குறிப்பிடத் தக்கவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு, இவர்களுடன் பேசிப் பார்த்த வரை, வாழ்க்கையில் மிக மீறிய பற்றும் இல்லை; வெறுப்பும் இல்லை. ஆசைகள் குறைவு; தேவைகள் குறைவு. எதிலும் அக்கறையற்ற தன்மை!

இவர்கள் உழைக்காமலும் இல்லை. மழை பெய்ததும் கழனி சென்று உழுகின்றார்கள். விதைக்கிறார்கள். அறுவடைக் காலத்தில் அறுக்கப் போகிறார்கள். வேலை கிடைத்தால் செய்கிறார்கள். ஆனால் வேலை இல்லையே என்று அலட்டிக் கொள்வது கிடையாது. குழந்தைச் செல்வம் உண்டு. ஆனால் அதுவும் அளவுக்கு மீறி இல்லை. குடும்பக் கட்டுப் பாட்டைக் கடைப்பிடித்ததில் மாநில அரசினர் பரிசு, மத்திய அரசினர் பரிசு இரண்டையும் பெற்றது, ஏலகிரி ஊராட்சி!

''உங்கள் குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புகிறீர்களா?'' என்று கேட்டால் ''படிக்கிறவர்கள் படிக்கிறார்கள். படிக்கச் செல்லாதவர்கள் படிக்காமல் இருக்கிறார்கள்'' என்று விருப்போ வெறுப்போ இல்லாமல் பதில் அளிக்கிறார்கள் மூத்த தாய்மார்கள்.

மிகப் பெரும்பாலான குடும்பங்களுக்கு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்ற அளவில் சிறு சிறு துண்டு நிலங்களே சொந்தம். வருமானம் மிகக் குறைவு. அவர்களுடைய குடும்ப நிலை, வாழ்க்கை நிலையை அறிய இரண்டொரு குடிசைக்குள் சென்று பார்த்த போது, ஏறக்குறைய 'வெறுமையே' நிலவி நின்றது. பண்டமில்லையே தவிர, கள்ளமற்ற சிரிப்புக்குக் குறைவில்லை. சூது வாதற்றவர்களாகவே தோன்றுகின்றனர், இந்த மக்கள். தமிழ்தான் பேசுகிறார்கள். சற்று இழுத்தாற் போல் பேசுகின்றனர். மூத்த வயதினரிடையே மலைச் சாயல், பழங்குடிச் சாயல் அதிகம். மற்றபடி இளைஞர் சமூகத்தினர் ஏறக்குறைய, சம வெளியில் உள்ள கிராம மக்களைப் போலத்தான் இருக்கின்றனர். நாச்சி, காளி என்ற பெயர்கள் அதிகம். இளம் தலைமுறையினர் பெயர், மற்ற கீழ் நிலங்களில் உள்ள பெயர்களாகவே இருக்கின்றன.



அமைதி தவழும்

அழகின் வடிவம் ஏலகிரி

இம் மலை முழுவதிலுமாக இரண்டொரு திண்ணைக் கடைகள், இரண்டு மூன்று டீக்கடைகள் தான் உண்டு. இவையும் கீழே இருந்து சென்றவர்களால் தான் நடத்தப்படுகின்றன. பொருட்களை லாரிகளில் கொண்டு செல்வதென்றால், ஏகப்பட்ட வண்டிச் சத்தம் ஆகின்றது. மலை மேலே கொண்டு போய்க் கொடுப்பது என்றால், ஒரு லாரி மணல் ரூ. 150 ஆகின்றது.

### கழுதை வாகனம்

பாரம் சுமக்க இவர்கள், இயற்கை வாகனமாகக் கழுதைகளைப் பயன்படுத்துகின்றனர். கீழே இருந்து அரிசி, சிமிட்டி, மணல், மளிகைச் சாமான்கள், சுண்ணாம்பு முதலியவைகளை மேலே கொண்டு போவதற்கும் அங்கிருந்து உளுந்து, துவரை, பலாப் பழம், மாங்காய் முதலியவைகளைக் கீழே கொண்டு வருவதற்கும் ஈடுபடுத்தப்படும் கழுதை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 4 வருமானம் கிடைக்கிறது. மலையில் புல் இருக்கிறது. பராமரிப்புச் செலவு குறைவு. 10 கழுதைகள் வைத்துப் பேணினால் ரூ. 40 ஒரு நாள் வருமானமாகக் கிடைக்கிறது.

ஏலகிரியின் இந்தப் பொது தோற்றம் பொதுத் தன்மைகள் தவிர்த்து, அங்கு உருவாகியுள்ள புதுமைப் படைப்புகள், இந்த எழில் நிலத்துக்கு ஏற்றம் தருவனவாக அமைந்துள்ளன. வசதிகளையும் மக்கள் வாழ்க்கை நிலையையும் மேம்படுத்த புதுப் புதுப் பணிகள் செயல் வடிவம் பெற்று வருகின்றன.

நெடுஞ்சாலைத் துறைப் பயணிகள் இல்லம் 1970-ல் கட்டி முடிக்கப்பட்டு இரண்டு சிறப்பு அறைகள், இரண்டு சிறு அறைகளுடன் பயணிகளுக்கு உற்ற தங்குமிடமாக உதவி வருகின்றது. திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் ரூ. 1,20,000 செலவில் இப்போது கட்டி முடித்துள்ள திருமண மண்டபம் என்று சொல்லப்படும் அழகிய சமுதாயக்கூடம், விரைவில் பயன்படுத்தத் தக்க நிலையில் இருக்கின்றது. ரூபாய் 20,000 செலவில் இங்கு மேல் மட்டத் தண்ணீர்த் தொட்டி கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏலேலோ ஏலகிரி!

* * *

ஏலகிரியில் காக்கை, பருந்துகள் கிடையாது. இந்தத் தட்ப வெப்ப நிலை பிடிக்காமல்தான் அவை போய் விட்டனவாம்.

பாம்புகள் அதிகம் இருக்கின்றன. ஆனால் விஷப் பாம்புகள் குறைவு. பாம்பு தீண்டி மரணம் என்பது மிகமிகக் குறைவு.

தேள் கடித்தால் இங்கு வலிப்பதில்லை.

வேளாண்மைப் பயிர்களுக்கு இரவில் காட்டுப் பன்றிகள் மூலம் சேதம் அதிகம்.

ஏலகிரியின் சிறப்பைப் போற்றிட வெளி மக்களின் கவனத்தை இதன்பால் திருப்ப, சென்ற ஆண்டு கோடை விழா ஏலகிரியில் சிறு அளவில் கொண்டாடப் பட்டது.

இந்த ஆண்டு கோடை விழாவினைச் சிறந்த முறையில் கொண்டாட வேலைகள் முனைப்பாக நடை பெற்று வருகின்றன.



ஏலகிரியின் எழிலார்ந்த தோற்றம்



பாரம் சுமந்திடப் பெரிதும் பயன்படும் கழுதைகள்.

ஒய். எம். சி. ஏ. தங்கும் விடுதி, மிஷனரி விடுதி, ரயில்வே அமைச்சகத்தின் ஒலி அலை நிலையம், மாதா கோயில், ஓய்வு பெற்ற அலுவலர்கள் மற்றும் செல்வந்தர்கள் கட்டிக் கொண்டுள்ள ஒரு சில நவீன இல்லங்கள் இவை எல்லாம் ஏலகிரியின் புதிய எழில் வடிவத்துக்குக் கட்டியம் கூறி நிற்கின்றன. சமுதாயக் கூடத்தை அடுத்த மேட்டில் எழிலார்ந்த இடத்தில் புதிதாக அமைந்து உள்ள முருகன் கோயிலுக்கு வருவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

### தாவர இயல் பூங்கா

மாநிலத்தின் இயற்கை வளங்களை எல்லாம் பயன்படுத்தியும் மேம்படுத்தியும் வரும் தமிழக அரசினர், ஏலகிரி மலையை, தமிழ்நாட்டின் நாலாவது மலைவன நகராக ஆக்க எண்ணி இருக்கின்றனர். இவ்வகையில் முறையாகத் திட்டமிட்டு, செயல்படுத்தியும் வருகின்றனர். கோடையைக் கழிக்க உதவும் மலைவன நகரம் என்றால், அதற்கென சில நியதிகளை மைய அரசினர் குறிப்பிட்டுள்ளனர். அதாவது தாவர இயல் பூங்கா (Botanical garden) மற்றும் ஏரி அவசியம் இருக்க வேண்டும் என்பது நியதி. இப்போது உருவாக்கப்பட்டுவரும் புதிய தாவர இயல் தோட்டமும், மீன்துறையினர் பேணுதலுக்கு விடப்பட்டுள்ள பழைய ஏரி ஒன்றும் இந்தத் தேவைகளைப் பெருமளவில் நிறைவு செய்யும்.

தாவர இயல் பூங்கா அமைப்பதில் தொடக்கக் கட்ட வேலை முற்றுப் பெற்று விட்டது. வசதியான இடத்தில் சாலையை அடுத்து 'எட்டு ஏக்கர் நிலம் கம்பி வேலியிடப்பட்டு, சமன் படுத்தப்பட்டு பண்படுத்தப் பட்டுள்ளது. கிணறு வெட்டப் பட்டு, நீர் இறைக்கும் பம்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பழச் செடிகள் மற்றும், இந்த மலை நிலத்தில் நன்கு வளரக்கூடிய அரிய கன்றுகள் முதலியவைகளைக் கொண்டு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பருவ மழை தொடங்கியதும் செடிகள் கொண்டு வந்து வைக்கப்பட்டு இந்தத் தோட்டமும் பசுமை ஒளி வீசத் தொடங்கிவிடும். இந்தத் தோட்டம் அமைப்பதில் மொத்தச் செலவு மதிப்பு ஒன்றரை இலட்சம் ரூபாய். இதில், இது வரை 80 ஆயிரம்- செலவிடப் பட்டிருக்கிறது. இதில் மூன்றில் இரண்டு பங்கு அரசு மானியம்.

ஊராட்சி ஒன்றியம் மூன்றில் ஒரு பங்கை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் தாவர இயல் தோட்டத்தை அமைப்பதில் அரசினர் தோட்டக்கலை வல்லுநரின் சேவை கோரிப் பெறப்பட்டுள்ளது.

மீன் துறையிடம் விடப்பட்டுள்ள சிறிய ஏரி, மிகவும் மேம்படுத்தப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றது. இந்தக் குளத்தில் ஏராளமாக் மீன் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். மலைவாழ் மக்கள் இறைச்சி உண்பவர்கள் ஆயினும் மீன் உண்பதில்லை.

### இதர வசதிகள்

மலைநிலத்தில் சாலை வசதிகளை மேம்படுத்த, தார் போட்ட சாலைகளை அமைக்க ரூ. 2 இலட்சம் செலவில் திட்டம் அரசினரின் ஒப்புதலைப் பெற்றுள்ளது. இந்த மலைக் கிராமங்கள் மின்சார வசதி

ஏலகிரி மலைக்குப் போய்வருவோர், அலுவல் காரணமாக இருப்போர் தவிர்த்து, மற்ற மக்கள் அனைவரும் பழங்குடியினரே! எனவே வளர்ச்சிப் பணியின் பயன்கள் பெருமளவு அவர்களையே சேருகின்றன. இந்த மக்களின் கல்வி மேம்பாட்டுக்காக, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஒன்றும், இரண்டு தொடக்கப்பள்ளிகளும் இருக்கின்றன. உணவு, உறைவிட வசதி உள்ள அரசினர் மலைசாதி மாணவர் விடுதி 1963-லிருந்து இயங்கி வருகின்றது. 1970-ல் இவ்விடுதி, சொந்தமான புதுக்கட்டட வசதியைப் பெற்றுள்ளது. 45 மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். இவர்களில் 30 பேர்கள் மலைவாழ் வகுப்பினர். 15 பேர்கள் பிற்பட்ட வகுப்பினர். படிப்பிலே ஆர்வம் பெற்றோர்களுக்கும் குறைவு; பொது

பெற்றவை. மேல்மட்ட குடி நீர் வசதியும் ஓரிடத்தில் செய்யப்பட்டுள்ளது.

மலைக்குச் செல்லவும் அங்கிருந்து வரவும் தனியார் பஸ் ஒன்றுமட்டும் ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை சென்று வருகின்றது. வரும் போது பஸ் மேல் கூரை ஒரே பலாப்பழம் மயம். பஸ்சில் கூட்டம் மிக மிகுதி.

வாகவே குறைவு. மலைவாழ் சிறுவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, தச்சு-கருமான் வேலைத் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றையும் அரசினர் நடத்தி வருகின்றனர்.

நீண்டு, அகன்ற முற்றம், அதன் மூன்று பக்கங்களிலும் குடிசைகள் என்ற முறையில் இந்த மலைக் கிராமங்கள் அமைந்துள்ளன. குடிசைகளின் சுவர், மண் சுவர். தட்டிகளில் மண் பூசப்பட்டவையும் உண்டு. சுவர்களில் கோலம் போல சித்திரங்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். கூரைகள் கணம் புல்லால் வேயப்பட்டவை. தீ விபத்து, பயம் இவைகளைத் தவிர்க்கக் கண்காணிப்புக்கு ஊரார் அனைவருமாகப் பொது ஊழியர் ஒருவரை அமர்த்திக் கொள்ளுகின்றனர். இதற்காக ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு பருவ விளைச்சலுக்கு இவ்வளவு என்று அறுவடைக் காலத்தில் தானியம் தருகின்றனர். இந்த மக்களுக்கு, அபாயத்துக்கு இரையாகாத கல் வீடுகள் கட்டிக் கொடுக்கும் அரசினர் திட்டம் படிப்படியாகச் செயலாக்கப்பட்டு வருகின்றது. அத்தனூரில் 20 வீடுகளும் மங்கலத்தில் 10 வீடுகளும் கட்டித் தரப்பட்டுள்ளன. பாடுவானூரில் 10 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 5 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. நிலாவூரில் கட்டியிருப்பது 10 வீடுகள். கட்ட இருப்பவை 3 வீடுகள்.

கிராமிய வீட்டு வசதித் திட்டம் மூலம் 45 வீடுகள் கட்டும் திட்டம் ஏற்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு வீட்டுக்கு ரூ. 4,000 வீதம் வீட்டு வசதிக் கடன் தரப்படும். ஏலகிரி மக்கள், தங்களை மலைசாதியினர் என்றும் வேளாளர்-கவுண்டர் என்றும் கூறிக்கொள்கின்றனர். ஏலகிரி பெயர்க் காரணம் பற்றி ஆதாரப் பூர்வமான தகவல்கள் ஏதும் தெரியவில்லை. இம்மக்களின் சமூகப் பழக்கவழக்கங்கள் வாழும் நிலத்துக்கு ஏற்பவும் வாழ்க்கை நிலைக்கு ஒப்பவுமே உள்ளன. ஏலகிரி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சி. கோவிந்தராச கவுண்டர், இச்சமூகத்தின் பழக்க வழக்கங்கள் குறித்து விவரித்துச் சொன்னார்.

**திருமண முறை**

இங்கு திருமணங்கள் எல்லாம் கோஷ்டித் திருமணங்கள் தாம். ஒரு ஆண்டில் பெரும்பாலும் ஒருநாள் தான் திருமணம் நடைபெறும். 15-20 அல்லது 30-40 திருமணங்கள் கூட நடந்துவிடும். திருமணம் மொத்தம் நான்கு நாட்கள். முதலில் நாள் குறிப்பிடுவது, இரண்டாம் நாள், பந்தல் போடுவது; மூன்றாம் நாள் விருந்து; நான்காம் நாள் தாலி கட்டுதல்.

எல்லோருடைய அரிசியையும் சேகரித்து, ஒரே இடத்தில் சமைத்து ஊர் முழுதுக்குமாகப் பரிமாறுவார்கள். விருந்துக்கு ஆடு வெட்டுவதும் உண்டு. சாமைச்சோறு - கறிக்குழம்பு; அதாவது ஒரு துண்டுகறி-குழம்பு. இவ்வளவுதான் விருந்து. விருந்து முடிந்த பின்பு நான்காம் நாள் தாலி கட்டும்போது கூட்டம் எதுவும் இருக்காது. இரண்டு மூன்று பெரியவர்கள் இருந்து நடத்தி வைப்பார்கள்.

திருமணத்துக்காக மணமகள் வீட்டார் ரூ. 125-ம் பெண் வீட்டார் ரூ. 60-ம் ஊர் முக்கியஸ்தர்களிடம் கொடுத்து விட வேண்டும். இப்படித் தரப்படும் பணத்தைக்கொண்டு தான் பந்தல், சாப்பாடு, மேளம், ஒலிபெருக்கி எல்லாம் வைத்து நடத்துவார்கள். ஒரே சமயத்தில் பல திருமணங்கள் நடப்பதால் செலவு குறைகிறது.

பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டார், தானியமும், ரூ. 500 அல்லது வசதிக்கு ஏற்ப ரூ. 200-க்குக் குறையாமல் பணமும் தர வேண்டும். இந்த ஆண்டில் மே 4-ந் தேதி நிலாவூரில் 26 தம்பதிகளுக்குத் திருமணம் நடந்தது. எங்கும் நடப்பது போல வயது வந்தவர்கள் திருமணம்தான்.



வெளிநாட்டு உதவி நிறுவனங்களால் அனுப்பப்படும் கம்பளிக்கோட்டு அணிந்தபடி உரையாடும் பெரியவர்

**ஏலகிரி, இதர மலையூர்கள் வெப்ப தட்ப நிலை**

| இடத்தின் பெயர் | உயரம் | மழை அளவு | கோடை வெப்பம் | குளிர் கால தட்பம் |
|---|---|---|---|---|
| கோடைக்கானல் | 7,688 அடி<br>2,343 மீட்டர் | 65 அங்குலம்<br>165 செ. மீ. | 19·8 செ. | 8·3 செ. |
| உதகை | 7,500 அடி<br>2,283 மீட்டர் | 48 அங்குலம்<br>123 செ. மீ. | 25 செ. | 8·3 செ. |
| ஏலகிரி | 4,628 அடி | 35லிருந்து<br>45 அங்குலம் வரை. | 29·5 செ. | 22 செ. |



ஏலகிரியில 30 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வரும் ஆங்கிலோ இந்தியர் நியூமன்

## குன்றுகள், குகைகள்

ஏலகிரி மலைகளில் வடபுறத்தில் அடர்ந்த காட்டுப் பகுதியில் ‘மகாதேவன் குகை’ என்ற இடம் அறுபது அடி நீளமும் 10 அடி உயரமும் உள்ள குகையினைக் கொண்டது. இதுவும் சுவாமி மலைக் குன்று, புளிச்சிக்குட்டை ஆகிய இடங்களும் எழிலார்ந்த இடங்கள். இயற்கை எழில் காட்சி இடங்களாக மேம்படுத்துவதற்குரிய கூறுகள் நிரம்பப் பெற்றவை இவை.



ஏலகிரி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சி. கோவிந்தராஜ்

ஊரில் மாரியம்மன், பிள்ளையார் கோயில் உண்டு. பொங்கல்தான் இவர்கள் கொண்டாடும் பெரிய விழா. அப்போது மாரியம்மன் பண்டிகை கொண்டாடுகிறார்கள். ஊரில் தகராறுகள், குற்றங்கள் முதலியவைகளை விசாரிக்க ஊரின் முதியவர்கள் கூட்டுகின்ற இடம் உண்டு. அந்தப் பொது இடத்தில் குளிர் இரவுகளில் நெருப்பு கனன்று கொண்டே இருக்கும்.

துன்பங்களுக்கெல்லாம் காரணம் ஆசைதான் என்று மகான் புத்தர் கூறினார். இந்த மக்களுக்கு ஆசைகள் குறைவு. அதுதான் போலும், துன்பங்களும் குறைவாகவே இருப்பதாகத் தோன்றியது.

நீண்ட நாள் வாழ்ந்தவர்கள் நிறைவாழ்வு கண்டவர்கள் மரணமடைந்தால் அவர்களைப் புதைக்கிறார்கள். மற்ற வகையில் இறந்தால் பிணங்களை எரிக்கிறார்கள்.

பழங்குடி மக்களுக்காக வெளிநாடு உதவி நிறுவனங்கள் வழங்கிய போர்வைகள், நல்ல கம்பளிக் கோட்டுகள் முதலியன அண்மையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப் பெற்றன. அந்த வகையில் 200 கோட்டுகளும் 200 போர்வைகளும் தரப்பட்டுள்ளன. இங்கு நிலையான மருந்தகம் இல்லை. வாரம் இரண்டு முறை இயங்கும் மருத்துவமனை வந்து பணியாற்றுகின்றது.

அந்த நாளின் மழைமாரி, இந்த நாளின் வறட்சி பற்றி அந்த மலையிலும் பேச்சு இருக்கிறது. ஆங்கிலோ இந்தியரான திரு. நியூமன், முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இங்கு குடியேறியவர். அப்போது சுமார் 14 ஆங்கிலோ இந்தியக் குடும்பங்கள் இங்கு இருந்தனவாம். ‘‘குடியேறியோர் சங்கம்’’ என்று ஒரு சங்கத்தையும் அவர்கள் அமைத்திருந்தனர். போக்குவரத்து, மருத்துவ வசதி இன்மை காரணமாக அவர்களில் பலர் குடிபெயர்ந்துவிட்டனர். அப்பொழுதெல்லாம் 66 அங்குலம் வரை மழை பெய்தது.

### வளர்ச்சி வாய்ப்புகள்

மலைகள் சூழ, அழகிய ஓர் இயற்கை வனம்போல விளங்கும் ஏலகிரிக்குப் போக்குவரத்துக்குப் பேருந்து வசதிகள் போதுமான அளவில் இல்லையே என்பதுதான், அங்குக் குடியமர்ந்தோர், போவோர், வருவோரின் பெரிய ஏக்கமாக இருக்கிறது. போக்குவரத்துக்குப் பேருந்து வசதி, தார்சாலை வசதி, மேலே உறைவிட வசதி, உணவுக்கு கான்டீன் அல்லது ஹோட்டல் போன்ற வசதிகள் அமையும் நாளை எதிர்நோக்கியிருக்கிறார்கள். மருத்துவமனை வசதி, தொழிற்பயிற்சி வசதி அமையப் பெற்றால் வசதிகள் நிறைவு பெற்றுவிடும். பழமரங்கள் செழித்து வளர்ந்து சிறப்பான பலனும் தருவதாலும் நடுத்தரகர்களால், இப்போது விவசாயிகளுக்கு இழப்பே நேரிடுவதாலும், பழ விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் அவசியம் இங்கு வெகுவாக உணரப்படுகின்றது. பழப்பதன நிலையம் ஒன்றைத் தொடங்கவும் சாத்தியக் கூறுகள் உள்ளன. சிறுசிறு பழத் தோட்டங்கள் பல அமைக்கப்பட்டால் இந்த அழகிய நிலத்தின் எழிலும் பெருகும்; மக்களுக்குப் பயனும் பெருகும். தரமான கால்நடைகளை இங்கு பெருக்குவதற்கும் பேணுவதற்கும் வாய்ப்புகளும் நிறைந்துள்ளன.

பயிர்த்தொழில் செழித்திட உதவும் வகையில் மேலும் பாசனக் கிணறுகள், அட்டவாறு, அம்பலாறு பகுதிகளில் ஓடைகளுக்குத் தேக்கங்கள், விவசாயிகளுக்குக் கடன் உதவி, இலவசமாக உழவு மாடுகள், பழச் செடிகள் வழங்கல் முதலிய பணிகள் ஏலகிரியின் மேம்பாட்டுக்கு வழி வகுத்திடக் கூடியவை.

பஸ் வசதி, ஹோட்டல், தங்குமிடவசதி, தொழிற்பயிற்சி, மருத்துவ மனை என்று இவை எல்லாம் ஏற்பட்டால் இந்த எழிலார்ந்த நிலப்பரப்பின் தனிமை, தூய்மை, எழில், ஏகாந்தம் ஆகிய அனைத்துமே சற்றுக் குறையத்தான் செய்யும்.

என்ன செய்வது? ஒன்றைக் கொடுத்து ஒன்றைப் பெறுவது தானே இயற்கை நியதியாக இருக்கின்றது!

—சி. க. ரா.




# புத்தக உலகின் நண்பன்

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் தலைவராக இருந்து வரும் இந்தப் புத்தக டிரஸ்ட், பல அரிய தமிழ்ப்பணிகளை ஆற்றி வருகின்றது.

1955-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5-ஆம் நாள் பண்டித நேரு அவர்களால் துவக்கி வைக்கப்பெற்ற இப் புத்தக டிரஸ்ட், தென்னகப் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களாலும், பிற அறிஞர் பெருமக்களாலும் நடத்தப் பெறுகிறது.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளிலும் அந்தந்தத் துறை வல்லுநர்களால் எழுதப்பெற்ற சிறந்த நூல்களை வெளியிட உதவுகிறது. இதுவரை 605 நூல்களை வெளியிட்டுள்ள டிரஸ்ட் தமிழில் 196 நூல்களையும், தெலுங்கில் 196 நூல்களையும், கன்னடத்தில் 111 நூல்களையும், மலையாளத்தில் 140 நூல்களையும் குறைந்த விலையில் வெளிவர உதவியுள்ளது.

சிறுகதை, புதினம், நாடகம் கவிதை, விஞ்ஞானம், வரலாறு தத்துவம், சிறுவர் இலக்கியம் ஆகிய எல்லாத் துறைகளிலும் நூல்களை வெளியிட்டு ஆண்கள் பெண்கள், குழந்தைகள் எல்லாருக்கும் இன்பமூட்டி வருகிறது.

தமிழில் 'புத்தக நண்பன்' என்னும் மாத இதழையும் மற்ற மூன்று மொழிகளில் முத்திங்கள் இதழ்களையும் வெளியிட்டு வந்த டிரஸ்ட், தற்போது உலகைக் காட்டும் பல

"காலகாலத்துக்கும் பயன் படத்தக்க இலக்கியங்களை வாங்கிப் படிப்போர் குறைவாகவே உள்ளனர்" என்று புத்தக விற்பனையாளர் குறைபட்டுக் கொள்கிறார்.

"இன்றைய வாசகர்கள் வெறும் பொழுதுபோக்கு நாவல்களையே விரும்பிப் படிக்கின்றனர். அறிவு வளர்ச்சிக்கான நூல்களை அவர்கள் தொடுவது கூட இல்லை..." என்று சலித்துக் கொள்கிறார் ஒரு நூலகர்.

"கண்ட புத்தகங்களைப் படிக்கிறானே தவிர, பாடப்புத்தகங்களைப் படித்து நான் பார்த்ததில்லை!" என்று வருத்தப்படுகிறார் ஒரு தந்தை.

இப்படி எல்லாத் திறத்தாரையும் ஏங்க வைக்கும் இந்த அவல நிலையை இன்றே போக்கிட வேண்டும். படிக்கும் பழக்கத்தை-படிக்கும் ஆர்வத்தை வளர்க்க படித்தறிந்தோர் முன் வர வேண்டும். படிக்கும் ஆர்வம் வளர என்ன செய்ய வேண்டும்?

இந்த வினவுக்குச் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் பதில் தருகிறார்:

"படிக்கும் பழக்கத்தைத் தொடக்கப் பள்ளியிலிருந்தே தொடங்க வேண்டும். பள்ளிகளில் ஒரு வாரத்தில், ஒரு 'பீரியட்' இதற்காக ஒதுக்க வேண்டும். அறிவு வளரத் தூண்டுகோலாயிருக்கும் பல்வேறு நூல்களைப் படிக்க வைப்பதன் மூலம் இந்தப் பழக்கத்தை நாம் வளர்க்கலாம்.."

நல்ல நூல்களைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுகின்ற வகையில் சென்னையில் ஓர் அமைப்பு மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. அதுதான் 'தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்' (Southern Languages Book Trust).



டிரஸ்டின் ஒரு புத்தக வெளியீட்டு விழாவில்...

கணியான 'யுனெஸ்கோ கூரியர்' என்னும் இதழைத் தமிழில் வெளியிட்டு வருகிறது.

'கூரியர்' இதழ் வெளியீட்டிற்கெனத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் ரூ. 24,500 உதவித் தொகையாக அளித்து வருவதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

புத்தக விற்பனைத் துறையில் புதிய புதிய முயற்சிகளைச் செயல்படுத்தி வரும் டிரஸ்ட் தனியாகவும் யுனெஸ்கோ, ஃபோர்டு ஃபௌண்டேஷன், மத்திய, மாநில அரசுகளின் ஒத்துழைப்போடும் மொத்தம் சுமார் 20-க்கு மேற்பட்ட புத்தகத் தயாரிப்பு, மொழிபெயர்ப்பு, சிறுவர் இலக்கியம் தயாரித்தல் பற்றிய பயிற்சி வகுப்புகளையும், கருத்தரங்குகளையும், வெளியீடு, பங்கீடு பற்றியஆய்வுகளையும், குழந்தை இலக்கியப் போட்டிகளையும் நடத்தியுள்ளது.

படிக்கும் பழக்கத்தை வளர்க்கவும், நல்ல புத்தகங்களை அறிமுகப்படுத்தவும், அறிவுப் பசியை அகற்றவும் கேரள, கர்நாடக மாநிலங்களில் பெருவாரிப் புத்தக விற்பனைத் திட்டத்தையும், தமிழ்நாட்டில் வீட்டு நூலகத் திட்டத்தையும் சோதனை முறையில் செயல்படுத்தியுள்ளது. நான்கு மொழி மாநிலத் தலைநகர்களிலும் அவ்வவ் மொழிப் புத்தகக் காட்சி அரங்குகளையும் இது நடத்தியுள்ளது.'

இலாப நோக்கம் சிறிதுமின்றி, தென் மொழிகளில் ஏதாவதொன்றை மட்டுமே அறிந்தவர்களுக்கு அறிவுச் செல்வங்களை வாரி வழங்குவதைத் தலையாய கடமையாகக் கொண்டு இயங்கிவரும் இது, ஐ.நா. வின் அங்கமான உலகக் கல்வி, விஞ்ஞான கலாச்சார மேம்பாட்டுக்கு இடையறுது பாடுபட்டு வரும் யுனெஸ்கோ அமைப்பின் மாத வெளியீடான 'கூரியர்' மூலம் பல துறை அறிவும் அனைவருக்கும் கிடைக்கச் செய்ய பதினறு உலக மொழிகளில் வெளியிட்டு நற்பணியாற்றி வருகிறது. அனைத்துலகப் பிரச்சினைகளை ஒரு நிலைமையில் அணு அணுவாக அறிந்து கொள்ள உதவும் ஒரே சர்வதேச இதழ் இதுவேயாகும்.

இந்த இதழ் ஒவ்வொன்றும் ஒரு பொருளைக் குறித்த சிறப்பு மலராகவே வெளிவருகின்றது. ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ப நல்ல புதிய தமிழ்ச் சொற்களை இதில் வெளிவரும் கட்டுரைகளில் படித்து இன்புறலாம். இந்த இதழின் பொறுப்பாசிரியராக இருப்பவர் தமிழார்வம் மிகுந்த திரு. மணவை. முஸ்தபா. இவர் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழோடு சமஸ்கிருதத்தையும் கற்றவர். இவர் நெஞ்சுயர்த்திச் சொல்கிறார்: 'தமிழில் முடியும்!' என்று.

டிரஸ்டின் ஆதரவு வெளியீட்டு நூல்களில் புதினம், சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள், சமயம், விஞ்ஞானம், தத்துவம், மருத்துவம், வரலாறு, அரசியல், பயண நூல்கள், துணிகரச் செயல்கள், சட்டம், நுண்கலைகள், சிறுவர் இலக்கியங்கள் உண்டு. இவற்றுள் விஞ்ஞான நூல்கள் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. மொத்த எண்ணிக்கையில் இவை 20 சதவிகிதம் ஆகும். சிறுவர் இலக்கியங்கள் 10 சதவிகிதமாகும்.

சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் பொருட்டு இருமுறை தென்னக மொழிகளில் குழந்தை இலக்கியப் போட்டிகளை நடத்தி எழுத்தாளர்களை ஊக்குவித்து வந்துள்ளது, இங்குக்குறிப்பிடத்தக்கதாகும். டிரஸ்ட் ஆதரவில் வெளிவந்

துள்ள குழந்தை நூல்களில் ஐந்திற்கு மத்திய அரசுப் பரிசுகளும், இரண்டு தெலுங்கு நூல்களுக்கு ஆந்திர மாநில அரசின் பரிசுகளும், தமிழில் வெளிவந்துள்ள ஒன்றிற்கு 'யுனெஸ்கோ' பரிசும் கிடைத்துள்ளன. அண்மையில் குழந்தைகள் புத்தக டிரஸ்டின் சார்பில் தில்லியில் நடைபெற்ற சர்வதேசக் குழந்தைப் புத்தகக் கண்காட்சியில் இரண்டு டிரஸ்ட் நூல்களுக்குப் பரிசுகள் கிடைத்துள்ளன. இந்நூல்கள் அனைத்தும் டிரஸ்ட் ஆதரவு வெளியீடுகளாகும்.

வெளியிடுவதற்கான நூல்களை தேர்ந்தெடுக்க, அவ்வப்போது நிபுணர் குழுக்களை அழைத்து வெளியிடுவதற்கேற்ற தலைப்புக்களை இது தேர்ந்தெடுக்கின்றது.

நூல் வெளியீட்டிற்கென ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கடனுதவி செய்து, வெளியிடும் புத்தகத்தில் 25 சதவிகிதத்தை 33⅓ சதவிகிதம் கழிவு செய்து பிரதிகளை வாங்கித் தனது விற்பனையாளர்களின் மூலம் விற்றுக் கொள்கிறது. இவ்வாறு வெளியீட்டுத் துறையில் பதிப்பகத்தாருக்கு உதவத் தக்க ஒரு புதிய முறையைப் பின்பற்றிப் புதியபுதிய நூல்களை வெளியிட ஊக்கம் அளித்து வருகிறது.

டிரஸ்டின் இவ்வெளியீட்டுத் திட்டத்தின் வெற்றியைக் கண்ணுற்ற யுனெஸ்கோ நிறுவனம் தனக்காகத் தமிழ் நூல்களை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க, டிரஸ்ட் பொறுப்பேற்று, உலக மக்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள உதவும் நூல்களையும், விஞ்ஞானம், பொதுவான சில கலாச்சாரம் சம்பந்தப்பட்ட நூல்களையும் யுனெஸ்கோ உதவியுடன் டிரஸ்டின் ஆதரவு வெளியீடுகளாக அவ்வப்போது வெளியிட்டு வந்துள்ளது. இதுவரை யுனெஸ்கோவிற்காக டிரஸ்ட் ஆதரவு வெளியீடுகளாக வந்துள்ள நூல்களின் மொத்த எண்ணிக்கை 24 ஆகும். அதேபோன்று ஆந்திர அரசிற்காக 12 விஞ்ஞான நூல்களையும், தமிழ்நாடு அரசுக்காக 18 நூல்களையும் தனது ஆதரவு வெளியீடுகளாக டிரஸ்ட் வெளியிட்டுள்ளது.

கடைசல் பொறி, அச்சுவேலை, இழைப்புப் பொறி, பற்றவைப்புப் பொறி, உருவமைக்கும் பொறி பற்றிய நூல்களைத் தமிழக அரசுக்காக இது வெளியிட்டுள்ளது.

புத்தக விமர்சனப் போட்டியையும், வீட்டு நூலகத் திட்டத்தையும் செயல்படுத்துவதற்காக ஆந்திர நாட்டுப் புத்தகப் பங்கீட்டாளருக்குப் பெருமளவில் உதவியது. புத்தக நிலையங்களில் விற்பனைக்கான நூல்களை கவர்ச்சிகரமாக அடுக்கி வைப்பதற்கான 'கம்பிஸ்டாண்டு'களைத் தயாரித்து மிகவும் மலிவான விலைக்குக் கொடுத்து உதவியது.

ஆசிரியர்களிடையேயும், மாணவர்களிடையேயும் புதிய புதிய நூல்களை அறிமுகப்படுத்தி, அவர்கட்குப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் பொருட்டு, கல்வி நிலையங்கள் தோறும் புத்தகக் கண்காட்சிகளை நடத்தி நூற்றுக்கணக்கான புதிய நூல்களை அறிமுகம் செய்துள்ளது. கேரள நாடெங்கிலும் புத்தக வாரம் (Book Week), புத்தக மாதம் (Book Month) என விழாக்களை நடத்திப் புத்தக விற்பனைத் துறையில் புது விறுவிறுப்பை ஏற்படுத்தியது. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் தொடங்கப்பட்ட புரட்சிகரமான விற்பனைத் திட்டமே 'பெருவாரிப் புத்தக விற்பனைத் திட்டம்' (Mass Marketting). இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் செய்தித்தாள் முகவர்கள் மூலம் புத்தகங்களை விற்க ஏற்பாடு செய்வதாகும்.

இத்திட்டம் முதன் முதலாக கேரள மாநிலத்தில் சோதனை செய்து பார்க்கப்பட்டது. ஆறு மாதங்களில் 76 தலைப்புக்களில் முகவர்கள் மூலம் விநியோகிக்கப்பட்ட 70,000 பிரதிகளில் ரூ. 50,000 மதிப்புள்ள 31,259 நூல்கள் விற்பனையாயின. இதே போன்றதொரு திட்டம் 1965-ஆம் ஆண்டில் கர்நாடக மாநிலத்தில் தொடங்கிச் செயல்படுத்தப்பட்டது. இதுவரை இத்தகைய பல்வேறு விற்பனைத் திட்டங்களின் வாயிலாகப் பல இலட்சம் புத்தகங்களை வாசகர்களுக்கிடையே விற்பனை செய்துள்ளது. டிரஸ்ட்.

அண்மையில் தமிழில் வெளிவந்துள்ள-வரவிருக்கிற எல்லாத் தமிழ் நூல்களையும் புத்தகம் வாங்க விரும்புவோர் ஒரே இடத்தில் காணவும், நூல்களைப் பெற 'ஆர்டர்' தரவும் வசதியாகப் பதிப்பாளர்களின் ஒத்துழைப்போடு புத்தகக் காட்சியரங்குகளையும், காட்சியரங்குகளில் இடம்பெறும் நூல்களைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் தரக்கூடிய புத்தக விவரத் தொகுப்பு நூலை (Bibliography) அந்தந்த மொழிகளில் தயாரித்து அதனை எல்லாக் கல்வி நிலையங்களுக்கும், நூலகங்களுக்கும் இலவசமாக அனுப்ப ஏற்பாடு செய்துள்ளது.

தென்னகத்தின் இன்றைய நிலையைத் துல்லியமாக மதிப்பிட்டறிய பல ஆராய்ச்சிகளை யுனெஸ்கோ அமைப்பின் உறுதுணையோடு தக்க நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து அவற்றை நூல் வடிவில் வெளியிட்டு உதவியுள்ளது. அவற்றுள் 1. தென்னகத்தில் படிக்கும் பழக்கம். 2. இளைஞர்களிடையே படிக்கும் பழக்கம். 3. பெண்களிடையே படிக்கும் பழக்கம். 4. சிறுவர் இலக்கியம் முதலிய ஆராய்ச்சிகள் மிகமிக முக்கியமானவைகளாகும்.

இந்தியாவிலேயே முதன் முதலாக முத்திங்கள் மொழி பெயர்ப்புப் பயிற்சி வகுப்பினை நான்கு மொழிகளில் நடத்தியதோடு புத்தகத் தயாரிப்பு, விற்பனைத்துறை, குழந்தை இலக்கியம் பற்றிய கருத்தரங்குகள் பலவற்றையும், பயிற்சி முகாம்களையும் தொடர்ந்து நடத்தி வந்துள்ளது.

இவையன்றிப் பாடப்புத்தகங்களையும் அச்சிட்டுத் தமிழ் நாடு அரசுக்கு வழங்கியுள்ளது. தமிழக அரசின் 'தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனம்' 'தமிழில் மட்டுமே பாடநூல்களை அச்சிட்டு வருகிறது. தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய பள்ளிக்களுக்கான பாடப் புத்தகங்களை இந்தப் புத்தக டிரஸ்ட் அச்சிட்டுத் தருகிறது.

மொழி பெயர்ப்பு நூல்களை வெளியிடுவதற்கென சிறு அமைப்பாகத் தொடங்கப் பெற்ற இந்தப் புத்தக டிரஸ்ட் இன்று பெரிய அமைப்பாக வளர்ந்து, திராவிட மொழிகளின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாய் விளங்கிவருகின்றது.

''சென்றிடுவீர் எட்டுத் திக்கும்; கலைச்செல்வம் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்ற பாட்டுக்கொரு புலவன் வாக்கினை மெய்ப்பிக்கும் வகையில், பிறமொழிச் செல்வங்களைத் தமிழில் தரும் அமுத நிலையமாகத் திகழும் புத்தக டிரஸ்ட், புத்தக உலகின் நண்பன் என்று சொன்னால் அது மிகையாகாது.

—பி.வி.ஜி.



# எருமை மாடு அல்ல அருமை மாடு!

பசுவின் பால, பாடல் பெற்ற பால். ''பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ?'' என்று ஆன்றோர் பாடியிருக்கிறார்கள். எருமையின் பால் அப்படி அல்ல. ஆயினும் நாட்டின் பால் வளப் பெருக்கத்துக்கு முக்கிய ஊற்றாக இருப்பது எருமைகளும் எருமைப்பாலுமேயாகும். கட்டித் தயிர், கெட்டி வெண்ணெய் வேண்டுமளவு பெருக்கிக் கொள்ளக் கூடிய மோர் என்ற அளவில் தாய்மார்கள் பலரும் எருமைப் பாலைத்தான் விரும்பி வாங்குகிறார்கள்.

நல்ல முறையில் பேணப்பட்டு வரும் சிறந்த பசுவின் பாலைக் காட்டிலும் இரண்டு மடங்கு வெண்ணெய்ச் சத்துச் செறிந்ததாக எருமைப்பால் இருக்கின்றது. புரதம், லாக்டோஸ் ஆகியவை பசும்பாலைக் காட்டிலும் எருமைப்பாலில் அதிகம். வெண்ணெய், நெய் ஆகியவைகளின் உற்பத்தியைப் பெருக்கவும் எருமைப்பால் தான் மிக ஏற்றதாக உள்ளது.

ஓர் எருமை ஒரு நாளில் கறக்கும்சராசரிப்பாலின்அளவு 7.82 பவுண்டு. ஆனால் பசு மாடு கறப்பது ஏறக்குறைய அதில் பாதி அளவுதான். இந்தியாவில் கறவைப் பசுக்களில் 94 சதவிகிதம், நாள் ஒன்றுக்கு ஒரு கிலோ பாலுக்குக் குறைவாகத்தான் கறக்கின்றன. 0.4 சதவிகிதம் பசுக்கள்தான் 2 கிலோவுக்கு மேல் கறக்கின்றன. எருமைகளை எடுத்துக் கொண்டால் 19 சதவிகிதம் எருமைகள் நாள் ஒன்றுக்கு 2 கிலோவுக்கு மேல் கறக்கின்றன. இது சராசரிக் கணக்கு. குறிப்பிட்டுச் சொல்லுவதென்றால், பால் உற்பத்தி இங்கு ஒரு படிமான அளவில் இல்லை. ஓர் ஈற்றுக் கறவையில் 200 கிலோ கிராம் என்ற அளவுக்கு மிகக் குறைவான கறவையும் உண்டு. ஓர் ஈற்றுக்கு 4,000 கிலோ பால் கறப்பவையும் உண்டு. எப்படியும் பாற் பண்ணைத் தொழிலிலும் பால் உற்பத்தியிலும் முக்கிய இடம் வகிப்பவை எருமைகளே என்பது தெளிவு.

கழிதட்டை, கழுநீர் ஆகியவைகளை உட்கொண்டும்கூட, அவற்றை நல்ல முறையில் செரித்து, நிறைந்த அளவு பாலாக மாற்றிக் கொள்ளக் கூடிய சீரணத் திறன் எருமைகளுக்குத்தான் உண்டு. ஏழை மக்களும் பேணக்கூடிய அளவில் பராமரிப்புச் செலவு குறைவு. கிடைக்கும் பலன் அதிகம். எருமைக் கடாக்கள் ஏர் உழ, பாரம் சுமக்க, வண்டி இழுக்கப் பயன்படுகின்றன.

### வளர்ப்பு எருமைக்கு உரிய இலட்சணங்கள்

வளர்ப்புக்காகத் தெரிந்தெடுக்கப்படும் எருமை மாடு, பார்ப்பதற்கு இலட்சணமாக, பெண் எருமைக்குரிய பொலிவுடன் மென்மையான நடை உடையதாக இருத்தல் வேண்டும். மேல் தோல் பளபளப்பாகவும், கண்கள் பிரகாசமாகவும் இருத்தல் அவசியம். தலை சிறியதாகவும், நெற்றி அகன்றும், கொம்புகள் சிறியதாகவும் இருத்தல் நலம்.

நல்ல பால் தரும் எருமை, ஏறக்குறைய முக்கோண வடிவமான மூன்று ஆப்புகள் அமைந்தது போல வடிவம் பெற்றிருக்கும். நன்கு வளர்ச்சியடைந்த தெளிவாகத் தெரிகிற மென்மையான பால்மடி இருக்க வேண்டும். ரொம்பவும் தொங்கலான மடி கூடாது.

### பால் கணக்கு

சமச்சீரான சத்துணவு என்ற கண்ணோட்டத்தில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் 285 கிராம் பால் தேவை என்று ஊட்டச்சத்து உணவு வல்லுநர்கள் பரிந்துரைத்திருக்கிறார்கள். ஆனால் நாம் ஒரு நாளைக்கு உட்கொள்ளும் பால் சராசரி அளவு 135 கிராம்தான். எனவே தான் பால் உற்பத்தியைப் பெருக்குவதில் முனைப்பான கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அண்மையில் தமிழகத்தில் பால் பண்ணை மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டிருப்பது இவ்வகையில் குறிப்பிடத்தக்க நடவடிக்கையாகும்.

மழைக்குறைவு, தீவன வசதிக்குறைவு, செழிப்பான வளர்ச்சி இல்லாத கச்சா வகைக் கால்நடைகள், முறையான பேணுதல் இல்லாமை ஆகியவைதான் நமது நாட்டில் பால் வளம் குறைந்திருப்பதற்கான காரணங்கள். இந்த நிலைமையை மாற்றியமைக்கும் வகையில் நல்ல வளமான இனக் கால் நடைகளையும் நாட்டு இனக் கால் நடைகளையும் இணைத்து இனச் சேர்க்கை மூலம் கால்நடைகள் தர மேம்பாட்டுக்கான பணிகள் சீராக நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் நாட்டு எருமைகள், குறிப்பாக உயர்தர முர்ரா எருமைக்கடாக்களு

டன் சேர்க்கப்பட்டு, இன மேம்பாட்டுக்கு வழிகோலப் பட்டுள்ளது. முர்ரா எருமைகள் நமது நாட்டின் பல்வேறு இடங்களுக்கும், பல்வேறு தட்பவெப்ப நிலைகளுக்கும் ஏற்றதாக—பல்வேறு நிலைமைகளுக்கும் தன்னைப் பழக்கப் படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. உலகில் உள்ள மொத்த எருமைகளில் சரிபாதி இந்தியாவில் இருக்கிறது. இந்தியாவில் உள்ள மொத்த எருமைகள் 108 இலட்சம் ஆகும். தமிழ்நாட்டில் உள்ள எருமைகள் சுமார் 27 இலட்சம் ஆகும்.

## முர்ரா எருமைகள்

முர்ரா எருமை இனத்தின் தாயகம் கங்கை-பிரம்மபுத்திரா படுகைப் பகுதிகளாகும். இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மற்றும் பாகிஸ்தான் பர்மா, சீனு, தாய்லாந்து பிலிப்பைன்ஸ், மலேயா, எகிப்து ஆகிய நாடுகளிலும் முர்ரா எருமைகள் இப்போது பரவியுள்ளன. தமிழ்நாட்டில் எருமைகளின் தர மேம்பாட்டுக்காக மாவட்டக் கால்நடைப் பண்ணைகளிலும் கால் நடை மருத்துவ நிலையங்களிலும் முர்ரா பொலி கடாக்கள் வைத்துப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. செயற்கை முறைக் கரு நிலையங்களில் உயர் இன முர்ரா எருமைக் கடாக்கள் வைத்துப் பேணப் பட்டு வருகின்றன. இனப் பெருக்கத்துக்காகக் கிளை நிலையங்களுக்கு இவற்றின் விந்து சேகரிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன. மற்றும் சில நிலையங்களில் இயற்கை முறை இனப் பெருக்கத்துக்காக முர்ரா எருமைக்கடாக்கள் வைக்கப் பட்டுள்ளன. ஒரத்த நாடு, புதுக்கோட்டை, திருநெல்வேலி மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் கடந்த பத்து ஆண்டுக் காலப் பணிகளின் காரணமாக விவசாயிகளிடையேஅதிகமான அளவில் முர்ரா எருமைகள் உள்ளன.

முனைப்பான கால் நடை மேம்பாட்டுதிட்டப்பகுதிகளில் எருமைகளின் கருக் கூறுத் தன்மைகள், முறையாக ஆய்வு செய்யப்பட்டு, செழுமையான இனப் பெருக்கத்துக்கு இடையூருக உள்ள தடங்கல்கள் களையப்படுகின்றன. கவனமான முறையில் பேணுதல், ஊட்டமுள்ள தீவனம், நோய்த் தடுப்புச் சிகிச்சை, ஆரோக்கிய முறையில் இனச் சேர்க்கை, சிறந்த நிருவாக ஏற்பாடு ஆகியவை முக்கிய அம்சமாகக் கொண்டது முனைப்பான கால் நடை மேம்பாட்டுத் திட்டமாகும். இப் பணிகள் முறையாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## அலமாதி பண்ணை

தமிழ்நாட்டில் முர்ரா இனக் கடாக்களின் பணிப் பலன்களை மேம்படுத்த இந்திய அரசாங்கம் செங்கற்பட்டு மாவட்டம் அலமாதியில் கால் நடை இன மேம்பாட்டுப் பண்ணை ஒன்றை நடத்தி வருகின்றது. அரசு கால்நடை வளர்ப்பு நிலையங்களுக்கு இன்னும் அதிகமான அளவில் முர்ரா எருமைக்கடாக்களை வாங்கவும் திட்டமிடப் பட்டிருக்கிறது. 1974—75-ல் ஆண்டுக்கு முர்ரா எருமைக் கடாக்களை வாங்குவதற்கு ரூ. 83,500 ஒதுக்கப்பட்டுள்ளது.

முர்ரா எருமைகள் சாதாரணமாக 4 ஆண்டுகளில் (இன்னும் அளவாகச் சொல்வது என்ருல் 49 மாதத்தில்) ஈனும். ஓர் ஈற்றில் கறவைக் காலம் சுமார் 300 நாட்கள். பால் உற்பத்தி அளவு 1,400 கிலோ



விலிருந்து 1,800 கிலோ வரை. இந்த இனம், பால் வற்றி இருக்கும் காலம் 199 நாட்கள். நன்கு முறையோடு பேணினால், உழைப்புக்கு மிகச் சிறந்த ஊதியம் தருவது முர்ரா எருமை வளர்ப்புத் தொழில்.

எருமைப் பண்ணையில் மிக இன்றியமையாத தேவைகள் நிழலும், தண்ணீரும் ஆகும். எருமையை ஓரளவுக்கு நீர் வாழ் பிராணி என்றே சொல்லலாம். வெய்யிலைத் தாங்காது. கடும் வெய்யிலில் சூட்டுக்கு உள்ளானால் பாதிக்கப்படும். தண்ணீர் இதற்கு நிறைய வேண்டும். இதே சமயத்தில் கடுங் குளிர் இருக்குமானால் அப்போதும் இதற்குப் பாதுகாப்பு வேண்டும். இதன் உடம்பில் வியர்வை வடிப்புச் சுரப்பிகள் மிகக் குறைவு. கோடை காலத்தில் நீர்த் தடாகத்தில் படுக்கவோ, அதல்லது இதன் மீது நீர் இறைக்கவோ வசதி செய்வது அவசியம்.

### தாக்கும் நோய்கள்

அடைப்பான், சப்பை நோய் கோமாரி நோய் ஆகியவைகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ள எருமைகளுக்குத் தடுப்பு ஊசி போடப்படுவது முக்கியம். மற்றும் கழிச்சல், காசநோய், வெக்கை நோய், வயிற்று உப்பிலும், வெள்ளை உண்ணி, அடைப்பு, அசீரணம், குடற்புழு, முதலிய நோய்களுக்கு இடம் தராமலும், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நல்ல சுத்தமான சுற்றுச் சூழலில் வைக்கப்பட்ட கால் நடைகள் கூடுதலான பாலும் ஆரோக்கியமான பாலும் அளிக்கின்றன. அழுக்குப்படிந்த தீவனங்களைத் தரலாகாது. கறக்கும் எருமைகளுக்கு அப்படிப்பட்ட தீவனம் அறவே தரப்படலாகாது.

நல்ல வளமான தீவனம் தரப் படும் கால் நடைகள் தான் விரைவில் ''பலன்படும்'' பருவத்தை அடைகின்றன. போதுமான அளவு உடல் பருமனும், உடல் திண்மையும் அடையப் பெறாத கிடாரிகள், கருத் தரிப்பதற்குத் தகுதி உடையவை ஆகா. நல்ல வளர்ச்சி பெற்ற பின்னரே அவை பலன்படுவதற்கு விடப்பட வேண்டும்.

எருமை எம தரும ராசன் வாகனம் என்று புராணங்கள் கூறும். மந்த புத்தி உள்ளவர்களைத் திட்டுவோருக்கு எருமை தன் பெயரைத் தந்து பழியைத் தான் ஏற்றுக் கொள்ளும். பாலும் தந்து, பழியையும் ஏற்றுக் கொள்ளும் இதனை ''எருமை மாடு'' என்றல்ல ''அருமை மாடு'' என்றே சொல்லலாமே!

— சீ. க. ரா.

தன்னிச்சையாகத் திரியும் வன விலங்குகளைக் காண யாருக்குத்தான் ஆவல் இருக்காது ?

பேருந்தில் சென்றுகொண்டே அவைகளைக் கண்டு களிக்கலாம். இதற்கு 'அடைக்கல வனம்' வழி வகுக்கிறது.

இந்த அடைக்கல வனத்தில், குசராத்திலுள்ள கிர் காடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட ஐந்து சிங்கங்கள் இருக்கின்றன. இவை கூண்டுகளில் அடைக்கப்படவில்லை. பன்னிரண்டு எக்டேர் பரப்புள்ள இயற்கைச் சூழ்நிலையில் அவை தன்னிச்சையாகத் திரிய விடப்பட்டுள்ளன. ஆனால், அவற்றைப் பார்க்கச் செல்கிறவர்கள்தாம் தங்கள் விருப்பம்போல் சுற்றி வர முடியாது. கம்பி வலைகள் போடப்பட்ட மோட்டார் வண்டிகள் அல்லது சிறிய பஸ்களில் ஏறிக்கொண்டு, வனத்தின் உள்ளே சுற்றி வந்து, சிங்கங்களை மிக அருகாமையில் அவர்கள் கண்டு களிக்கலாம்.

ஐதராபாத்தில் உள்ள நேரு விலங்குக் காட்சிப் பூங்காவில் இந்த 'அடைக்கல வனம்' அமைக்கப்பட்டுள்ளது. தென் கிழக்கு ஆசியாவிலேயே இந்த வகையில் இதுதான் முதலாவது எனக் கருதப்படுகிறது.







# முட்டை இருந்தால் ஓவியம் தீட்டலாம் !

'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பார்கள். தேங்காய் ஓடுகளிலும், கயிற்றுப் பொருள்களிலும் கண்ணைக் கவரும் கவின்மிகு பொருள்கள் உருவாவதைப் பார்த்திருக்கிறோம். ஏன், அரிசியில்கூட திருவள்ளுவர் உருவத்தை உருவாக்கும் திறமையைக் கண்டு வியந்திருக்கிறோமல்லவா?

தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஜருகூ என்னும் கிராமத்திலுள்ள ஓர் ஓவியர் முட்டையில் ஓவியம் வரைகிறார்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாமா என்ன? முட்டை இருந்தாலும் சித்திரம் வரையலாமே !

முட்டையில் ஓவியம் தீட்டி மூக்கின்மேல் விரல் வைக்க வைக்கும் இந்த ஓவிய இளைஞரின் பெயர் திரு. சிவசண்முகம். இவர் மானிதஹள்ளி என்ற ஊரிலுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

இந்த முட்டை ஓவியம் எப்படி உருவாகிறது ?

முட்டையை எடுத்து ஒரு துவாரம் செய்து அதன் வழியாக அதிலுள்ள பொருட்களை வெளியேற்றிவிட்டுக் கூர்மையான ஒரு பென்சில் மூலம் முட்டை ஓட்டின் உள்பகுதியில், தான் விரும்பும் ஓவியத்தைத் தீட்டுகிறார். பிறகு அதற்கு வண்ணங்கள் பூசப்படுகிறது. முட்டைத் துவாரத்தின் வழியாக அதிக சக்தியுள்ள ஒளியைப் பாய்ச்சும்போது முட்டை ஓட்டின் வெளிப்பகுதியில் ஓவியரின் கைவண்ணம் ஒளிவிடுகிறது.

இதுவரை இவர் அறிஞர் அண்ணா, இயேசு, தாஜ்மகால், இந்தியாவின் நுழைவாயில், நடராசர் போன்ற உருவங்களை மிக அழகாக வரைந்துள்ளார். ஓவியம் ஒன்றை வரைவதற்கு ஆகும் நேரம் 8 மணி.

இவரது ஓவியத்தை இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற மேல் நாட்டினர் பாராட்டியுள்ளனர். இது சம்பந்தமாக இவரை அழைத்து இவருடைய ஓவியம் அடங்கிய கண்காட்சி ஒன்றை வெளிநாட்டில் நடத்தவும் ஏற்பாடு நடைபெறுகின்றதாம்.

— ஆர். வீராச்சாமி.

## பயண இசைவுச் சீட்டுக்குரிய விண்ணப்பங்கள் பெற புதிய வழிமுறை

தமிழ்நாடு, ஆந்திரம், கர்னாடகம், பாண்டிச்சேரி ஆகியவற்றில் உள்ளோரின் பயண இசைவுச் சீட்டு (பாஸ்போர்ட்) விண்ணப்பங்கள் விஷயத்தில் வட்டார பயண இசைவுச் சீட்டு அலுவலகம் புதிய வழிமுறைகளை வகுத்துள்ளது. இப்புதிய வ முறைகள் மே மாதம் 27-ஆம் தேதியிலிருந்து அமலில் உள்ளது. விண்ணப்பதாரர்கள் பயண இசைவுக் கட்டணமாக 25 ரூபாயும், பயண இசைவுச் சீட்டு அனுப்புவதற்கான அஞ்சல் செலவுகளுக்காக 2½ ரூபாயும் மொத்தம் 27.50 ரூபாய் 'மணி ஆர்டர்' செய்ய வேண்டும்.' இதை நேரடியாக 'வட்டார பயண இசைவுச் சீட்டு அதிகாரி, சாஸ்திரி பவன், சென்னை-600006' என்ற முகவரிக்கு அனுப்பிவிடலாம். 'மணி ஆர்டர்' ரசீதை விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும். விண்ணப்பத்தின் நகல், பயண இசைவுச் சீட்டு (பாஸ்போர்ட்) அளவு புகைப்பட பிரதிகள் நான்கு, நிதிவசதி சம்பந்தமான சான்றிதழ் அல்லது நிதிவசதி உறுதிமொழி ஆகியவற்றுடன் 20க்கு 14 சென்டிமீட்டர் அளவுள்ள சுயமுகவரி எழுதிய உறை ஒன்றையும் விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும். இவற்றை முதலில் மாவட்ட அதிகாரிகளின் பார்வைக்கு அனுப்ப வேண்டும். அவர்கள் அதைத் தம் அறிக்கைகளுடன் வட்டாரப் பயண இசைவுச் சீட்டு அலுவலகத்துக்கு அனுப்புவர்.



# நாடெல்லாம் வரவேற்கும் நறுமணப் பொருட்கள்

தமிழ்நாடு அரசின் வணிக நிறுவனமான சின்கோனாத் துறையில் தயாரிக்கப்படும் கொய்னாப் பொருட்களுக்கு அவற்றின் தரம் காரணமாக அந்நியச் சந்தைகளில் பெரும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. மேற்கு ஜெர்மனி, சோவியத் யூனியன், இங்கிலாந்து போன்று வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இப்பொருட்களை ஏற்றுமதி செய்வதில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இது உற்சாகம் நிறைந்ததொரு கால கட்டத்தையும், நம் நாட்டிற்கு மிகவும் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்டுவதில் இப்பொருட்கள் மென்மேலும் ஈடுபட்டுள்ளதையும் சுட்டிக் காட்டுகிறது.

1972-73-ஆம் ஆண்டில் இத்துறை ஈட்டிய அந்நியச் செலாவணி ரூ. 61,97,790 ஆகும். 1973-74, 1974-75 ஆகிய இரண்டாண்டுகளுக்கு மாகச் சேர்த்து ரூ. 95.00 இலட்சம் அந்நியச் செலாவணி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் (1969-73) இத் துறை ஈட்டிய மொத்த அந்நியச் செலாவணி ரூ. 1,29.82 இலட்சமாகும்.

பல்வேறு மருந்து மற்றும் நறுமணப் பொருட்களை உற்பத்தி செய்வதில் இத்துறை பாராட்டத்தக்க வளர்ச்சியினை எட்டியுள்ளது.

வால்பாறைக்கு அருகில் ஆனைமலையிலிருக்கும் சின்கோனாவில் உள்ள அரசினர் கொய்னாத் தொழிற்சாலையானது இத்துறையைச் சேர்ந்த தோட்டங்களில் சேகரிக்கப்படும் சின்கோனாப் பட்டையைப் பதப்படுத்திக் கொய்னாப் பொருட்களைத் தயாரிக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட கொய்னாப் பொருள்களாவன:

1. குனைன் சல்பேட் தூள், 2. சின்கோனா ஃபெப்ரி ஃப்யூஜ் தூள், 3. குனைன் ஹைட்ரோ குளோரைடு தூள் (உற்பத்தி செய்யப்பட்ட குவினைன் சல்பேட்டிலிருந்து தயாரிக்கப்படுவது) 4. குனிடின் சல்பேட் தூள் 5. சின்கோனா ஃபெப்ரி ஃப்யூஜ் மாத்திரைகள்.

நீலகிரியில் நடுவட்டத்திலுள்ள மருந்து மற்றும் நறுமணத் தைலத் தொழிற்சாலை, பல்வேறு மருந்து மற்றும் நறுமணத் தைலங்களைப் பரிசோதித்துத் தூய்மையாக்கி, தரம் பிரித்து சிப்பம் செய்து விற்பனைக்கனுப்புவதில் வழக்கம்போல் ஈடுபட்டுள்ளது. இது தவிர, நறுமணத் தைலங்களின் உற்பத்தி அவற்றின் தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சியையும் மேற்கொண்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்தொழிற்சாலையால் தூய்மைப்படுத்தப்பட்டு, தரம் பிரிக்கப்பட்டு, சிப்பம் செய்து விற்பனைக்கனுக்கப்பட்ட தைலங்களின் மதிப்பு:

1971-72-ல் ரூ. 5,03,500; 1972-73-ல் ரூ. 7,64,600 ; 1973-74-ல் ரூ. 13,29,000 ஆகும்.

1964-ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டுச் சந்தைகளில் கொய்னாப் பொருட்களுக்கான தேவை சீராக அதிகரித்துக் கொண்டே வருகிறது. மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் விற்பனை மூலம் 1971-72-ல் கிடைத்த வருமானம் ரூ. 5.58 இலட்சம். 1973-74-ல் 11.00 இலட்சம்.

மருந்து மற்றும் நறுமணச் செடிகளைப் பயிரிட்டு அவற்றைப் பதப்படுத்துவது தவிர, பல்வேறு மருந்து மற்றும் நறுமணப் பயிர்களைப் பயிரிடும் முறைகளை மேம்படுத்துதல், உயர்விளைச்சலையும் ஆதாயத்தையும் தரும் செடிவகைகளை வளர்த்தல், அவற்றைப் பதப்படுத்துதல் ஆகியவை பற்றிய ஆராய்ச்சியையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களைப்பற்றித் தெரிந்து கொள்வோமா?

1. மருந்து மற்றும் நறுமணப் பயிர்களை விற்பனைக்காகப் பெருமளவில் பயிர் செய்வதை விரிவுபடுத்துதல்.

2. மருந்தும் மற்றும் நறுமணச் செடிப் பொருட்களைப்

**அன்றாட வாழ்க்கையில் நறுமணப் பொருள்களும் தக்க இடத்தைப் பெற்று வருகின்றன. கொய்னா, மருந்து மற்றும் நறுமணத் தைலங்களைத் தயாரிக்க சிறப்பான வகையில் பணியாற்றி வருகிறது சின்கோனாத் துறை. இத்துறை ஆற்றும் பல்வேறு பணிகள் பற்றிய தகவல்களைக் கூறுகிறது இக்கட்டுரை.**

பதப்படுத்தும் முன்னோடித்திட்டம்.

3. மருந்து மற்றும் நறுமணச் செடிகள் பற்றிய முனைப்பாக ஆராய்ச்சியும் வளர்ச்சியும்.

4. அதிக அளவில் கொய்னாவையும் குனிடினையும் தரவல்ல மேம்பாடான சின்கோனாச் செடிவகைகளை கிளை நடு முறைகள் மூலம் வளர்த்தல்.

5. இத்துறையின் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோர்களுக்குக் கட்டட வசதிகள், சாலை வசதிகள் மற்றும் இதர வசதிகள் செய்து கொடுத்தல்.

6. இத்துறையின் இரு தொழிற்சாலைகளுக்குத் தேவையான சாதனங்களை வாங்குதல்.

7. மருந்து மற்றும் நறுமணப் பயிர்களுக்குப் பாசனமளிப்பதை மும்முரமாக்கும் திட்டம்.

1973-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாளன்று உள்ளவாறு சின்கோனாத் துறையின் மொத்த இருப்புகளின் மதிப்பு ரூ. 3,01,04,200 ஆகும்.

அனைத்து நாட்டுச் சந்தைகளில் இப்போது நிலவி வரும் போக்குகள் இம்மாநிலத்தின் கொய்னாப் பொருட்களுக்கு ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை உறுதி செய்கின்றன.

சின்கோனா பயிரிடப்படும் பரப்பளவு 2,630 எக்டேராக இருக்க வேண்டும் என்பது திட்டம். 30-9-73 ஆம் நாளன்றுள்ளபடி சின்கோனா பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு 2,379.19 எக்டேராகும். இதைத் தேவையான அளவுக்குக் கொண்டு வருவதற்காகப் புதிய பரப்புகளில் சின்கோனா பயிரிடப்பட்டு வருகிறது.

1973-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30-ஆம் நாள் வரை இத்துறைத் தோட்டங்களில் சின்கோனா மற்றும் இதர பயிர்கள் பயிர் செய்யப்பட்டுள்ள பரப்பளவுகளின் விவரம் வருமாறு.

மருந்து மற்றும் நறுமணத் தைலங்களைக் கொடுக்கும் பயிர்களைப் பயிரிடுவதன் மூலம் இத்துறையின் வருவாய் கூடுதலாகிறது. இப்பயிர்கள் பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு சீராக அதிகரித்து வருகிறது. உற்பத்தி முறைகளை மேம்படுத்திச் செலவுகளைச் சிக்கனப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பயிர்கள் மீதான மும்முர ஆராய்ச்சித் திட்டம் இந்நோக்கத்தைக் கொண்டுள்ளது.

இத்துறை எய்திய குறிப்பிடத்தக்க சாதனைகள் பல. அவை:

1. சின்கோனா ஃபெப்ரிஃப்யூஜிலிருந்து குனினைன் சல்பேட்டையும் குனிடின் சல்பேட்டையும் தயாரித்தல்.

2. சின்கோனைன், சின்கோனிடின் அல்கலாய்டுகளை முன்னோடி அளவில் பிரித்தெடுத்தல்.

3. மேலும் சிறந்த முறையில் (BP), (IP) வகை யூகலிப்டஸ் தைலங்களைத் தயாரித்தல்.

4. மூடுபனியை எதிர்த்து நிற்கவல்ல ஜெரேனியம் பயிர் வகையைப் பிரித்தெடுத்து அவற்றின் பெருக்கத்திற்காகப் பயிர் செய்தல்.

1973-74-ஆம் ஆண்டில் நிறைவேற்றப் படவிருக்கும் பணிகள் பல:

(1) 84.5 எக்டேரில் மருந்து மற்றும் நறுமணப் பயிர்களைப் புதிதாகப் பயிரிடுதலும், ஏற்கெனவே பயிரிடப்பட்டுள்ள 333.75 எக்டேரில் நிலைப்படுத்தலும்.

(2) 31 எக்டேரில் சின்கோனாப் பயிரைப் புதிதாகப் பயிரிடுதலும், அது ஏற்கெனவே பயிரிடப்பட்டு வெட்டப்பட்ட 128.10 எக்டேரில் நிலைப்படுத்துதலும்.

(3) கிளை நடுமுறையில் ஆறு இலட்சம் சின்கோனாச் செடிகளை உற்பத்தி செய்தல்.

(4) ரூ. 13.29 இலட்சம் மதிப்புடைய 5,500 கிலோ யூகலிப்டஸ் தைலம், 1,230 கிலோ ஜெரேனியம் தைலம், 2,520 கிலோ யூகலிப்டஸ் சிட்ரியோடோரா தைலம் 4,440 கிலோ ஜாவா சிட்ரனல் தைலம், 50 கிலோ கற்பூரத் தைலம் 190 கிலோ லெமன் கிராஸ் தைலம், 28 கிலோ விண்டர் கிரீன் தைலம், 5 கிலோ பச்சௌலி தைலம், 3,00,000 கற்பூர வில்லைகள் ஆகியவற்றைத் தயாரித்தல்.

(5) ஏறத்தாழ ரூ. 55 இலட்சம் மதிப்புள்ள 9,000 கிலோ குனைன் சல்பேட், 7,200 கிலோ சின்கோனா ஃபெப்ரி ஃப்யூஜ் 180 கிலோ குனிடின் சல்பேட் ஆகியவற்றைத் தயாரித்தல்.

(6) ஏறத்தாழ 500 கிலோ இஞ்சிச் சாறு தயாரித்தல்.

யூகலிப்டஸ் தைலம் காய்ச்சி யெடுக்கப்பட்ட பின் படியும் மீதிப் பொருள்களிலிருந்து 'சின்ஃப்ரெஷ்' என்னும் நாற்றம் போக்கி இவ்வாண்டில் தயாரிக்கப்பட்டுள்ளது.

புதுடெல்லியுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும், மாநில அரசும் சரிபாதிச் செலவை மேற்கொண்டுள்ள கூட்டுத் திட்டமான யூகலிப்டஸ் சிட்ரியோடோரா மீதான ஆராய்ச்சித் திட்டம் நீலகிரித் தோட்டங்களில் இத்துறையினால் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியோரைக் குடியமர்த்த ஆனைமலை, அரசினர் சின்கோனாத் தோட்டங்களை விரிவுபடுத்தவும் வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு வருவாய்த் துறையினால் 1973 ஏப்ரல் திங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்திய அரசு ரூ. 5 இலட்சம் நேரடியான கடனை வழங்கியுள்ளது. 125 அகதிக் குடும்பங்களிலிருந்து 250 அகதிகளை வேலைக்கமர்த்துவது என்ற இலக்கின் கீழ் இதுவரை 55 குடும்பங்களிலிருந்து 157 அகதிகளுக்கு ஆனைமலை, அரசினர் சின்கோனாத் தோட்டங்களில் வேலை தரப்பட்டுள்ளது.

| பயிரின் பெயர் | நீலகிரியில் உள்ள பரப்பளவு | ஆனைமலையில் உள்ள பரப்பளவு | மொத்தம் |
|---|---|---|---|
| | (............ | ஹெக்டேர்களில் | ......) |
| சின்கோனா | 409.93 | 1,969.26 | 2,379,19 |
| மருந்து மற்றும் நறுமணச் செடிகள் | 675.32 | 301.72 | 97047. |



# கோழி மங்கை

டாக்டர் பி. போத்தி,

வெள்ளை நிறத்துடையாள் வீட்டிலேயே தங்கிடுவாள்
மெள்ளவே நடந்திட்டு மேனி சிலிர்த்திடுவாள்
அள்ளியிட்ட தீனியை ஆவலாய்த் தின்றிடுவாள்
எள் அளவும் ஆண்வாடை எஃதென் றறிந்திடாள்
கொண்டை சிவந்திருப்பாள் குறுகிய கண்ணுடையாள்
பண்டை ஆழ்கூழ் படுக்கையை ஏற்றிடுவாள்
வெண்முத்தின் வெண்ணிறத்தை வென்றிடும் தன்மையாய்
உண்முட்டை ஆண்டுக்கு இருநூற்றி அறுபதைத்
தாண்டியே தந்திடுவாள் தளரா திருந்திடுவாள்
அண்டிய மக்கட்கு அதிகலாபம் தந்திடுவாள்
எத்தனையோ பேர்பெற்றுள் எல்லாமே நற்பெயரே
இத்தரையில் இவளுக்கு இடாதபெயர் எதுவுண்டு?
பக்தி பெருக்கப் படைத்திட்ட மதம்யாவும்
சக்தியாம் சர்வமாம் சிவனும்ஓர் ஆண்டவனைப்
பல்வேறு பேரினில் போற்றிப் புகழ்வதுபோல்
எல்லாப் பெயர்களும் இப்பெண்ணைக் குறிப்பவையே !
நடைகாட்டி நளினமுட்டி நாட்டினம் கொண்ட
அடைகாத்தல் பழக்கத்தை அறவே விரட்டி
கடைகாட்டி நித்தம் கனமுட்டை காட்டிடும்
இடையில்லா உடலாள் யாரென் றறிவீரோ?
உண்டு உவந்து உலகத்தோர் வாழ்ந்திட
வெண்மைப் புரட்சியை வையகத்து உண்டாக்கி
நன்மைபல நல்கவந்த வீரியக் கோழியே!
எண்ணிப் பார்த்திடுவீர்! இதயத்துக் கொண்டிடுவீர்!
கண்ணெனக் காத்திடுவீர்! கோழி வளர்த்திடுவீர்!
உண்டுபல நன்மை உமக்கு!


காதி கிராப்ட்
அளிக்கிறது சுவையும், வெண்மையும்.
கோபுரம்
கோபுரம்
சுத்தமான
தேன்
HONE
ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.
ஆரோக்யம் தரும் சுத்தமான தேன்,
கதர்த்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட்
ஆடைகள், சுத்தமான எண்ணெய்,
கலையழகு கொஞ்சும் கைவண்ணப்
பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப்
பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல
பொருட்களையும் வாங்கலாம்.
தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி
மாநிலங்களில் 200க்கும் மேலான
காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை
பூர்த்தி செய்கின்றன.
தொலைபேசி சென்னை 29684 81954
திருச்சி 3814
கோவை 35051
தமிழ்நாடு



# சுவையுணர்வும் மண உணர்வும்

"ஆகா! உள்ளே என்ன சமையல் நடைபெறுகிறது? வாசனை மூக்கைத் துளைக்கிறதே!''-இப்படி ஒருவர் கேட்கிறார்.

''முருங்கைக்காய் சாம்பார் தயாராகிறதா?'' - இப்படிக் கேட்கிறார் இன்னொருவர்.

வீட்டிலே சமையல் நடப்பதும், முருங்கைக்காய் சாம்பார் தயாராவதும் வீட்டிலுள்ள குடும்பத் தலைவிக்கு மட்டுமே தெரியும். ஆனால் வெளியிலிருந்து வீட்டின் உள்ளே வருபவர்களுக்கு முருங்கைக்காய் சாம்பார் தயாராகிறது என்பது எப்படித் தெரியும்?

அதுதான் இயற்கை, மனிதனுக்கு அளித்திருக்கும் மண உணர்வு என்னும் பெரும்பேறு!

அடுத்து வேறொரு கட்டம்! சமையல் முடிந்து அதன் பின் விநியோகம் ஆகும் கட்டம்!

''அடாடா! பாசந்தி என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும்! அதிக இனிப்பும் இல்லை-குறைவான இனிப்பும் இல்லை! தேவைக்கு ஏற்றபடி கச்சிதமாக அமைந்திருக்கிறதே''-பாசந்தியைச் சாப்பிட்டவர் தரும் பாராட்டுரை.

இந்தப் பாராட்டுரைக்குக் காரணம் என்ன?

'பாசந்தி இனிப்பாக இருக்கிறது-பஜ்ஜி காரமாக இருக்கிறது - பக்கோடாவில் உப்பு அதிகமாகிவிட்டது' • என்றெல்லாம் நம்மைச் சொல்ல வைப்பது எது? நமது நாவுக்குக் கிடைத்துள்ள சுவையுணர்வு!

சுவையும் மணமும் இரசாயன உணர்வுகளாகும். இது வரை இவற்றிற்கு எவரும் அறிவியல் வாயிலாக விளக்கம் தரவில்லை. இவற்றைப் பற்றி நமக்கு ஓரளவு விளக்கங்கள் கிடைக்கலாம் என்றாலும், ஆப்பிள் பழத்தைச் சுவைத்துப் பார்க்காமல்-அதன் சுவையைச் சொல்ல முடியுமா? அழகு முல்லையை முகர்ந்து பார்க்காமல் அதன் மணத்தை எடுத்துரைக்க முடியுமா? முடியாது!

ஒளி, ஒலி ஆகியவற்றை ஒளி அலைகளாக - ஒலி அலைகளாக மாற்றிப் பதிவு செய்து கொண்டு அளவெடுக்கலாம். நாம் ஒரு குரலைக் கேட்டால்- நமது குரல்வளை-நாக்கு, உதடுகள் ஆகியவற்றின் உதவியால் அதே குரலை நம்மால் எழுப்ப முடியும்! ஒரு பொருளைப் பார்த்தால் - அப்பொருளைப் போன்ற மாதிரியை நம்மால் உருவாக்க முடியும்! அந்தப் பொருளைப் போன்று ஓவியமும் தீட்ட முடியும்! ஆனால், வலி, உடல் அரிப்பு போன்ற தொட்டு உணரக் கூடிய உணர்வுகளைப்போலப் பொருள்களைத் தொட்டுப் பார்ப்பதன் வாயிலாகச் சுவையையும். மணத்தையும் நாம் உணர்கிறோம்.

பொருளைச் சுவைத்த பின்புதான் அதன் சுவையை விளக்கிச் சொல்ல முடிகிறது. நுகர்ந்த பின்னர்தான் அதன் மணத்தை விளக்கிக் கூற முடிகிறது.

நமது சுவையுணர்வுகளும் மண உணர்வுகளும் மிகமிகக் கூர்மையானவை. எவ்வளவு சிறிய பொருளென்றாலும் நாம் மிக எளிதில் அவற்றின் சுவையையும், மணத்தையும் சொல்லிவிடுகின்றோம். இருப்புச் சட்டியிலே கடுகு பொரிக்கப் பட்டாலும், சீரகம் தாளிக்கப் பட்டாலும், அவற்றை நமது மூக்கு, எளிதில் கண்டு பிடித்து விடுகிறது.

உண்ணப்படும் பொருள் ஒரு தேக்கரண்டி அளவுதான் நமக்கு விநியோகிக்கப்பட்டாலும்-அந்தப் பொருளில் என்னென்ன மூலப் பொருள்கள் கலந்திருக்கின்றன என்பதையும் அவற்றின் மணங்களையும் நாம் எளிதில் தெரிவிக்க முடிகிறது.

பொருள்களின் சுவையை நமது நாக்கில் உள்ள சுவை அரும்புகள் தெரிவிக்கின்றன. நாக்கு, உணவுப் பொருட்களை அளிக்கும் நடுநிலைச் சாதனமாகத் திகழ்கிறது. உடலின் மற்றப் பகுதிகளிலுள்ள தோல் திசுக்களைப்போன்று, நாக்கு, தொடு உணர்ச்சியை அறிந்து கொள்கிறது. குரல் வளையிலிருந்து வெளி வரும் குரலைக் கட்டுப்படுத்திப் பேச்சாக மாற்ற உதவுகிறது. நாக்கு ஒவ்வொரு முறை அசையும்போதும் அதன் உரு மாறுபடுகிறது. உணவுப் பொருள்களை நன்கு கடித்து விழுங்குவதற்கும் நாக்கு பயன்படுகிறது.

மனிதனுக்கு நாக்கில் மட்டும் தான் சுவையரும்புகள் உள்ளன. ஆனால் விலங்குகளுக்கு அப்படியில்லை. அவற்றின் வாய் முழுதும் சுவை அரும்புகள் நிறைந்திருக்கின்றன. உலகத்தில் முதன் முதலாகத் தோன்றியதாகச் சொல்லப்படும் நீர்வாழ் உயிரினங்களின் உடல்களின் பெரும்பகுதிகளில் சுவை அறியும் உறுப்புகள் உள்ளன. சான்று, மீன்; மீனின் செவுள் பகுதிக்கு அருகில் சுவை அறியும் உறுப்பு உள்ளது.

இனிப்பு
துவர்ப்பு
கசப்பு
உவர்ப்பு-ஆகிய சுவை உணர்வுகளை அறிந்து கொள்வதற்குத் தனித்தனிச் சுவையரும்புகள் உள்ளன. இவை




யாவும் உருவத்தில் ஒன்றைப் போலவே மற்றொன்று இருக்கும் என்றாலும் இவற்றிலுள்ள இரசாயனப் பொருள்கள் வெவ்வேறாகக் காணப்படும். அந்த வேறுபாட்டினால்தான்

நாம் பல்வேறு சுவைகளை உணர முடிகிறது.

அணிலுக்கு 6 ஆயிரம் சுவையரும்புகள் - ஆட்டிற்கு 10 ஆயிரம் சுவையரும்புகள்- பன்றி, செம்மறியாடு ஆகியவற்றிற்கு 15 ஆயிரம் சுவையரும்புகள்- குழி முயலுக்கு 17 ஆயிரம் சுவையரும்புகள்- எருதுக்கு 35 ஆயிரம் சுவையரும்புகள், வெளவாலுக்கு 800 சுவையரும்புகள் உண்டு என்று ஆய்வாளர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

ஒரு பொருளின் மணத்தை உணர்வதற்கு நாம் சிறிது நேரம் எடுத்துக் கொள்கிறோம் அல்லவா? அதைப் போல ஒரு பொருளின் சுவையை அறியவும் நமக்குச் சிறிது நேரம் தேவைப்படுகிறது.

நாக்கின் நடுப்பகுதியில் எந்தவிதச் சுவையரும்பையும் காணமுடியாது. இனிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கசப்பு போன்ற சுவையுணர்வுகளைத் தெரிவிக்கக் கூடிய சுவையரும்புகள் நாக்கில் பல இடங்களில் உள்ளன.

நாக்கு நுனியின் வாயிலாக நாம் இனிப்புச் சுவையை உணருகிறோம்.

உணவுப் பொருள் கசப்பாக உள்ளது என்பதை நாக்கின் உட்பகுதியில் உள்ள சுவையரும்புகளின் உதவியால் அறிந்து கொள்கிறோம்.

துவர்ப்புச் சுவையை, நாக்கின் இரு ஓரங்களிலுமுள்ள சுவை யரும்புகள் வாயிலாகத் தெரிந்து கொள்கிறோம்.

உப்புச் சுவையை நமக்கு உணர்த்துபவை-நுனி நாக்கிலும் நாக்கின் இரு ஓரங்களிலும் உள்ள சுவையரும்புகள் தாம்.

வயதுக்கு ஏற்றாற்போல் சுவையுணர்வும் மாறுபடுகிறது. குழந்தைகளின் நாக்கில்-குறிப்பாக நுனி நாக்கில் சுவையரும்புகள் அதிகம் உள்ளன. இரு தாடைகளின் உட்புறத்திலும் சுவையரும்புகள் உள்ளன. அதன் காரணமாகத்தான் குழந்தைகள் இனிப்புப்பொருட்களை மிகமிக விருப்பத்துடன் சாப்பிடுகிறார்கள்.

சுவையுணர்வு குறித்துப் பல்வேறு கருத்துக்கள் இருந்து வருகின்றன. மக்கள் சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட அளவினர், பொருள்களின் சுவைகளை முற்றிலும் உணர்வதில்லை. ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் சுவையில் காணப்படும் வேறுபாடுகளைக் கூடச் சிலர் அறிந்து கொள்வதில்லை-உணர்ந்து கொள்வதில்லை.



இது குறித்து ஓர் ஆய்வு நடத்தப்பெற்றது.

ஃபினைல்-தயோ கார்பமைடு என்னும் இரசாயனப் பொருள் சிலருக்குக் கொடுக்கப்பட்டது. அவர்களில் பலருக்குப் பல்வேறு விதமான சுவையுணர்ச்சியை அந்தப் பொருள் ஏற்படுத்தியுள்ளது என்பது ஆய்வின் வாயிலாகத் தெரிய வந்தது. இந்தச் சுவை வேறுபாடு பரம்பரையில் காணப்படும் வேற்றுமைகளின் அடிப்படையில் ஏற்படுகிறது என்று விளக்கிக் கூறப்பட்டது.

மற்றொரு ஆராய்ச்சி நடைபெற்றது! அது என்ன தெரியுமா?

ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கு விருந்து நடைபெற்றது. காலை உணவுக்குப் பின்னர், அவர்கள் ஒவ்வொருவருக்கும் அரை கிராம் சோடியம் பென்ஸோனேட் என்னும் இரசாயனப் பொருள் கொடுக்கப்பட்டது. அதைச் சுவைத்துப் பார்க்கும்படி கூறப்பட்டது. விருந்தினர் சுவைத்தனர். அதன் பின்னர் அவர்களது சுவையுணர்வுக் கருத்துக்கள் தொகுக்கப்பட்டன.

''இதற்குச் சுவையே இல்லை'' -30 சதவீதத்தினர் இவ்வாறு தெரிவித்தார்கள்.

''கசப்பாக உள்ளது''-10 சதவீதத்தினர் இப்படிக் கூறினர்.

''இனிப்பாக இருக்கிறது''- 15 சதவீதத்தினர் இவ்வாறு சொன்னார்கள்.

''உவர்ப்பாக உள்ளது''-17 சதவீதத்தினரின் கருத்து இது.

''இனிப்பும் உவர்ப்பும் கலந்ததாக இது உள்ளது''-9 சதவீதத்தினர் இவ்வாறு மொழிந்தனர்.

''துவர்ப்புத் தாங்கமுடியவில்லை''-இப்படியும் 9 சதவீதத்தினர்.

''காரமாக உள்ளது''-4 சதவீதத்தினர் நவின்ற கருத்து இது.

எதையோ நினைக்கிறார்கள். ஆனால் எதையும் கூற முடியாமல் திணறுகிறார்கள்-இப்படி 4 சதவீதத்தினர்.

எதுவுமே கூறாதவர்கள் - கூறுகின்ற எண்ணமே இல்லாதவர்கள் 2 சதவீதத்தினர்.

ஆக, அந்தப் பொருளின் உண்மையான சுவையை அதாவது 'சுவையே இல்லை' என்பதைத் தெளிவாகத் தெரிவித்தவர்கள் 30 சதவிகிதத்தினர் தான்!

இப்படி, ஒரே பொருளைப் பற்றிப் பலர் பல்வேறு சுவையை எடுத்துக் கூறியிருக்கிறார்கள் என்பது ஆய்வின் வாயிலாகத் தெளிவாகியுள்ளது.

நாக்கின் சுவையரும்புகளில் -நமக்குப் புலப்படாது உள்ள இரசாயனப் பொருள்கள்தான் சுவையுணர்வுகளை நமக்கு அறிவிப்பதில் முதன்மையாக உள்ளன. புரதச் சத்தின் தன்மைகளைக் கொண்டு அமைந்துள்ள இந்த இரசாயனப்பொருள்கள் ஒவ்வொரு பொருளின் சுவைக்கேற்ற வண்ணம், தமது தன்மைகளை மாற்றிக் கொள்கின்றன. சுவைத் தூண்டுதலுக்கு ஏற்றாற்போல், இந்த இரசாயனப் பொருள்கள் தனிக் கூறுகளாகப் பிரிந்து ஊக்குவிக்கும் பொருட்களாக உருப்பெறுகின்றன.

குறிப்பாக-இனிப்பு, கசப்பு ஆகிய சுவையுணர்வுகள் இர்சாயனப் பொருட்களின் அடிப்படையில்தான் ஏற்படுகின்றன. பசு, பன்றி போன்றவற்றின் நாக்குகளில் உள்ள சுவையரும்புகளிலிருந்து வெளியாகும் புரதம், இனிப்பு, கசப்புப் பொருட்களுடன் சேர்ந்து கூட்டுப் பொருளாக உருவாகிறது. ஆனால் மனிதனின் சுவைத் தன்மையைப்

பொறுத்தவரையில் அவற்றின் இனிப்பு, கசப்புத் தன்மைகள் நிலைத்திருக்கின்றன. கசப்புப் பொருட்களுடன் சேரும் புரதப் பொருட்களின் இரசாயனத் தன்மை இனிப்புப் பொருள்களுடன் சேரும் புரதப் பொருளின் இரசாயனத் தன்மையிலிருந்து அதிக அளவு வேறுபட்டிருக்கிறது.

சுவையும் மணமும் ஒன்றாகிவிட முடியாது. ஒருபொருளின் மணம், அது ஆவியாகும் தன்மையைப் பொறுத்துள்ளது.

பொதுவாக, அணுக்களை விரைவாகத் தொடர்ந்து வெளிப்படுத்தும் பொருட்கள் தாம், மிகவும் மணம் கொண்டு விளங்கும்.

குட்டி போட்டுப் பால் கொடுக்கும் இனத்தைச் சேர்ந்த இளம் உயிரினங்கள் அனைத்துக்கும் பொருளின் மணத்தை நுகரக்கூடிய ஆற்றல் கிடையாது. இவற்றின் உணவு தாய்ப்பால்தான்.

மனித வாழ்க்கையில் ஒருவன் இளமைப் பருவத்திலிருக்கும் போது-பொருளின் மணத்தை நன்கு உணரமுடிகிறது. ஆனால் போகப் போக-வயது ஏற ஏற-சுவையுணர்வு குறைகிறது. குறிப்பாக 45 வயதுக்கு மேல் இந்தச் சுவையுணர்வு குறைந்து கொண்டே வருகிறது.

மூக்கில், மணம் அறியும் உறுப்புகள் எப்போதும் ஏதாவது ஒரு வண்ணத்தில் காணப்படுகின்றன. மனித மூக்கில் இந்தப் பகுதி மஞ்சள் வண்ணத்தில் உள்ளது. விலங்குகளின் மூக்குகளில் இந்தப் பகுதி, கரும் பழுப்பு நிறத்தில் உள்ளது. இந்த 'பிக்மெண்ட்'தான் மணத்தை அறிந்து கொள்ளத் துணைபுரிகிறது.

நிறத்துக்குக் காரணமான 'பிக்மெண்ட்' இல்லாததால் வெளிறிய நிறத்துடன் பிறக்கும் விலங்குகளுக்கு 'ஆல்பினோ' என்று பெயர். இத்தகைய விலங்குகளின் மூக்கில் 'பிக்மெண்ட்' இல்லாததனால் அவை மணம் அறி உணர்வில் வேறுபாடு கண்டுகொள்வதில்லை. அதன் காரணமாக அவை நச்சுத் தன்மை வாய்ந்த செடி கொடிகளை அடையாளம் கண்டுகொள்ளாமல் அவற்றைத் தின்று இறந்துவிடுகின்றன. இக்காரணத்துக்காகவே சில வேளாண் குடியினர் வெள்ளைப் பன்றிகளை வளர்ப்பதில்லை. சாதாரண கருப்புப் பன்றிகளை வளர்க்கவே விரும்புகின்றனர்.

மூக்கில் உள்ள இலட்சக் கணக்கான மணமறி செல்களும் ஆயிரக்கணக்கான சுவையரும்புகளும் செய்திகளை மூளைக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. மணம், சுவை ஆகியவற்றைப் பகுத்து அறியும் பிரிவுகள் இந்தச் செய்திகளை எல்லாம் பெற்றுக் கொண்டு நொடியில் சரியான சுவையையும் மணத்தையும் அறிவிக்கின்றன. எனவே சுவையுணர்வும் மண உணர்வும் வாழ்வின் இரு பெரும் பேறுகளாகும்.



## தஞ்சைப் பெரிய கோயில் திருப்பணி

தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீசுவரர் கோயிலைப் பழுது பார்ப்பதற்கும் பராமரிப்பதற்கும் 5-வது திட்ட காலத்தில் மைய அரசு தொல்பொருள் துறை ரூ. 5 இலட்சம் ஒதுக்கியுள்ளது. அதேபோல திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்ட சோழபுரம் கோயிலைப் பழுது பார்ப்பதற்காக ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இரு கோயில்களையும் பழுது பார்க்க ஆண்டுதோறும் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 இலட்சம் வீதம் செலவிடப்படும்.

கும்பகோணம் அருகே தாராசுரத்தில் உள்ள கோயிலுக்காக ரூ. 2·5 இலட்சம் வரை செலவு செய்யப்பட்டுள்ளது.

1969-ம் ஆண்டிலிருந்து அருள்மிகு பிரகதீசுவரர் கோயில் திருப்பணிக்காக ரூ. 4 இலட்சம் செலவிடப்பட்டுள்ளதாகத் தொல்பொருள் துறை தெரிவித்துள்ளது. தென் வட்டாரத்தில் உள்ள கோயில்களுக்காக இந்த ஆண்டு மொத்தம் ரூ. 9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



# அமெரிக்காவில் அன்னைத் தமிழ்!



''தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்''

என்பதற்கிணங்க கடந்த, 25 ஆண்டுகளாக அமெரிக்க நாட்டு மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளும், இலக்கியமும் படித்து வருகின்றனர். இவர்களது தொகை அண்மை ஆண்டுகளில் பெருகியுள்ளது. தென்னிந்திய வரலாறு, தத்துவங்கள், சமயங்கள், சமுதாய வாழ்க்கை முறைகள் குறித்துப் பல மாணவர்களும் ஆராய்ச்சி அறிஞர்களும் பேரார்வம் காட்டி வருகின்றனர்.

இன்று பல அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் தமது கல்வித் திட்டங்களில் தென்னிந்திய மொழிகள், இலக்கியப் படிப்புக்குச் சிறப்பிடம் வழங்குகின்றன. அமெரிக்கப் பல்கலைக் கழகங்களோடு தமிழ்நாட்டிலுள்ள ஒரு மொழி ஆராய்ச்சி நிலையம் ஒத்துழைத்து வருகிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலுள்ள மொழியியல் மேல்படிப்பு நிலையம் இவ்வகை ஒத்துழைப்பு வழங்குவதில் முன்னணியில் நிற்கிறது. மிக்சிகன், கலிஃபோர்னியா, பென்ஸில்வானியா, ஆகிய அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுக்கு அண்ணாமலை நிலையம் தோள் கொடுத்து உதவுகிறது.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, வங்காளி, உருது ஆகிய மொழிகளும், தோடா, குடகு, இருளம், நீலகிரி போன்ற பழங்குடி மக்களின் மொழிகளும் பயில அண்ணாமலை மொழியியல் நிலையம் வாய்ப்புகள் வழங்குகின்றது.

மேற்சொன்ன மொழிகளில் புலமை மிக்க அண்ணாமலை அறிஞர்கள் ஆண்டுதோறும் யு. எஸ். பல்கலைக் கழகங்களுக்குச் சென்று, விரிவுரைகள் ஆற்றித் தமது அறிவை அங்குள்ளோருடன் பகிர்ந்து கொள்கின்றனர்; பல்வேறு நிலைப் படிப்புகளுக்கும் உரிய பாடத் திட்டங்கள் வகுப்பதில் அங்குள்ள ஆசிரியப் பெருமக்களுக்குத் துணை செய்கின்றனர்.

மிக்சிகன் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பாடத் திட்டங்கள் வகுக்கும் துறையில் அறிவுரையாளராக ஓராண்டு பணியாற்றியுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் நிலைய இயக்குநர் டாக்டர் அகஸ்தியலிங்கம் கூறுகிறார்;

''1970-ல் மிக்சிகனில் ஒரு மொழியியல் மாநாடு நடைபெற்றது. 5000 பேர் வந்திருந்தனர். நான் பங்கு கொண்டு தமிழ் மொழி பற்றி உரையாற்றினேன். இடைவேளையின்போது, அமெரிக்க வல்லுநர்கள் பலர் நேரே என்னிடம் வந்து, படித்த பின்புதான் தமிழ் எவ்வளவு வளமான மொழி என்று அறிய முடிந்ததென வியந்து பாராட்டினர்.''

அண்ணாமலை மொழியியல் நிலையத்தின் மற்றொரு திட்டத்திலும் மிச்சிகன் பங்கு கொண்டுள்ளது. சோழ மன்னர்களின் வரலாற்றுச் சிறப்புள்ள கல்வெட்டுகள் பற்றிய ஆராய்ச்சியே இந்தக் கூட்டு முயற்சி.

திருவாசகம், குறுந்தொகை ஆகிய சிறந்த தமிழ் நூல்களும் அமெரிக்காவில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

# ஆவணப்பதிவுத் துறை ஆற்றிடும் பணிகள்

ஆவணப் பதிவுத் துறை, சொத்துக்களின் உரிமையைப் பொறுத்த ஆவணங்களைப்பதிவு செய்வதற்குப் பொறுப்பாக உள்ளதுடன், இயங்காச் சொத்துக்களின்மீது உரிமை கோருபவர்களது உரிமைகளை, நிலைநாட்டுவதற்கான ஆவணங்களை வைத்துவரும் பொறுப்பையும் ஏற்றுச் செவ்வனே நடத்தி வருகிறது. இத்துறை, இந்தியப் பங்குதாரர் சட்டம், சங்கங்கள் பதிவுச் சட்டம், பிறப்பு, இறப்பு விகித பதிவுச் சட்டம், சிறப்புத் திருமணங்கள் சட்டம், இந்துத் திருமணச் சட்டம் போன்ற முக்கியமான திருமணப் பதிவுச் சட்டங்களை நிர்வகித்து வருகிறது. 1969, டிசம்பர் திங்கள் 1-ஆம் நாள் முதற்கொண்டு தமிழ்நாடு சீட்டு நிதிச் சட்டத்தையும் இத்துறை நிர்வகிக்கிறது.

**வழிமுறைக் குறிப்புகள் :**

1967-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (திருத்தச்) சட்டத்தின் மூலம், இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் 47-ஏ பிரிவில் புதிய விதித்துறை ஒன்று சேர்க்கப்பட்டது. அதன்படி, 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22-ஆம் நாள் முதற்கொண்டு சொத்துரிமை மாற்ற ஆவணங்கள், சொத்துப் பரிமாற்ற ஆவணங்கள் அல்லது கொடை ஆவணங்கள் ஆகியவற்றிற்கான முத்திரைத் தாள் தீர்வை, அவற்றில் எழுதப்பட்டிருக்கும் மதிப்பின் பேரில் இல்லாமல் சொத்துக்களின் அங்காடி மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுறது.

சொத்துக்களின் அங்காடி மதிப்பினை மதிப்பிடத் துணைப் பதிவாளர்களுக்கு உதவியாக இருக்கும்பொருட்டு வருவாய்த் துறை, பெரும்பாலான மாவட்டங்களில் சொத்து மதிப்பிடுவது பற்றிய வழிமுறைக் கோட்பாடுகளை வழங்கியது. கிராமப் பகுதிகளிலும், நகர்ப் பகுதிகளிலும் உள்ள சொத்துக்களின் மதிப்பீடுகளைத் துல்லியமாக நிர்ணயிக்க வழிமுறைக் கோட்பாடுகளை மேம்பட்ட முறையில் திருத்தியமைப்பதற்கு அரசு, சிறப்புப் பணியாளர்களைப் பதிவுத் துறைத் தலைவரின் கீழ்ப் பணியாற்ற ஒப்பளிப்பு வழங்கியது.

வழிமுறைக் குறிப்புகளை மாற்றியமைக்கும் பணி முடிவடைந்துவிட்ட போதிலும், பதிவு மாவட்டங்கள் சிலவற்றின் புள்ளி விவரங்கள் மிகப் பழையனவாக இருக்கின்றன. நடப்பு விகிதங்களுக்கேற்ப அவை மாற்றியமைக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளன. அந்த வழிமுறைக் குறிப்புகளைப் பரிசீலிக்கத் தனிப்பட்ட வருவாய் ஆவணப் பணியாளர்களை நியமிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**வரவு செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்தல் :**

துணைப்பதிவு அலுவலகங்களின் கணக்குகளை முழு அளவில் தணிக்கை செய்யும் முறை 1969-ல் தொடங்கி 1970-இல் மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டது. இம்முறை, வருவாய் இழப்பையும், இத்துறையில் கணக்குகளைப் பராமரிக்கும் முறையில் ஏற்படக் கூடிய தவறுகளையும் நீக்கி நல்ல பலன் அளித்துள்ளது. இம்முறை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

**முத்திரைத் தாள்கள் பற்றுக் குறையும், பற்றுக் குறையைப் போக்குவதற்கான நடவடிக்கைகளும் :**

முத்திரைத்தாள் பற்றுக் குறையினால் சில காலத்திற்கு முன்பு எழுந்த இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்று, விற்பனை, அடைமானம், கொடை ஆவணங்கள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், ரூ. 500 வரையுள்ள முத்திரைக் கட்டணத்தை வசூலிக்க வெளியூர்களிலுள்ள துணைப் பதிவாளர்களுக்கு அதிகாரம் அளித்துள்ளதே ஆகும். 1967-ல் முதன் முறையாக முகவுரைக்கப்பட்ட இத் திட்டம் 1971, சனவரி முதல் நாளிலிருந்து நிரந்தரமாக்கப்பட்டது. இவ்வசதி, 1-9-1973 முதற்கொண்டு சென்னை மாநகரிலுள்ள அலுவலகங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. பரிமாற்றப் பத்திரங்கள் (Deeds of Exchange) துணைப் பதிவாளரால் 41 ஆவது பிரிவின் கீழ் அவ்வாறு சான்றுகூறப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. சொத்து மதிப்பீடு காரணமாகக் குறைவாகக் கொடுக்கப்படும் நேர்வுகளில் சம்பந்தப்பட்ட தரப்பினர் விரும்பினால் அவ்வாறும், அதற்கென்று குறிப்பிட்டுள்ள நடைமுறையின்படியும் முத்திரைத் தாள்கள் சட்டத்தின் 42-வது பிரிவின் கீழ், ஆவணங்கள் துணைப்பதிவாளர்களால் சான்றளிக்கப்படலாம் என்று வருவாய்த் துறையின் 15.3.71 நாளிட்ட 725-ஆம் எண் (திருத்தப்பட்டவாறுள்ள) அரசாணையில் ஆணை பிறப்பித்தது. முதலில் இது, சென்னை மாநகர் நீங்கலான இடங்களிலுள்ள

துணைப் பதிவாளர்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டது; பின்னர் இவ்விதித்துறைகள் 1973, டிசம்பர் முதற்கொண்டு சென்னை மாநகரிலுள்ள துணைப் பதிவாளர் அலுவலகங்களுக்கும் நீட்டிக்கப்பட்டன.

**புதிய துணைப் பத்திரப் பதிவு அலுவலகங்களைத் தொடங்குதல்:**

பத்திரப் பதிவுக்காக வரும் பொது மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு



அவசியமான இடங்களில் எல்லாம் புதிய துணைப் பதிவு அலுவலகங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய அரசு 1967-ல் ஆட்சிக்கு வந்த பின்னர் புதிதாக 39 அலுவலகங்கள் (1968-69-ல் 10 அலுவலகங்கள், 1969-70-ல் 6 அலுவலகங்கள், 1970-71-ல் 6 அலுவலகங்கள், 1971-72-ல் 11 அலுவலகங்கள், 1972-73-ல் 3 அலுவலகங்கள், 1973-74-ல் 3 அலுவலகங்கள்) அமைக்கப்பட்டுள்ளன. 1974-75-ஆம் ஆண்டில் மேற்கொண்டும் 7 துணைப் பதிவு அலுவலகங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**மங்கிப்போன பதிவுகளை மீண்டும் எழுதுவதற்காகத் தனிப் பணியாளர்:**

பத்திரப் பதிவு அலுவலகங்களில் பேணி வரப்படும் பதிவேடுகளில் மங்கிப்போன பதிவுகளை மீண்டும் எழுதுவதற்காகப் பிரிவு எழுத்தர்களைத் தற்காலிகமாக வேலைக்கமர்த்த அரசு ஒப்பளிப்பு வழங்கியது. 1972-73-ஆம் ஆண்டில் சோதனை நடவடிக்கையாக மதுரை பத்திரப் பதிவு மாவட்டத்தில் 10 பிரிவு எழுத்தர்களையும், தருமபுரி மாவட்டத்தில் 4 பிரிவு எழுத்தர்களையும் வேலைக்கமர்த்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1973-74-ஆம் ஆண்டில் இத் திட்டப் பணி மேலும் நான்கு மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. 1974-75-ஆம் ஆண்டில் இந்தப் பணிக்காக 22 பிரிவு எழுத்தர்களை பணிக்கமர்த்துவதற்கு ஒப்பளிப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**பதிவு மாவட்டங்களைச் சீர் அமைத்தல்:**

பணிச்சுமை மிகுந்த, நிர்வாக அளவுக்கு மீறிய சில பத்திரப்பதிவு மாவட்டங்களின் அதிகார வரம்பைக் குறைக்கும் பொருட்டும், மாவட்டங்களுக்கு இடையில் ஒரே மாதிரியான அளவில் துணைப் பதிவு அலுவலகங்களைப் பிரித்து அமைக்க வகை செய்யும் பொருட்டும், பதிவு அலுவலக ஆய்வாளர்களுக்கு அடக்கமான ஆட்சிப் பகுதி எல்லையை வழங்குவதன் மூலம் அவர்கள் தங்களது பணிகளைத் திறம்படவும் செம்மையாகவும் ஆற்றுவதற்கு வகை செய்யும் பொருட்டும் பத்திரப் பதிவுத் துறையைச் சீரமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்றினை அரசு ஆய்வு செய்து வந்துள்ளது.

இக்காரியத்திற்காகத் துணைப் பணியாளர்களுடன் மாவட்டப் பதிவாளர் பதவி ஐந்திற்கும், பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர் பதவி ஒன்றுக்கும் 1973-74-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அரியலூர், விழுப்புரம், நாமக்கல், திருப்பூர், தென்காசி ஆகிய இடங்களைத் தலைமை இடமாகக் கொண்டு 1.8.'73-லிருந்து ஐந்து புதிய பதிவு மாவட்டங்கள் அமைக்கப்பட்டன. தேவையான துணைப் பணியாளர்களுடன் மாவட்டப் பதிவாளர் பதவி ஐந்திற்கும் பத்திரப் பதிவு ஆய்வாளர் பதவி ஒன்றுக்கும் 1974-75-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கத் தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு மாவட்டத்தில் உள்ள மொத்த எண்ணிக்கை அதன் பிறகு 31 ஆகிவிடும். ஆய்வாளர்களின் எண்ணிக்கை 6 ஆகிவிடும்.

**கடந்த காலத்தில் அனுமதி வழங்கப்பட்டு 1973-74ஆம் ஆண்டில் தொடர்ந்து இருந்த பதிவுக் கட்டணத் தள்ளுபடி:**

முந்திய காலத்தில் வழங்கப்பட்ட பதிவுக் கட்டணத் தள்ளுபடியை 1973-74-ஆம் ஆண்டிலும் அனுபவிக்க உரிமையுடைய ஆவணங்களாவன:

* செம்மறியாடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு ரூ. 5,000-க்கு மேற்படாத கடன்களை வழங்குவதற்காக அடைமானம் வைக்கப்பட வேண்டிய நிலங்களுக்குரிய வில்லங்கச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்களைப் பொறுத்தவரை;

* பிணையத் தொகை செலுத்த வேண்டிய வணிகக் கடன்களுக்காக பர்மா, ஸ்ரீலங்கா அகதிகள் அரசுச் சார்பில் எழுதிக் கொடுத்த இயங்காச் சொத்தில் அடைமானப் பத்திரங்களைப் பொறுத்தவரை;

* அரசு அளித்த கடன்களில் இருந்து வணிகக் கடைகளை வாங்கியதன்மூலம் வாணிகம் நடத்துவதற்காக பர்மா, ஸ்ரீலங்கா அகதிகள் சார்பிலும் தங்களுக்குள்ளே ஒரு கூட்டுறவு அமைப்பாக அல்லது சங்கமாக ஏற்படுத்திக் கொண்டுள்ள அகதிகள் கூட்டத்தின்



சார்பாக எழுதிக் கொடுக்கப்பட வேண்டிய விற்பனைப் பத்திரங்களைப் பொறுத்தவரை;

* கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்களினால் அல்லது அச்சங்கங்களின் சார்பாகப் பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க பத்திரப் பதிவுக் கட்டணத்தைப் பொறுத்தவரை;

* தமிழ்நாடு அரசின் சார்பில் நிலத்தின் வடிவிலும் அல்லது நிலச் சொத்தின் வடிவிலும் தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடையாளர்களால் எழுதிக் கொடுக்கப்பட வேண்டிய நன்கொடைப் பத்திரங்களைப் பொறுத்தவரை;

* டிராக்டர் தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் கடன்

அண்மையில் வெளியான எஸ். எஸ். எல். சி. தேர்வு முடிவுகளில் சென்னை நகரில் புதுப்பாக்கம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, அனைத்து மாநகராட்சிப் பள்ளிகளிலேயே முதன்மையாக வந்துள்ளது.

இப்பள்ளியின் நன்முயற்சியைப் பாராட்டும் வகையில், அதன் ஆசிரியர்களுக்கு ரூ. 300 பரிசு வழங்கப்படவிருக்கிறது.

மாநகராட்சிப் பள்ளிகளிலேயே முதன்மையாகத் தேறிய மாணவருக்கும், மாணவிக்கும் மேற்படிப்புக்குத் தேவையான புத்தகங்கள் வாங்க முழுத் தொகையையும் மாநகராட்சி இலவசமாக வழங்கும்.

பெற்ற சிலர் ஈட்டுப் பத்திரங்களைத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகத்திற்கு மறு ஒப்படை செய்வதற்காக எழுதிக் கொடுக்கும் பத்திரங்கள்;

* பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளுக்காகவென்றே அமைக்கப்பட்ட அகதிகளுக்குப் புது வாழ்வளிக்கும் நோக்கத்தோடு, வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கடன் பெற அரசின் சார்பாக எழுதிக் கொடுக்கும் அடைமானப் பத்திரங்கள்;

* (அ) வருவாய்த் துறையின் 23-10-1971-ஆம் நாளிட்ட 3135-ஆம் எண் அரசாணையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட திட்டத்தின்கீழ் பர்மா, ஸ்ரீலங்கா அகதிகள் கடன் பெற்று அதன் மூலம் வாங்கிய வேளாண்மை நிலங்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் அரசின் சார்பாக எழுதிக் கொடுக்க வேண்டிய விற்பனைப் பத்திரம்;

* (ஆ) மேற்கூறியவாறு வாங்கப்பட்ட நிலங்களை அடைமானம் வைப்பதற்கு அரசுக்கு பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளால் எழுதிக் கொடுக்கப்பட வேண்டிய அடைமானப் பத்திரங்கள்;

* (இ) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் முந்திரி வளர்ச்சித் திட்டத்தின்கீழ்ப் பெறப்பட்ட வில்லங்கச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்களைக் குறித்துப் பெறப்பட்ட தேடுதல் கட்டணம், விண்ணப்பக் கட்டணம் ஆகியவற்றை அரசு தள்ளுபடி செய்தது.

* (ஈ) கூட்டுறவுச் சங்கங்களுக்கும், நிலவள வங்கிகளுக்கும் அளிக்கப்பட்டிருந்த கட்டணச் சலுகை 1974 ஜூன் 30-ஆம் நாள் வரை நீட்டிக்கப்பட்டது.

* (உ) வணிக வங்கிகளிலிருந்து உழவர்கள் கடன்கள் பெறுவது தொடர்பான பத்திரங்களுக்கும், வில்லங்கச் சான்றிதழ்களுக்கும் ஏற்கெனவே அளிக்கப்பட்டிருந்த கட்டணச் சலுகை 1973 ஜூன் 30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**1973-74-ல் பத்திரப் பதிவுக் கட்டணங்கள் தள்ளுபடி செய்யப்பட்ட புதிய நேர்வுகள் :**

கீழ்க்கண்ட நேர்வுகளில் 1973-74-ல் பத்திரப் பதிவுக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன:

1. வருவாய்த்துறையின் 17-12-1969-ஆம் நாளிட்ட 3025-ஆம் எண் அரசாணையில் அனுமதிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் வேளாண்மைக் கடன்கள் பெறுவதற்காக அரசுச் சார்பில் ஸ்ரீலங்கா அகதிகளால் எழுதிக் கொடுக்கப்பட்ட அடைமானப் பத்திரங்கள்;




2. கால்நடை மருத்துவ நிலையங்கள் அடங்கியுள்ள நிலங்கள், கட்டடங்கள் குறித்துக் கால்நடை வளர்ப்புத் துறையின் சார்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட நன்கொடைப் பத்திரங்கள்;

3. தொடக்க நில வள வங்கிகளிடமிருந்து கடன்கள் பெறுவதற்காக, இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களில் தொகுதி ஏற்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ள நிலங்கள் குறித்து வில்லங்கச் சான்றிதழ் கேட்கும் விண்ணப்பங்களின் நேர்வில், ஒரே பத்திரப் பதிவுத் துணை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்களில் நிலங்கள் ஒரே சொத்தாகக் கருதப்படுகின்றன;

4. 1973-74-ஆம் குத்தகை ஆண்டில் சாராயக் கடை உரிமைதாரர்களால், அவர்களிடம் கேட்கப்பட்ட கூடுதல் பிணையத் தொகையை வைப்பீடு செய்து அரசுச் சார்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட அடைமானப் பத்திரங்களைப் பொறுத்தவரை;

**படி எழுதுபவர்களுக்கு உரிமம் வழங்குதல் :**

படி எழுதுபவர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான விதிகள் இறுதியாக வகுக்கப்பட்டு, வருவாய்த் துறையின் 20-9-73 ஆம் நாளிட்ட 5903-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்டன. இதற்கு உரிமம் வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட தேர்வினை விரைவில் நடத்தக் கருதப்பட்டுள்ளது. பத்திரப் பதிவு அலுவலகங்களில் கொடுக்கப்பட வேண்டிய பத்திரங்களைப் பொதுமக்கள் தெளிவாக எழுதப் பெறுவதற்கு இது உதவும். உரிமம் பெற்ற எழுத்தர்கள் இப்பத்திரங்களை எழுதுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களைப் பொதுமக்கள் கொடுத்தால் போதும். உரிமம் பெற்ற எழுத்தர்கள் பத்திரப் பதிவுத்துறையின் அதிகாரத்தின் கீழ் செயல்படுவர்.

**பத்திரப்பதிவுத்துறை அலுவலகங்களுக்கு மேம்பாடு :**

(அ) கட்டடங்கள்: 1972-73-ஆம் ஆண்டு தொடங்கி படிப்படியான நிலையில் 16 இடங்களில் ரூ. 8 இலட்சம் செலவில் அரசுக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு முடிவெடுத்தது. 6 இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு, 1972-73-இல் ரூ. 3,05,000 அனுமதிக்கப்பட்டது. 1973-74-ல் 7 இடங்களில் கட்டடங்கள கட்டுவதற்கு ரூ. 4,49,200 அனு

அறிவின் முதல் துவக்கம் செல்வத்தை வெறுப்பதாகும். அன்பின் முதல் துவக்கம் செல்வத்தை அனைவருக்கும் ஆகச் செய்வதாகும்.

—ரஸ்கின்.

சென்னை நகரில் நடைபாதைகளிலோ பொது இடங்களிலோ குப்பை கூளங்களைக் கொட்டுவோர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

கழிவுப் பொருட்களை நடைபாதைகளிலும், பொது இடங்களிலும் கொட்டுகிறவர்மீது சென்னை மாநகர் முனிசிபல் நகராட்சிச் சட்டம் 222 (1) பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். இச்சட்டத்தின்படி எந்த வீட்டின் முன் குப்பை கூளங்கள் கொட்டி வைக்கப்படுகிறதோ அந்த வீட்டுக்காரருக்கு மூன்று நாட்களில் அவைகள் அகற்றப்பட வேண்டும் என்று முன்னறிவிப்பு கொடுக்கப்படும். அப்படியும் அகற்ருவிட்டால் அவைகளை மாநகராட்சி சட்டம் 380 (2) ன் கீழ் மாநகராட்சியினரே அப்புறப்படுத்துவர். ஆனுல், அகற்றியதற்கான செலவுத் தொகையும், அபராதத் தொகையும் வீட்டுக்காரரிடமிருந்து வசூலிக்கப்படும். புதிதாக வீடு கட்டுபவர்களுக்கும், பழுது பார்ப்பவர்களுக்கும் இது பொருந்தும்.

மதிக்கப்பட்டது. இவ்வாருக ஒதுக்கப்பட்ட ரூ. 8 இலட்சம் தொகையில் 13 கட்டடங்கள் மட்டுமே நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட முடியும். 1974-75-ல் ரூ. 4 இலட்சம் செலவில் துணைப்பதிவாளர் அலுவலகங்கள் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மேசை நாற்காலி முதலிய பொருட்கள்: பத்திரப் பதிவுத்துறை அலுவலகங்களில் நிலையான பதிவேடுகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கு 120 உருக்கு அலமாரிகளை வாங்குவதற்காகும் செலவுத் தொகை ரூ. 1,20,000-க்கு அரசு அனுமதியளிக்க முடிவு செய்துள்ளது.

(இ) பணியாளர்களுக்கு வசதி அளித்தல்: 1973-74-ல் பணியாளர் வசதிகள் செய்து தருவதற்காகச் செய்யப்பட்ட மேம்பாடுகள் வருமாறு:

(1) துணைப் பதிவாளர்கள் அவர்களின் பணியாளர்கள் தேவைக்காக, எல்லாப் பத்திரப் பதிவுத்துறை அலுவலகங்களிலும் மின்சார விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன.

(2) உலர்கழிப்பிடங்களை, நச்சுத் தடைத் தொட்டிக் கழிப்பிடங்களாக (Septic tank latrines ) மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை 55 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 23 பணிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 32 பணிகள் நிறைவேறி வருகின்றன.

(3) கோடை காலங்களில் பணியாளர்களுக்கும், பொது மக்களுக்கும் குடிநீர் வசதியளிக்க, குடிநீர் வசதி இல்லாத ஒவ்வொரு பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 5-க்கு மேற்படாமல் வழங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

(4) தனியார் வீட்டில் அல்லது சிறைச்சாலையில் பத்திரங்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைப் பொறுத்தவரையில், விண்ணப்பதாரர்களிடமிருந்து வரையறுத்த நாட்படி வசூலிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. பதிவு அதிகாரியாலும், அவருடன் வருகின்ற கடைநிலை ஊழியராலும் இத்தொகை பயன்படுத்திக் கொள்ளப்படலாம்.

**தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் :**

இம்மாநிலம் முழுவதும் 1-12-69-லிருந்து தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. பொய்யான, போலியான பதிவு செய்யப்படாத சீட்டு நிறுவனங்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்காக மாவட்டப் பதிவாளர் பதவித் தரத்தில், ஆய்வு அதிகாரி பதவி ஒன்றுக்கும், கடைநிலை ஊழியர் பதவி ஒன்றுக்கும் அரசு அனுமதி வழங்கியது. இவர் சென்னை மாநகரத்திலுள்ள அனுமதி பெற்ற சீட்டுக் கம்பெனிகள், மோசடி வியாபாரத்தில் இறங்கினுல் அவற்றைக் குறித்துத் துப்புத் துலக்குவார். அஞ்சலகச் சேமிப்பு வங்கிக் கணக்குகள் உட்பட சிறு சேமிப்புச் சான்றுகள் அனைத்தையும் ஈடுகளாகச் சீட்டு நடத்துபவரிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று ஆணைகளை அரசு பிறப்பித்துள்ளது. 1973 டிசம்பர் 31 வரை பதிவாகியுள்ள சீட்டுகளின் எண்ணிக்கை 23,736 ஆகும்.

1967-68-லிருந்து 1973-74வரை இத்துறையின் வரவு-செலவுகள் பின்வருமாறு:—

| | | வரவு (ரூபாய் | செலவு இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1967-68 | ... | 229.67 | 70.93 |
| 1968-69 | ... | 259.70 | 82.60 |
| 1969-70 | ... | 270.62 | 90.05 |
| 1970-71 | ... | 319.99 | 100.23 |
| 1971-72 | ... | 344.28 | 121.45 |
| 1972-73 | ... | 345.71 | 125.05 |
| 1973-74 | ... | 253.11 | 95.12 |
| | | (1973 நவம்பர் வரை) | (1973 நவம்பர் வரை) |

இவ்வாறு ஆவணப் பதிவுத் துறை நாட்டிற்கு அரும்பெரும் பணிகளை ஆற்றி வருகிறது என்ருல் அது மிகையாகாது.

# 'தமிழரசு'

## கொண்டாடிய முதல்வர் பிறந்த நாள் விழா



பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்களும், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்களும் பங்கேற்று ஏழைகளுக்கு உணவு வழங்கிய காட்சி.



ஏழைகள் உணவு உண்ணுகிறார்கள்

உங்களுடைய
தந்திச் செய்திகள் விரைவில்
போய்ச்சேர உதவுங்கள்



தந்தி என்றாலே அவசரம்தான்.
உங்களுடைய தந்திச் செய்திகளை விரைவில்
பட்டுவாடா செய்ய நாங்கள் எங்களால்
முடிந்தது அனைத்தையும் செய்கிறோம்.

தந்தியில் விலாசம் முழுமையாக இருந்தால்,
விரைவாகப் பட்டுவாடா செய்ய அது
எங்களுக்கு உதவும். ஆகவே தயவுசெய்து
விலாசத்தை முழுமையாக எழுதுங்கள்.
தவிர, செய்தி போய்ச் சேரவேண்டிய
நகரத்தை எழுதியவுடன், விலாசத்தி
னுடைய பின்கோட் எண்ணின் கடைசி
மூன்று எண்களையும் குறிப்பிடுங்கள்.
ஏனெனில் சில நகரங்களில் ஒன்றுக்கு
மேற்பட்ட தந்தி பட்டுவாடா நிலையங்கள்
உண்டு. பின்கோடின் அந்த மூன்று
எண்கள் தந்தியை உரிய விலாசத்திற்கு
விரைவில் அனுப்ப உதவியாக இருக்கும்.

**தபால் தந்திப் பிரிவு**

davp 73/665



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள்

## 1. தேனீக்களும், சூரிய காந்தியும்!

சூரியகாந்தி ஓர் அழகான, சிக்கனமான, பயிரிட எளிதான, இலாபகரமான எண்ணெய் வித்துப் பயிர்! ஒன்று இரண்டு ஆண்டுகளாகச் சூரிய காந்தியைப் பயிரிடுவதில் வேளாண் பெரு மக்கள் ஆர்வமும், அக்கறையும் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். சூரியகாந்தியின் விளைச்சலை அதிகரிப்பதில் தேனீக்களுக்கும் முக்கிய பங்குண்டு! பூக்க ஆரம்பித்தவுடன், சூரியகாந்தி சுரக்கும் மதுவை நாடி, தேனீக்கள் பூக்களில் மொய்க்கின்றன. அவ்வமயம் பூவில் விதை உண்டாவதற்கான மகரந்தச் சேர்க்கையிலும் தேனீக்கள் பெரிதும் உதவுகின்றன. சூரியகாந்தி பயிரிடும் உழவர் பெருமக்கள் இதுபற்றி அறிந்தோ, அறியாமலோ இருக்கலாம்! நல்ல மகசூலைப் பெறவேண்டுமானால் சூரியகாந்தி பயிரிடும் காலத்தில் தேனீக்களை வளர்க்க வேண்டும் என்பதே இங்கு வலியுறுத்தப்படுகிறது.

சூரியகாந்திப் பயிருக்கு அநேக சிறப்பியல்புகள் உண்டு. இதுகுறைந்த வயதுடைய பயிர். இதனை ஆண்டு முழுவதும் பயிரிடலாம். பல்வகை நிலத்திற்கும் ஏற்றது. மானாவாரியாகவும், இறைவையாகவும் பயிரிடலாம். நிலக்கடலைக்குச் சமமான மகசூல் தரக் கூடியது. ஆனால் சாகுபடிச் செலவு குறைவு. பூச்சிகளும் மற்றும் நோய்களும் அவ்வளவாகப் பாதிப்பதில்லை. ஆகவே, பல உழவர் பெருமக்களுக்குச் சூரியகாந்திப் பயிரில் தனி விருப்பம் ஏற்பட்டுள்ளது!

சூரியகாந்தி பயிரிட விரும்பிய உழவர் பெரு மக்கள் நல்ல விதையைத் தேர்ந்து எடுத்து, விதைத்து, காலத்தில் தேவைக்கேற்ப உரமிட்டு, மற்ற செய் நேர்த்தி முறைகளையெல்லாம் தவறாதுமேற்கொள்கின்றார்கள். செடிகள் திடமாக வளர்ந்து பெரிய பூக்களை தாங்கி நிற்கின்றன. தூரத்திலிருந்து பயிரைக் காணும் பொழுது மங்களகரமான மஞ்சள் நிறம்; கண்களுக்கு குளிர்ச்சி! அதைப் பார்க்கும் அனைவர் மனதிலும் ஒரு மகிழ்ச்சி! நல்ல மகசூலை ஆவலுடனும், நம்பிக்கையுடனும் உழவர் பெருமக்கள் எதிர் பார்க்கிறார்கள்!

ஆனால், ஏனோ ஒரு சில சமயங்களில் இம் மகிழ்ச்சியும், நம்பிக்கையும் கடைசி வரை நீடிக்காமல் போய்விடுகின்றன! பூக்கள் முதிர்ந்து விதைப் பிடிக்கும் காலத்தில், உழவர் பெரு மக்களுக்கு அதிர்ச்சி ஏற்படும் வகையில் பல பூக்களில் விதைகள் சரிவர உண்டாகாமல் போய்விடுகின்றன. இந்நிலையில் சூரியகாந்திப் பயிரைப் பற்றி எடுத்துச் சொல்லி, சூரியகாந்தி பயிரிட வைத்த விரிவாக்கப் பணியாளர்கள் மேல் பழி போடவும் எண்ணி விடுகிறார்கள். இங்குதான் உழவர் பெரு மக்கள் சிறிது சிந்திக்க வேண்டும்!

சரிவர மணி பிடிக்காமல் போனது பூக்களில் மகரந்தச் சேர்க்கை சரிவர ஏற்படாமல் போனதன் காரணமாக இருக்கலாம்! சூரியகாந்தியில் ஏற்படும் மகரந்தச் சேர்க்கையை அயல் மகரந்தச் சேர்க்கை என்கிறோம். ஒரு பூவில் உள்ள மகரந்தத் தூள் மற்றொரு பூவின் சூல் முடியை அடைய வேண்டும். இந்த அயல் மகரந்த சேர்க்கை நிகழ்வதற்கு இயற்கையில் உதவுவது பூச்சியினங்கள். அவ்வித பூச்சியினங்களில், சூரியகாந்திப் பயிரைப் பொறுத்த வரையில், தேனீக்கள் முக்கியமானவைகளாகும். தேனீக்கள், சூரியகாந்திப் பூக்களில் மதுவை விரும்பி மொய்க்கும் பொழுது, ஒரு பூவில் உள்ள மகரந்தத் தூள், தேனீக்களின் கால்களிலும், இறக்கைகளிலும் ஒட்டிக் கொண்டு சென்று, அடுத்த பூவின் சூல் முடியை அடைந்துவிடுகின்றன. விதை உண்டாகும் முன்பு இந்த அயல்மகரந்தச்சேர்க்கை ஏற்படவேண்டும். சூரியகாந்தி பூவில் அயல் மகரந்தச் சேர்க்கை நடைபெறா விட்டால் விதைகளும் நிச்சயம் உண்டாகாது. எவ்வளவுக் கெவ்வளவு

# உள்ளதையே கூறுகிறோம்: நிரூபணமான உழைப்புத்திறம் என்றால் இதுவே நிரூபணமான உழைப்புத் திறம்—நம் நாட்டிலும், 45 நாடுகளிலும் நிரூபணம்

# ஜெனித் தரம் என்றால் அதுதான்!



## 45 நாடுகளும் தவறுசெய்திருக்க முடியாது

இந்தியத் தரநிர்ணய விதிகளால் வரையறுக்கப்பட்ட கண்டிப்பான இலக்கணங்களுக்கு மட்டுமின்றி, பிரிட்டிஷ் மற்றும் சர்வதேசத் தர விதிப்புகளுக்கும் ஈடு நிற்பவை ஜெனித் எஃகுக் குழாய்கள். எனவே, அவை உலகிலேயே அதிநவீனமான சில நாடுகளுக்கு ஏற்றுமதியாகிவருவதில் அதிசயமென்ன!

விவசாயம், தொழில்துறை, கட்டுமானத் தொழில் ஆகியவற்றின் தேவை தீர்க்கப் பலவிதமான எஃகுக் குழாய்களை உடையது ஜெனித். குழாய்களை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வதிலே முன்னோடியாக விளங்கியதற்காக அரசாங்கத்திடமிருந்து நற்சான்றுப் பத்திரம் பெற்றுள்ள ஜெனித் இன்று, அமெரிக்கா, ஐக்கிய இங்கிலாந்து உள்பட 45 நாடுகளிலே, உழைப்புத்திறனை நிரூபித்த பெருமையைப் பெற்றுள்ளது.

**ஜெனித் ஸ்டீல் பைப்ஸ் லிமிடெட்,**
195, சர்ச்கேட் ரிக்ளமேஷன், பம்பாய்-400 020
போன்: 294445. தந்தி: ZENPIPES. டெலெக்ஸ் 011-2458




everest/864a/ZSP/tm

தேனீக்கள் விரைந்து செயல் படுகின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு விதைப் பிடிக்கும்!

சூரிய காந்தி பூத்துக் குலுங்கி, முதிர்ந்து வரும் காலத்தில் அதிகக் காற்றும், மழையும் இருக்கக் கூடாது! மழையாலும், காற்ருலும் தேனீக்களின் இயக்கம் பெரியும் பாதிக்கப்படும். ஆகவே பருவநிலையும் முக்கியமாக சூரியகாந்திக்குச் சாதகமாக இருக்க வேண்டும். பருவநிலே நமது ஆதிக்கத்தில் இல்லே! ஆனல் நாம் நினேத்தால்தேனீப் பெட்டிகளே அதிக எண்ணிக் கையில் சூரியகாந்தி வயலில் வைத்துப் பராமரிக்கலாம். சூரியகாந்திப் பயிரிடும் ஒவ்வொரு உழவர் பெரு மகனும் தேனீ வளர்ப்பதை-உரமிடுவது பயிர்ப் பாதுகாப்புச் செய்வது போன்ற-ஒரு சாகுபடி முறையாகக் கருத வேண்டும்.

சாதாரணமாக ஒரு ஏக்கர் சூரியகாந்திப் பயிரில் ஒரு தேனீப் பெட்டி வைக்கலாம். அதன் மூலம் நமக்கு 10 முதல் 15 கிலோ தேன் கிடைக்கும். அதன் மூலம் ரூபாய் 120 முதல் 180 வரை இலாபம் கிடைக்கும். தேனீயை நம்பி வளரும் சூரியகாந்தியும் ஏக்கருக்கு ரூபாய் 900 இலாபம் தரும்!

ரஷ்ய நாட்டிற்குச் சூரிய காந்தி ஒரு முக்கிய எண்ணெய் வித்துப் பயிர். அந் நாட்டு உழவர் பெரு மக்கள் எல்லாம் சூரிய காந்திப் பயிருடன் இணேத்து தேனீக்கள் வளர்ப்பதையும் தொழிலாகக் கொண்டிருப்பதாக நாம் கேள்விப்படுகிருேம். ஆகவே நாமும் தேனீக்களே வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டிய நிலேயிலிருக்கிருேம். தேனீக்கள் சூரியகாந்தி மகசூலே அதிகரிப்பதுடன், தேன் மூலம் உபரி இலாபத்தையும் தருகிறது.

தேனீக்கள் சூரியகாந்தியை நாடுகின்றன! தேனீயை நம்பி சூரியகாந்தி இருக்கிறது! நாம் தேனீயையும், சூரியகாந்தியையும் ஒரு சேர நாடி பயன் மிகுதி அடைவோமாக!

## 2. நெற்பயிரில் நூற்புழு !

தமிழகத்தில் நெற்பயிருக்குச் சேதம் விளேவிக்கவல்ல நூற் புழு ஒன்று சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இதற்கு நெல் வெண்ணுனி இலேப்புழு,



(நெல் நுனி இலேப் புழு) என்று பெயர். இந் நூற் புழு விதைகளின் மூலமாகப் பரவும் தன்மை கொண்டது. நெல் மணிகளில் உமியின் உட்புறத்தில் இந் நூற் புழு தங்கியிருந்து, விதைத்த பின் வெளி வந்து பயிரைத் தாக்குகிறது.

நெல் மணியிலுள்ள நூற் புழு சுமார் இரண்டாண்டு காலம் உயிருடன் வாழும் சக்தி வாய்ந்தது. ஒரு நெல் மணியில் சுமார் 10—15 நூற் புழுக்களேக் காணலாம். இத்தகைய நெல் மணிகளே விதைத்தவுடன், இப் புழு ஓரிரண்டு நாட்களில் வெளி வந்து புதிதாகத் தோன்றும் பயிர்களின் மேல் ஊர்ந்து சென்று சேதம் விளேவிக்கிறது. நூற் புழுவின் தாக்குதலினல், நாற்று நடப்பட்ட வயல்களில் இளம் பயிர்களினுடைய இலேக்களின் நுனி வெளுத்தும், மஞ்சள் நிறம் அடைந்தும், சுருண்டும்காணப்படும். இத்தகைய பயிர் வளர வளர நூற் புழுவும் மேல் பாகங்களுக்கு ஊர்ந்து சென்று கதிர் தோன்றும் சமயத்தில் நெல், பூக்களில் நுழைந்து, சூலகத்தின் அடிப்பகுதியைப் (அண்ட கோசம்) பாதிக்கின்றது. அவ்வாறு பாதிக்கப்பட்ட நெற் பூக்கள் பதராக மாறி விடுகின்றன!

கோயமுத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலேக் கழகத்தில் இந் நூற் புழுவைப் பற்றிச் சில விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இப் புழு, கதிர்களில் தோன்றுவதால் விளேச்சல் ஓரளவு பாதிக்கப்படுகிறதெனத் தெரிய வருகிறது. தமிழகத்தில் நெற் பயிர் சாகுபடி செய்யப்படும் எல்லா இடங்களிலும், இப்புழு பரவியுள்ளது. 'காவேரி', 'கருணு', 'ஐ. ஆர். 22', 'ஜெயா', 'கோ. 29', 'டி.கே. எம். 6', 'ஏ.டீ.டி. 27', போன்ற நெல் ரகங்களில் இதனல் கணிசமான அளவிற்கு மகசூல் குறைந்து விடுகின்றது. நூற் புழுக்களால் இந்த ரகங்களில் எக்டேருக்கு 120 முதல் 768 கிலோ வரை நெல் விளேச்சல் பாதிக்கப்படுகின்றது எனத் தெரிய வருகிறது.

விதைகளே 50 முதல் 55 டிகிரி சென்டிகிரேடு வெப்பம் உள்ள நீரில் 10 முதல் 15 நிமிடம் வரை வைத்திருந்தால் இந் நூற் புழு இறந்துவிடும். எனினும் வயல்களில் அறுவடைக்கு முன்பு, கதிர்களில் இருந்து நிலத்தில் விழுந்த பதர்களிலிருந்தும், அறுவடைக்குப் பின்பு கட்டைப் பயிர்களே மறுபடியும் நிலத்தில் உழுதுவிடுவதாலும், வயல்களில் காணப்படும் ஒரு வகைப் புல்லில் இந் நூற் புழு காணப்படுவதாலும், அதனல் ஏற்படும் சேதத்தை ஓரளவு தவிர்க்க நெற் பயிரில் 'பாலிடால்' மருந்தை நாற்று நட்ட பின்பு, நான்கு முறை, 15 நாட்களுக்கு ஒரு தரம் தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளித்து நூற் புழுவினல் ஏற்படும் நட்டத்தைத் தவிர்க்கலாம்.

* * *

## 3. வெண்டையின் பூச்சிகளேத் தடுக்கப் புதிய பூச்சிக் கொல்லிகள் !

முக்கிய காய்கறிப் பயிரான வெண்டையைத் தத்துப் பூச்சிகள், அசுவணி, காய்ப் புழு ஆகியவை தாக்குகின்றன. இந்தப் பூச்சிகளேத் தடுக்க இது வரை 'என்டிரின்' 0.02 சதம் அல்லது 'ரோகார்', 'செவின்' 0.1 சதம் முதலிய பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

வெண்டையை அழிக்கும் பூச்சிகளேத் தடுக்கத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலேக் கழகத்தின் பூச்சியியல் துறையில் ஒரு ஆராய்ச்சி மேற்கொள்ளப் பட்டது. ஆறு பூச்சிக் கொல்லிகள் இந்த ஆராய்ச்சியில் பயன்படுத்தப்பட்டன. இந்த மருந்துகள் விதைத்த 21-ஆம் நாள் முதல், 15 நாட்களுக்கொருமுறை வீதம், மொத்தம் மூன்று முறைகள் சிறு பாத்திகளில் தெளிக்கப்பட்டன. மருந்து தெளிப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பும், மருந்து தெளித்து 72 மணி நேரத்திற்கு பின்பும் அசுவணி,

# ‘சேமிப்பு’

## சிறந்த பழக்கம்!
## திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

*சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.*

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறு சேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

*இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.*

**இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.**

தத்துப்பூச்சி ஆகிய பூச்சிகளின் எண்ணிக்கை கணக்கெடுக்கப் பட்டன. ஒவ்வொரு அறுவடையின் போதும் ஒவ்வொரு பாத்தியிலும் மொத்தம் காய்த்த காய்கள், காய்ப்புழுவால் தாக்கப்பட்ட காய்கள், மொத்த மகசூல் ஆகியவைகளை ஆராயப்பட்டது. விதைத்த நாற்பத்தைந்தாவது நாள், செடியின் உயரம், ஒவ்வொரு செடியிலும் உள்ள இலைகளின் எண்ணிக்கை ஆகியவற்றை கணக்கிட்டதில் 'செவிமால்' 0.1 சதம் தெளித்த செடிகளில் அசுவணி, தத்துப்பூச்சி ஆகியவைகளின் எண்ணிக்கை, மருந்து அடித்த 72 மணி நேரத்தில் வெகுவாகக் குறைந்து காணப்பட்டது. செவிமாலை அடுத்து 'தயோடான்' (எண்டோசல்பான்) 0.07 சதம் மேற்கூறிய பூச்சிகளின் எண்ணிக்கையை வெகுவாகக் கட்டுப்படுத்தியுள்ளது. 'செவிமால்' 0.1 சதம் மற்றும் என்டோசல்பான் 0.07 சதம் ஆகியவை தெளிக்கப்பட்ட செடிகளில் காய்ப்புழுவால் தாக்கப்பட்ட காய்கள் மிகவும் குறைவாக இருந்தது. மேற்கூறிய மருந்துகளைத் தெளித்த செடிகளில் இருந்து மகசூலும் அதிகமாகக் கிடைத்தது. அதோடு மட்டுமல்லாமல், மேற்கண்ட இரு பூச்சிக் கொல்லிகளும் செடியின் வளர்ச்சியையும் அதிகரித்துள்ளது.

எனவே, வெண்டையைத் தாக்கும் முக்கிய பூச்சிகளைத் தடுக்க 'செவிமால்' 0.1 சதம் அல்லது 'என்டோசல்பான்' 0.07 சதம் ஆகியவற்றில் ஏதாவது ஒரு பூச்சிக் கொல்லியை, விதைத்த 21-ம் நாளில் இருந்து பதினைந்து நாட்களுக்கொருமுறை வீதம் மொத்தம் மூன்றுமுறை தெளிக்க வேண்டும். மருந்து தெளிப்பதற்கு முன்னால் செடியிலுள்ள காய்களை அவசியம் அறுவடை செய்துவிட வேண்டும்.



வெண்டையைத் தாக்கும் பூச்சிகளைத் தடுப்பதிலும், செடியின் வளர்ச்சியிலும் பல்வேறு பூச்சிக் கொல்லிகளின் சக்தி.

| பூச்சிக்கொல்லிகள் | சராசரி காய்ப்புழு (சதவீதம்) | சராசரி மகசூல் பாத்திக்கு (கிலோவில்) | ஒரு செடிக்கு சராசரி இலைகள் | சராசரி உயரம் (செமீ.) |
|---|---|---|---|---|
| பென்தியான் 0.05 சதம் | 10.0 | 8.74 | 11.3 | 54.22 |
| என்டோசல்பான் 0.07 சதம் | 2.9 | 10.89 | 11.6 | 55.68 |
| எக்காலக்ஸ் 0.025 சதம் | 7.5 | 7.80 | 9.9 | 42.40 |
| செவிமால் 0.1 சதம் | 3.6 | 12.17 | 12.0 | 59.97 |
| மாலதியான் 0.1 சதம் | 7.9 | 9.71 | 11.1 | 55.04 |
| கார்பரில் 0.1 சதம் | 5.0 | 8.11 | 8.9 | 47.10 |
| மருந்து தெளிக்காத பாத்தி | 12.8 | 5.81 | 8.7 | 36.55 |



## 4. பூச்சிக் கொல்லி மருந்துகளும் மண்வாழ் நுண்ணுயிர்களும் !

பயிர்கள் அதன் ஆரம்ப வளர்ச்சியின் முதற்கொண்டே பல்வேறு வகையானப் பூச்சிகளால் சுலபமாகத் தாக்கப்படுகின்றன. அதைத் தடுக்க சமீப காலங்களில் மருந்துகளைக் குருணை வடிவில் மண்வழி இடுதல் சிறந்ததொரு முறையாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இடப்பட்ட மருந்துகள் மண்ணில் வெகுநாட்கள் தங்கி, பயிர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கின்றன. இருப்பினும், நிலவழி இட்ட பூச்சிக்கொல்லிகளின் நச்சுத் தன்மை அந்நிலத்தில் வாழும் நன்மை பயக்கும் நுண்ணுயிர்களையும், மற்ற பல்வேறு வகையான நுண்ணுயிர்களையும் எவ்வளவு தூரம் பாதிக்கின்றன என்று அறியப்பட வேண்டியது அவசியமாகும். மேற்படி கருத்தினை மனதிற்கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இயங்கி வரும் பூச்சி இயல் பிரிவில் சில ஆராய்ச்சிகள் சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து நடத்தப்பட்டு வருகின்றன.

'ஆல்டிகார்ப்', 'டைசிஸ்டான்' குருணைகளை வெண்டை செடிகளுக்கு எக்டேருக்கு 0.5 கிலோ உள்ளீட்டுச் செயல்படு பொருள் அளவில் (Active ingredient) இட்டுப் பரிசோதனை நடத்தியதில் பாக்டீரியாக்களின் எண்ணிக்கை அதிகரித்தது. ஆனால், மருந்தின் அளவை 1 கிலோவாக உயர்த்தியதில் பாக்டீரியாக்களின் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டாலும், மருந்து போட்ட 60 நாட்களுக்குப் பிறகு எண்ணிக்கையில் அதிக வேறுபாடு இல்லை. பூஞ்சாளங்களின் வளர்ச்சியிலும் வேறுபாடுகள் காணப்பட்டன. உதாரணமாக 'ஆல்டிகார்ப்' 0.5, 1.0 கிலோ அளவு, பூஞ்சாளங்களை 45 நாள் வரை பெருக்கியது. ஆனால் 'டைசிஸ்டான்' 1 கிலோ அளவு 45-வது நாள் வரை எண்ணிக்கையைக் குறைத்தது. எனினும், அதன் பிறகு எண்ணிக்கையில் அவ்வளவாக வேறுபாடு இல்லை. ஆய்வகத்தில் நடந்தச்சோதனைகளிலும் பல்வேறு பூஞ்சாளங்கள் பலவிதமான வளர்ச்சியை காட்டின. மேற்கூறிய இரண்டு வகைப் பூச்சிக்கொல்லி மருந்து போட்ட வெண்டைச் செடிகளிலும், ஆக்டினோமைசிட்டுகள் பொதுவாக அதிகமாக காணப்பட்டன. ஆக்டினோமைசிட்டுகள் பூஞ்சாளங்களைவிட, 'டைசிஸ்டான்' குருணைகளி

னின்றும் அதிக கரிமப்பொருளை யும், பாஸ்பரஸ் சத்தையும் உட்கொண்டு வளரும் தன்மை யுடையது என்று இங்கு நடந்த ஆராய்ச்சிகளினுல் தெரிய வரு கிறது.

கத்திரிச் செடியில், 'ஆல்டி கார்ப்', 'டைசிஸ்டான்', 'கார்ப் போப்யூரான்' முதலிய மருந் துக் குருணைகளைப் போட்டு ஆராய்ச்சி நடத்தியதிலும், மேற்கூறிய வகைகளில் நுண் ணுயிர்களில் மாறுதல் ஏற்பட் டன.

அதே மாதிரி, நெற்பயிரில் 'கார்போப்யூரான்', 'என்ட் ரின், 'போரேட்' ஆகிய மருந் துக் குருணைகளைப் போட்டு பாக் டீரியா, பூஞ்சாளங்கள் மற்றும் ஆக்டினேமைசிட்டுகளின் எண் ணிக்கையை ஆராய்ந்ததில், அவைகள் சோதனை நடத்திய 15 நாட்களிலும் எண்ணிக்கை யில் மிகவும் குறைந்தே காணப் பட்டன. காற்றிலுள்ள கால கத்தை (நைட்ரஜன்) கிரகிக் கும் தன்மை வாய்ந்த 'அஸி டோபேக்டர்'' என்ற நன்மை பயக்கும் நுண்ணுயிர் பொது வாக பூச்சி கொல்லி மருந்து போட்டவுடன் குறைந்து விடு கிறது.

பூச்சிக்கொல்வி மருந்து ஞல் மற்ற நன்மை பயக் கிருமிகளின் எண்ணிக்கைய அதன் செயல் முறைகளும் வாறு பாதிக்கப்படுகின் என்று அறிய மேலும் நுட்பச் சோதனைகள் ந பெற்று வருகின்றன.

(தொகுப்பு: தகவல் தொப
நிலையம்,
தமிழ்நாடு வேளாண்
பல்கலைக் கழகம்,
கோவை-3.)


அடுத்த இதழ்
தமிழரசு

குறுவை
மாணவாரிச்
சிறப்பிதழ்

1—7—1974 நாளிட்ட 'தமிழரசு' இதழ் குறுவை-மாணுவாரிச் சிறப்பிதழாக வெளி வரு கிறது. குறுவை, மாணுவாரி ஆகிய வகைகளுக்கு ஏற்ற ரகங்கள், அவைகளின் சாகுபடி முறைகள் பற்றிய முழு விவரமும் தரும் தகவல்களைத் தாங்கி வருகிறது.

உழவர் பெருமக்கள் படித்துப் பயன்பெற வேண்டிய அளவில் செய்திகள் உள்ளன.

அத்துடன் ஜூலை 1-ந் தேதியன்று 'தமிழரசு' தொடங்கி நான்கு ஆண்டுகள் முடிவடைந்து, ஐந்தாவது ஆண்டு ஆரம்பமா கிறது. ஆதலால் 'தமிழரசு' பற்றி ஐந்து கவிஞர்கள்

கவியரசு முடியரசன்,
கவிஞர் கா. வேழவேந்தன், எம்.எல்.ஏ.
புலவர் பொன்னிவளவன்,
கவிஞர் கு. மா. பாலசுப்பிரமணியம், எம்.எல்.சி.
கவிஞர் வானம்பாடி

ஆகியோர் மனந் திறந்து மதிப்பிடுகிறார்கள்.

'தமிழரசு' இதழைப் படித்து வருபவர்கள் தங்கள் எண்ணத் துலாக்கோல் மூலம் விளக்கு கிறார்கள்.

சிறப்புக் கட்டுரைகளும் உண்டு!

விலை 50 காசுகள்தான்.


